Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 32 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :261 ஆவணி 01 ஆம் நாள் திங்கட்கிழமை 17 ஓகஸ்ட் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## முன்னாள் போராளிகள் விவரம் திடீரெனத் திரட்டும் இராணுவம்!

யாழ்ப்பாணம், ஓக. 17

யாழ்ப்பாணம் - கீரிமலைப் பகுதியில் நேற்றுக் காலை வீடுகளுக்குச் சென்ற இராணுவத்தினர் வீட்டில் இருந்த அனைவரது விவரங்களையும் சேகரித்து அவற்றைப் பதிவு செய்துள்ளனர். அத்துடன் வீடுகளில் முன்னாள் போராளிகள் யாராவது இருக்கின்றனரா என்ற விவரங்களைத் தெரிவிக்குமாறும் அறிவுறுத்தியுள்ளனர்.

முன்னாள் போராளிகள் என்று யாராவது இருந்தால் உடனடியாகப் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

என்ன காரணத்துக்காக முன்னாள் போராளிகளின் விவராங்கள் சேகரிக்கப்படுகின்றன என்று அந்தப் பகுதி மக்

31 ➤

## சப்பரத்தைக் கைவிட்டு இடபமேறிய நல்லூரரான்



யாழ்ப்பாணம், ஓக. 17

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய 23ஆம் திருவிழாவான நேற்று மாலை வள்ளி, தெய்வானை

31 ➤

## நல்லூர் தேர் இன்று

### அதிகாலை முதல் பி.ப. 2வரை முருகனை தரிசிக்கலாம்

யாழ்ப்பாணம், ஓக. 17

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தசாமி கோவிலின் இரதோற்சவ நன்நாளில், ஆலயச்சூழலில் பக்த அடியார்கள் ஒரே நேரத்தில் பெருந்திரளாகக் கூடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இன்று திங்கட்கிழமை நல்லூர்கந்தசாமி ஆலய மஹோற்சவத்தின் இரதோற்சவ தினமாகும். நாட்டில் ஏற்பட்டிருக்கும் கொரோனாப் பெருந்தொற்று

31 ➤

## ஞானசாரர் அரசியலுக்கு முழுக்கு

கொழும்பு, ஓக. 17

இனி எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடாமல் இருப்பதற்கு பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் முடிவெடுத்துள்ளார். ஆனால், பௌத்த தரிசனத்துக்காக முன்நிற்கும் அரசியல் தலைமைக்கு ஆதரவளிக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, இம்முறை நடந்த பொதுத்தேர்தலில் ஞானசார தேரரும், அத்துரலியே ரத்தன தேரரும் எங்கள் மக்கள் கட்சியின் கீழ் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்டனர். ஆனால், அக்கட்சி தோல்வி அடைந்த போதிலும் தேசியப்பட்டியல் ஆசனம் ஒன்று வழங்கப்பட்டது.

இந்த ஆசனத்தைப் பகிர்வதில் இரு தேரர்கள் இடையே கடும் முரண்பாடு ஏற்பட்ட நிலையில் ஞானசாரதேரர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். (ஒ.5.22)

# மஹிந்த மீதான கூட்டமைப்பின் நம்பிக்கையை வீணடிக்கக் கூடாது

## இரா.சம்பந்தன் வேண்டுகோள்



**யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 17**

**பிரதமர் மஹிந்த ராஜபக்ச எடுக்கின்ற ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு எமது ஆதரவு தொடர்ந்து இருக்கும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். ஒருமித்து இந்தக் கருமத்தை நிறைவேற்றக்கூடிய வகையில் அனைவரும் செயற்பட வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். எனவே, பிரதமர் மஹிந்த ராஜபக்ச வழங்கியுள்ள வாக்குறுதியையும், அவர் மீது நாம் வைத்துள்ள நம்பிக்கையையும் அவர் வீணடிக்கக்கூடாது.**

31 ➤

## சிங்கள தேசியக் கட்சிகளுக்கு மக்கள் ஏன் வாக்களித்தார்கள்?

### இன்னமும் புரியாத புதிராக உள்ளது என்கிறார் சாள்ஸ்

வவுனியா, ஓக. 17

சிங்கள தேசியக் கட்சிகளுக்கு தமிழ் மக்கள் அதிகளவில் வாக்களித்திருக்கின்றார்கள். அது ஏன் என்பதை எம்மால் இன்னமும் ஊகிக்கமுடியவில்லை. எமது கட்டமைப்புக்களை சிதைப்பதற்கு அவர்கள் தயாராகவிருக்கின்ற நிலையில்,

31 ➤

## நாம் சர்வாதிகாரிகள் அல்லர்; எதிரணியினரே அறிவற்றோர்!

### மஹிந்த கருத்து

கொழும்பு, ஓக. 17

நாங்கள் சர்வாதிகாரிகளாக நடந்து கொள்ளவில்லை. எங்களை சர்வாதிகாரிகள் என்று விமர்சிக்கும் எதிர்க்கட்சியினர் உண்மையில் அறிவற்றவர்களே. இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில வார செய்திப் பத்திரிகையொன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலி

31 ➤

## பேருந்து மீது தாக்குதல்

நீர்வேலிச் சந்திக்கு அண்மித்த பகுதியில் தனியார் சொகுசு பேருந்து மீது நேற்று இரவு 7.30 மணியளவில் கல் வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பேருந்துக்கு எதிர் திசையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே கல் வீச்சை மேற்கொண்டனரெனத் தெரிவிக்கப்படுகின்றது. தாக்குதல் காரணமாக சாரதியின் கண்ணில் காயம் ஏற்பட்டுள்ளது. பேருந்தின் முன்பகுதி கண்ணாடியும் சேதமடைந்தது. (ஒ,5,26)




## ராஜபக்சக்கள் சொல்வார்கள் ஆனால் செயற்படுத்தார்கள்

### சஜித் சாடல்




கொழும்பு, ஓக. 17

வாக்குறுதிகளை அள்ளி வழங்குவதில் மஹிந்த ராஜபக்ச உள்ளிட்ட ராஜபக்சக்கள் வல்லவர்கள். ஆனால், அவற்றைச் செயற்படுத்துவதில் பூஜ்ஜிய நிலையில்தான் எப்போதும் உள்ளார்கள். அவர்களின் வாக்குறுதிகள் அனைத்தும் பொய்யாகிப்போன வரலாறே உண்டு. இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரு

31 ➤

# இந்தியாவின் கரிசனையின்றி தீர்வு சாத்தியமில்லை

## கூறுகின்றார் சிறீகாந்தா



**யாழ்ப்பாணம், ஓக. 17**

**இந்தியாவைப் புறந்தள்ளி இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு நீதியான தீர்வை வென்றெடுக்க இயலாது என்ற யதார்த்தத்தை நம் மக்கள் அனைவரும் மனதில் பதித்து செயற்படவேண்டும். யார் விரும்பினால் என்ன? விரும்பாவிட்டால் என்ன? இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியா தான் வல்லரசு! இதனைக் கடந்த காலத்தில் சில பல தடவைகள் நாம் மறந்து விட்டிருக்கின்றோம். மறக்கப்படக்கூடாத யதார்த்தம் அது. இனிமேல் ஒருபோதும் நாம் அந்தத் தவறைச் செய்யக் கூடாது.**

இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி ந.சிறீகாந்தா தெரிவித்தார்.

அந்தக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்று இடம் பெற்றது. அதில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்ததாகக் குறிப்பிட்டு, அவரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புதிய அரசு காணி பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது என்று பகிரங்கமாகக் கூறியிருக்கின்றது. மாகாண சபைகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருக்கும் இராஜாங்க அமைச்சரான முன்னாள் கடற்படை அதிகாரி, அதைத் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றார். மாகாண சபைகள் முறை இனப் பிரச்சினைக்கான தீர்வு அல்ல என்பது, ஒன்றிரண்டு ஒத்துழைப்பு கட்சிகள் தவிர, அனைத்து தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடாக இருந்து வந்துள்ளது. அது ஒரு இடைக்கால ஏற்பாடாகவே இக் கட்சிகளால் கருதப்பட்டது. மாகாண சபைகள் அமைக்கப்பட்ட பிறகு, இலங்கை அரச தரப்பில் காலத்துக்கு காலம் முன்னெடுக்கப்பட்ட அரசியல் தீர்வு நடவடிக்கைகள் அனைத்தும் இந்த அடிப்படையிலேயே அமைந்திருந்தன.

### 13 பிளஸ்

நடந்து முடிந்த போரின்போது, தீர்க்கமான ஒரு கட்டத்தில் இந்தியாவில் வைத்து, அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வு வழங்கத் தயார் என்று கூறியிருந்தார். அந்த நிலைப்பாடுதான் 13 பிளஸ் என்று அழைக்கப்பட்டது. இந்திய அரசுக்கும் அந்த நிலைப்பாடு சொல்லப்பட்டது. இப்போது 13 மைனஸ் என்ற நிலைப்பாடு புதிய அரசால் திட்டவட்டமாக முன்வைக் கப்பட்டுள்ளது.

புதிய அரசமைப்பைக் கொண்டுவரப் போவதாக கூறும் ஜனாதிபதியும் அவரின் அரசும் இனப்பிரச்சனைக்குத் தீர்வாக எதை முன்வைக்கப் போகின்றார்கள் என்பது சகலருக்கும் இப்போதாவது புரியவேண்டும்.

புதிய அரசமைப்பை உருவாக்கவும், அதில் தமிழ் மக்களுக்கு அரசியல் நீதி கிடைக்கும் விதத்தில் காத்திரமான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் அரசிடம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருக்கிறது. ஆனால் சிங்கள பௌத்த பேரினவாத நிகழ்ச்சி நிரலுடன் செயற்படும் ஆளும் தரப்பு இந்தச் சந்தர்ப்பத்தை ஒரு கணமேனும் கவனத்தில் எடுக்கப்போவதில்லை. இதையே அவர்களின் பேச்சுக்களும் நடவடிக்கைகளும் தினமும் நிரூபிக்கின்றன.

### என்ன செய்யப் போகின்றன?

இந்நிலையில் அரசியல் நீதி கோரி நிற்கும் தமிழ் இனத்தின் சார்பில் செயலாற்றுவதாகக் கூறும் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன? கடந்த காலங்களில் 16 ஆசனங்களைக் கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று 10 ஆசனங்களுடன் பரிதாபமாக நிற்கின்றது. 20 ஆசனங்களைப் பிடிப்போம் என்று அதன் தலைவர் திரும்பத் திரும்பக் கூறியபோதும், 'நாங்கள் தெரிவித்தது' இப்போது கசப்பான உண்மையாகி விட்டிருக்கின்றது.

பதினொரு வருடங்களாக கட்சியைத் தொடர்ந்து நடாத்தி வந்த நிலையில், முதல் தடவையாக யாழ்ப்பாண மாவட்டத்தில் பெற்ற ஒரு ஆசனமும், கூடவே மயிரிழையில் கிடைத்த மற்றுமொரு தேசியப்பட்டியல் ஆசனமும் சேர்த்து இரண்டு ஆசனங்களுடன் நாடாளுமன்றம் செல்லும் இளைய தலைவர், ஓர் பெருந்தலைவர் பாணியில், நீட்டப்படும் நேசக்கரங்களை எகத்தாளமாக தொடர்ந்து தட்டிவிட்டுக் கொண்டிருக்கின்றார். அதேவேளையில் 10 ஆசனங்களோடு மட்டம் தட்டப்பட்டிருக்கும் கூட்டமைப்பின் பெரிய கட்சியான தமிழ் அரசுக் கட்சிக்குள், யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில், விருப்பு வாக்கு எண்ணிக்கையில் நிகழ்த்தப்பட்ட முறைகேடுகளும் மோசடிகளும், வாக்கு எண்ணும் வளாகத்தில் தமிழ் அரசு பிரமுகருக்கு பாதுகாப்பு வழங்கி வரும் சிறிலங்கா விசேட அதிரடிப்படை ஆகாயத்தை நோக்கி அதிர்வேட்டுக்களை தீர்க்கவும், கண்ணில்பட்ட ஒரு சிலரைக் குறிவைத்துத் தாக்கவும் வழிவகுத்தன என்பது, தமிழ் இலங்கையின் தேர்தல் வரலாற்றில் காணப்பட்டிருக்காத சோகச் சம்பவங்கள் ஆகும். அது போதாது என்று தேசியப்பட்டியல் நியமன விடயத்தில் இரண்டொரு நபர்களின் சர்வாதிகார அடாவடிகளை கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் இனியாவது அடக்கி ஒடுக்கத் துணிந்து நிற்குமா? என்ற கேள்விக்கு இதுவரையில் திட்டவட்டமான பதில் கிடைக்கவில்லை.

### பொதுக் கொள்கை

இந்த நிலைமையில் தமிழ்த் தேசிய சக்திகள் என்று அடையாளமிடப்பட்டிருக்கும் மூன்று தமிழ் அரசியல் அணிகளும் ஓர் கூட்டு அணியாக ஒன்று சேர முடியாவிட்டாலும், பொதுக்கொள்கை ஒன்றின் அடிப்படையிலான ஒரு செயல் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டிய அவசியமும் அவசரமும் உணரப்படாவிட்டால், தமிழ்த் தேசிய கட்சிகளுக்கிடையே ஆகக்குறைந்த அரசியல் ஒற்றுமை என்பது கூட வெறும் கனவாகவே தொடர்ந்து இருக்கும். இன்று தேவைப்படுவது ஓர் புதிய அரசியல் கலாசாரம். தேர்தல் காலத்து பரஸ்பர கண்டனப் பரிமாற்றங்களையும் கசப்பான விமர்சனங்களையும் கடந்த காலத்தோடு விட்டுவிட்டு, ஓர் ஆத்ம பரிசோதனையை தமிழ்த் தேசியம் சார்ந்த ஒவ்வொரு கட்சியும், அவற்றின் தலைமைத்துவத்தை அலங்கரிப்பவர்களும் உடனடியாக நேர்மையோடு செய்து நிதானமாக முடிவுகளை விரைவாக எடுத்தாக வேண்டும்.

### இந்தியாவின் ஆதரவு

இலங்கைத் தமிழர்கள் ஒன்றும் அரசியல் அநாதைகள் அல்ல! எங்கள் பிரச்சனையில் பல வெளிநாடுகள் பல்வேறு காரணங்களுக்காக தொடர்ந்து ஆர்வமும் அக்கறையும் கொண்டுள்ளன. அயல் நாடான இந்தியாவின் சார்பில் அதன் அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தியும், அவர் தலைமையிலான அரசும் அளித்த உறுதி மொழியினை நம்பித்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட, அனைத்து தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட அமைப்புக்களும் 1987ஆவணி முதல்வாரத்தில் தங்கள் ஆயுதங்களைக் கையளித்தன.

விடுதலைப் புலிகள் இயக்கம் பின்னர் போராட்டப் பாதைக்கு திரும்பிவிட்டாலும்கூட, ஏனைய அமைப்புக்கள் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் தொடர்ந்தும் இணைந்தே வந்திருந்தன. ஆனால் இப்போது நாம் சந்திப்பது என்ன? நாம் எல்லோரும் ஏற்றுக்கொண்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட மாகாண சபைகள் அமைப்புமுறை கூட உள்ளிருந்தே உடைக்கப்படுகின்றது. முன்னாள் போராட்ட இயக்கங்களாக இருந்து அரசியல் கட்சிகளாக மாறியுள்ள அமைப்புக்களின் தலைவர்கள் இந்த விடயத்தில் என்ன செய்யப்போகின்றார்கள்?

இந்திய - இலங்கை ஒப்பந்தம் இரண்டு நாடுகளுக்கிடையில் செய்யப்பட்ட ஓர் ஒப்பந்தம். அதன் கீழ் முப்பது வருடங்களுக்கு முன்னரே மாகாணங்களுக்கு தரப்பட்டிருக்க வேண்டிய காணி பொலிஸ் அதிகாரங்களைத் தரமறுத்தது, போரைச் சாட்டாக வைத்தே காலத்தை இழுத்தடித்தது, இப்போது போர் முடிந்து 11 வருடங்கள் கழிந்த நிலையில் கைவிரிப்பது என்பன எல்லாமே, சிங்களத் தலைமைகளை ஒரு செம்புச் சல்லிக்குக் கூட தமிழினம் நம்ப முடியுமா! என்ற கேள்வியைத் தான் கொண்டுவந்திருக்கின்றது.

### நம்பிமோசம் போனவர்களா?

இலங்கை அரசுநயவஞ்சகத்தனமாகச் செயற்படுவதை தமிழ்த் தரப்பு கைகட்டிப் பார்த்திருக்க முடியாது. இச் சூழ்நிலையில் இந்திய அரசு என்ன செய்யப்போகின்றது என்ற கேள்வியை நாம் அதனிடம் கேட்டாக வேண்டும். இந்தியாவை நம்பி மோசம் போனவர்களாக இலங்கைத் தமிழர்கள் இருக்கக்கூடாது. இருக்கவும் முடியாது. இந்திய நாட்டில் எட்டுகோடி தமிழர்கள் வாழ்கின்றார்கள் இலங்கையில் சிங்களவர்களின் சனத் தொகையை, விட நான்கு மடங்கு எண்ணிக்கை! அத்துடன் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் பெரும்பான்மையினர் பின்பற்றும் அதே இந்து மதத்தைத் தான் நூறு கோடிக்கு மேற்பட்ட இந்தியர்கள் தமது மதமாகக் கொண்டுள்ளனர். எனவே நாம் நம்பிக்கையை இழக்க வேண்டியதில்லை.

சிங்கள பேரினவாதிகள் ஆற அமர, உட்கார்ந்து அரசமைப்பை உருவாக்கி இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ன என்பதைச் சொல்லும் வரை நாம் காத்திருக்க முடியாது. 13ஆவது திருத்தத்தை உடனடியாகவும் முழுமையாகவும் நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசை தமிழர் தரப்பு ஒரே குரலில் கோர வேண்டும். ஒருங்கிணைந்த செயற்றிதிட்டம் ஒன்றுக்கான ஓர் உற்சாக முன்னோடியாக இது நிச்சயம் அமையும்.

பதின்மூன்றாவது திருத்தம் என்பது இந்தியாவின் சிருஷ்டி. அது சிதைக்கப்படுவதைத் தடுப்பது இந்தியாவின் பொறுப்பு. அதை உரத்துச் சொல்ல நம்மில் எவரும் தயங்கக்கூடாது. பூகோள அரசியலின் தாற்பரியங்களைப் புரிந்துகொண்டு முறையாகத் தமிழர் தரப்பு செயற்படுமானால் எமது இலட்சியத்தை நாம் அடைந்தே தீருவோம். இலங்கைத் தீவில் எமது மரபு வழித்தாயகத்தில் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் ஓர் சுயாட்சி அரசினை நிறுவிடும் எமது கனவும் நிச்சயம் நனவாகும், என்றுள்ளது.

(ஓ,5,26)

# சுமந்திரனின் கருத்துக்களால் மக்களுக்கு கடும் கோபம்!!!

## பின்னடைவுக்கான காரணங்களை பட்டியலிட்டது மாவட்டக் குழு

**மட்டக்களப்பு, ஓக. 17**

**பெண் வேட்பாளர் விடயத்தில் சுமந்திரன் நடந்து கொண்டது, கருத்துத் தெரிவித்தது ஆகியவையும் தேர்தலில் பின்னடைவை ஏற்படுத்தியது. இறுதியில் மட்டக்களப்பில் பெண் வேட்பாளர் இல்லாமல் போக, அவருக்கு ஒரு வாக்குத் திட்டத்தை அரச கட்சி ஆதரவாளர்கள் முன்னெடுத்தனர். சுமந்திரன் தெரிவிக்கும் கருத்துக்கள் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்துகின்றது. குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பில் அவர் வெளியிட்ட கருத்துக்கள் மக்களை கோபமடையச் செய்தது. இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டக் குழுக் கூட்டம் கட்சியின் செயலர் கி.துரைராஜசிங்கம் தலைமையில் நேற்று இடம்பெற்றது. மதிய போசனத்துடன், சுமார் 6 மணித்தியாலத்துக்கு மேலாக கூட்டம் நீடித்தது. மாவட்டக் குழுவில் சுமார் 75 பேர் கலந்து கொண்டனர். கடந்த பொதுத் தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவு குறித்து ஆராயப்பட்டது. ஒவ்வொரு உறுப்பினரும் தமது கருத்தைத் தெரிவித்தனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீநேசன் நேரடியாகவே கட்சியின் செயலரின் தம்பி தங்கவேலு பற்றி குற்றம் சாட்டினார்.

வடக்கு மற்றும் கிழக்கு தலைமைகள் தமக்கு விருப்பமான முடிவையும், வேட்பாளர்களையும் நியமிப்பதை நிறுத்த வேண்டும். யாழ்ப்பாணத்திலிருந்து வந்து வேட்பாளர்களை நியமித்து விட்டுச் செல்லவிட்டால், மாகாண சபையிலும் மண் கௌவுவோம் என்று கூட்டத்தில் கலந்துகொண்ட பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

வாகரை பிரதேசசபை தவிசாளர் கருத்துத் தெரிவித்தபோது, வடக்கில் வெற்றி பெற்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய கட்சிகள் முள்ளி வாய்க்காலில் பதவிப்பிரமாணம் செய்தார்கள். அது, அவர்கள் தமிழ் தேசியத்தின் பால் தொடர்ந்து பற்றுறுதியுடன் செயற்படுவார்கள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் 10 நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாவீரர் துயிலும் இல்லம் ஒன்றில் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

**சுமந்திரனினால் கோபம்**

மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன் கருத்துத் தெரிவித்தபோது, தான் அம்பாறையின் பல பகுதிகளுக்கும் சென்று மக்களைச் சந்தித்தபோது, இம்முறை உங்களுக்கு ஒரு இடைவேளை தரப்போகிறோம் எனச் சொன்னதாகவும், கூட்டமைப்பு தனது தவறுகளை திருத்திக்கொண்டு அடுத்த தேர்தலுக்கு வரும்படியும், அடுத்த தேர்தலிலும் தவறுகளைத் திருத்தாமல் வந்தால், நிரந்தரமாகவே உங்களுக்கு விடைதந்து விடுவோம் எனவும் தெரிவித்தாகவும், கல்முனை பிரதேச செயலக விடயத்தில் எம்.ஏ.சுமந்திரனின் நடவடிக்கையால் மக்கள் கோபத்தில் உள்ளார்கள் எனவும் சுட்டிக்காட்டினார். கணக்காளர் நியமிக்கப்படுவார் என்று ரணில் சொன்னதாக ஒரு பொய் வாக்குறுதி தந்து தம்மை ஏமாற்றியதாக அந்த மக்கள் கருதுகிறார்கள் என்று குறிப்பிட்டார்.

ரணில் அரசுக்கு முட்டுக்கொடுத்தது பற்றிய விமர்சனம் வெளியில் வைக்கப்பட்டபோதும், அதற்குப் பதிலளிக்காமல் விட்டது தவறு என்றார் ஒருவர்.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தோல்விக்கு என்ன காரணம் என்பதை ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்படவில்லை. அந்த அறிக்கையில் என்ன சொல்லப்பட்டுள்ளது? அந்த அறிக்கையின்படி எதையும் உருப்படியாகச் செய்யாமல், இப்பொழுது தேர்தல் தோல்வி பற்றி ஆராய எதற்கு கூட்டம் போடுகிறீர்கள். இந்தக் கூட்டங்களால் ஒரு பயனுமில்லை. வந்து பொழுதுபோக்காகக் கதைத்து விட்டு, சாப்பிட்டு விட்டுச் செல்வோம். அவ்வளவுதான் என்று மாநகர சபை உறுப்பினர் மதன் காரசாரமாகத் தெரிவித்தார்.

அனைத்துக் கருத்துக்களையும் கேட்ட செயலர், எதிர்வரும் 29ஆம் திகதி மத்தியகுழு கூட்டத்தில் இந்தக் கருத்துக்களை முன்வைத்து கலந்துரையாடுவோம். அந்த கூட்டத்தின் பின் அடுத்த கட்ட நடவடிக்கையை ஆராய்வோம் எனத் தெரிவித்து முடித்தார். (ஒ-5)

# தமிழ் மக்களுக்கு தீர்வு நிச்சயம்

## வாசுதேவ ஆரூடம்

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் அரசியல் பிரச்சினைகளுக்கும் ராஜபக்ச அரசு தீர்வு வழங்க வேண்டும். இந்தப் பொறுப்பில் இருந்து அரசு நழுவ முடியாது. அரசு நழுவிச் செல்ல நாமும் விடமாட்டோம். தமிழ்மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் இந்த ஆட்சியில் தீர்வு கிடைக்கும் என்றே நான் நம்புகிறேன். முரண்பாடற்ற விதத்தில் தீர்வு வழங்கப்பட வேண்டும். இவ்வாறு நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரை அடுத்து புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும். அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளும் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் புதிய அரசமைப்பை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. எனவே, கிடைத்துள்ள அந்தச் சந்தர்ப்பத்தை அரசு தவறவிட நாம் இடமளிக்கமாட்டோம்.

நான் அமைச்சர் என்ற வகையில் அரசின் ஆள் கிடையாது. நான் மக்கள் பிரதிநிதி. தமிழ், முஸ்லிம், சிங்களம் என மூவின மக்களும் பொதுத்தேர்தலில் எனக்கு வாக்களித்தார்கள். எனவே, மூவின மக்கள் நலன் தொடர்பான அனைத்து விடயங்களிலும் நான் முக்கிய கவனம் செலுத்துவேன். மூவின மக்களும் இந்த நாட்டில் நிம்மதியாக சுதந்திரமாக ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதே எனது விருப்பம்.

தமிழ் மக்கள் எமது எதிரிகள் அல்லர். தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் சிங்கள மக்களின் சகோதரர்கள். அனைவரும் இந்த நாட்டின் சொந்தக்காரர்கள். எமக்குள் வேற்றுமைகள் இருக்கக் கூடாது, என்றார். (ஒ,5,22)

# தடம்புரண்டது வாகனம் சாரதி காயம்


வவுனியா, ஓக.17

வவுனியா கனகராயன் குளம் பகுதியில் கன்ரர் ரக வாகனம் விபத்துக்குள்ளானதில் சாரதி காயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற கன்ரர் வாகனம் கனகராயன் குளம் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது, சாரதியின் தூக்கக் கலக்கத்தில் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் வீதியை விட்டு விலகி தடம்புரண்டு விபத்திற்குள்ளாகியுள்ளதாக தமது முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்தில் வாகனத்தின் சாரதி காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ,5,110)





# முகக்கவசம் கட்டாயம்

கொழும்பு, ஓக.17

நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்ளும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்படும் சுகாதார நடைமுறை வழிகாட்டல்களுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஏப்ரல்-21 தாக்குதல் குறித்து 97 முறை எச்சரிக்கைகள்;

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு



**கொழும்பு, ஒக.17**

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னர் பாதுகாப்பு அமைப்புகளுக்கு 97 தடவைகள் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தன என்று பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதுகாப்பு முகவர்களால் உயிர்த்த ஞாயிறு தாக்கு தல்கள் குறித்து 97 முறை முற்கூட்டிய எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்த போதிலும், பொறுப்பானவர்கள் அவற்றின் தீவிரத்தை உணரவில்லை. இதன் காரணமாகவே பலர் காயமடைந்தனர். அத்துடன் பலரது உயிர்கள் காவுகொள்ளப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றன. தேசிய பாதுகாப்பும், நாட்டின் வளர்ச்சிக்கு மிக முக்கியமானது. எனவே அவற்றைப் பாதுகாக்காமல் ஒரு நாட்டை முன்னேற்றவும் அபிவிருத்தி செய்யவும் இயலாது. ஜனாதிபதியின் தேர்தல் அறிக்கையின்படி நாட்டின் பாதுகாப்பை நோக்கிய பார்வையில் தேசிய பாதுகாப்பை நிலைநிறுத்துவதே எமது நோக்கமாகும் - என்றார். (ரி2)

## தங்க விலையில் சரிவு!

கொழும்பு,ஒக.17

கடந்த 9 வாரங்களாக உலக சந்தையில் அதிகரித்துச் சென்ற தங்கத்தின் விலை சற்று குறைந்துள்ளது.

ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை கடந்த வாரம் 4.45 சதவீதம் அல்லது சுமார் 90 டொலர் வரை குறைந்து வார இறுதியில் 1,950 டொலராக பதி வாகியுள்ளது. இருப்பினும், இது ஒப்பீட்டளவில் அதிக விலையாகக் கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி1)





## ரயில் – பட்டா மோதியதில் சாரதி உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஒக.17

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடா பிரதேசத்தில் ரயிலுடன் மோதுண்டு ஒருவர் நேற்றுமுன்தினம் மாலை உயிரிழந்துள்ளார் என கல்குடா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சந்தன விதானகே தெரிவித்தார். மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த எண்ணெய் ஏற்றும் புகையிரதத்தில் மோதுண்டதிலயே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது என கல்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பில் இருந்து பாசிக்குடா நோக்கி பயணித்த பட்டா ரக வாகனம் தனது வேகக் கட்டுப்பாட்டை இழந்து கல்குடா புகையிரத நிலைத்திற்கு அருகில் உள்ள பாதுகாப்பு கடவையை உடைத்துக் கொண்டு புகையிரதத்தில் மோதுண்டுள்ளது. இந்த விபத்தில் வாகனம் முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன் வாகனத்தின் சாரதியான செபஸ்தியன் அருள்நாதன் (வயது 48) என்பவர் காயங்களுடன் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார். இவ் விபத்து தொடர்பாக கல்குடா பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (ரி1-150)

## இலங்கைத் தமிழும் தமிழரும் ஆய்வரங்கில் இன்று

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் தமிழ்நாடு மதுரை உலகத் தமிழ்ச்சங்கமும் இணைந்து சூம்(Zoom) செயலி வாயிலாக 20 நாள்களுக்கு இலங்கையில் தமிழும் தமிழரும் என்ற பொருளில் இணையவழியில் ஆய்வு மாநாட்டை முன்னெடுத்து வருகின்றன. இதன் பதினாறாவது நாளாகிய இன்று திங்கட்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரை கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சி.ஜெயசங்கர் இலங்கைத் தமிழர் நாட்டார் கலைகள் என்ற பொருளில் ஆய்வுரை ஆற்றவுள்ளார். இணையவழியில் பங்கேற்க விரும்பும் ஆர்வலர்கள் பின்வரும் கடவுச்சொல்லைப் பயன்படுத்திக் கலந்து பயன்பெற முடியும் எனத் தமிழ்ச்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ரி3)

Zoom meeting ID : 477 159 8996

pass word : wts

## முல்லைத்தீவு மாவட்ட விவசாய குழுக்கூட்டம்

முல்லைத்தீவு, ஒக.17

முல்லைத்தீவு மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

விவசாய நடவடிக்கைகள், திட்டங்கள், விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் மாவட்ட செயலக புதிய மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு மாவட்டச் செயலாளர் க.விமலநாதன் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இக் கூட்டத்தில் நீர்ப்பாசனத் திணைக்களம், விவசாய அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை மகாவலி அதிகார சபை, விவசாயம் மற்றும் விவசாய காப்புறுதிச் சபை, கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம், மீன்பிடி மற்றும் கடல் வளங்கள் திணைக்களம், கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம், திகுநெகும திணைக்களம், நிலப் பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களம், வன வள திணைக்களம், வன விலங்கு திணைக்களம், தேசிய மீன் வளர்ப்பு அபிவிருத்தி சபை, நெல் சந்தைப்படுத்தல் சபை, தென்னை வளர்ப்பு சபை, இலங்கை முந்திரிக் கூட்டுத்தாபனம், கைத் தொழில் அபிவிருத்தி திணைக்களம், கைத்தொழில் அபிவிருத்திச் சபை, சிறு கைத்தொழில் திணைக்களம், புள்ளி விபரவியல் திணைக்களம், பனை அபிவிருத்திச் சபை, அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்ப நிறுவனம், மரக்கூட்டுத்தாபனம், விவசாயிகள் சம்மேளனம் ஆகியவற்றின் கடந்த கால திட்டங்கள் அவற்றின் அடைவு மட்டங்கள் மற்றும் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. (ரி3-222)

## கூட்டு ஒப்பந்தக் கைச்சாத்து ; புதிய சிக்கலில்

கொழும்பு,ஒக.17

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்கான கூட்டு ஒப்பந்த பேச்சுவார்த்தையில் ஈடுபடும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் அதிகாரம் தொடர்பில் கருத்து முரண்பாட்டு நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் உத்தியோகபூர்வ பொதுச்செயலாளர் பதவியில் தானே நீடிப்பதாகவும், கூட்டு ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் அதிகாரம் தமக்கே இருப்பதாகவும் ஆர்.யோகராஜன் தெரிவித்தார். இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர் பதவி குறித்து ஏற்பட்டுள்ள பிரச்சினை தொடர்பில் ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். எவ்வா றாயினும், கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடுவதில் தனக்கே அதிகாரம் உள்ளது என பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பில் அதே ஊடகம் அவரிடம் வினவியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். (ரி1)

## ஜனாதிபதியால் அமைச்சுக்களின் திட்டங்களை வழங்க பணிப்புரை

கொழும்பு, ஒக.17

ஜனாதிபதி கோத்தபாயராஜபக் ஷவினால் அமைச்சுகளின் எதிர்வரும் திட்டங்களை உடனடியாக செயற்படுத்துமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.



கட்டுநாயக்க விமான நிலையப் பகுதியில் கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக கட்டுநாயக்க விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ள நிலையிலும் வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வரும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சுகாதார பிரிவுகளின் அனுமதி கிடைத்தவுடன் உடனடியாக கட்டுநாயக்க விமான நிலையத்தை மீண்டும் திறப்பதற்கு தயார் எனவும் அமைச்சர் குறிப் பிட்டுள்ளார். (ரி2)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## புளித்துப் போன தீர்வு

இனப் பிரச்சினைக்குத் தீர்வை வழங்கிய கட்சி என்ற வரலாற்றுப் பெருமை பொதுஜன பெரமுனவுக்கே கிடைக்கும். அதற்கான பணிகளில் இறங்கிவிட்டோம் என்று சொல்லியிருக்கிறார் பிரதமர் மஹிந்த ராஜபக்ச. ஆனால் இந்தக் கூற்றை அவர் எவ்வளவு தூரம் இதயசுத்தியுடன் சொல்லியிருப்பார் என்பது கொஞ்சம் யோசிக்கவேண்டிய விடயமே.

இலங்கையின் எந்தவொரு ஜனாதிபதிக்கோ, பிரதமருக்கோ இல்லாதவகையில் இனப்பிரச்சினைக்கான தீர்வை வழங்கும் சந்தர்ப்பம் மஹிந்தவுக்கு 2009களின் பின்னர் வாய்த்திருந்தது. வழக்கமாக இலங்கையின் ஆட்சியாளர்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண முயன்றாலும் கூட, கல்லைக் கண்டால் நாயைக் காணோம், நாயைக் கண்டால் கல்லைக் காணோம் என்கிற மாதிரி, தீர்வைத் தரக் கூடிய அரசியல் பலமிருந்தாலும் சிங்கள மக்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்க வேண்டியிருக்கும் என்பதால், அந்த எண்ணத்தைக் கிடப்பில் போட்டுவிட்டு இனவாதியாக உருவெடுப்பார்கள். ஆனால் மஹிந்தவுக்கு அந்தச் சிக்கல் இருக்கவில்லை. அவருக்கு அரசியல் பலமும், அவர் என்ன செய்தாலும் அதனை அப்படியே ஏற்றுக்கொள்ளக்கூடிய மக்களாதரவும் அப்போது இருந்தது. புலிகளைப் போரில் தோற்கடித்து, ஒட்டுமொத்த இலங்கையையும் அரசபடைகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்த நவீன துட்டகைமுனுவாக சிங்கள மக்களிடையே மஹிந்த பற்றிய விம்பம் படிந்திருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் மஹிந்த தமிழீழத்தைக் கொடுத்திருந்தால் கூட சிங்கள மக்கள் மத்தியில் இருந்து எந்தவொரு எதிர்ப்பும் ஏற்பட்டிருக்காது. எவராலும் முடிக்கமுடியாத போரை முடித்த மஹிந்த செய்வதை யார்தான் தடுக்க முடியும்? எனவேதான் அவர் எதிரணியைப் பற்றியோ, எதிர்கால அரசியலைப் பற்றியோ மஹிந்த அச்சமில்லாமல், தான் விரும்பும் ஒரு தீர்வை தமிழர்களுக்கு வழங்கியிருக்கலாம். ஆனால் அப்போது மஹிந்த எதுவுமே வழங்காமல் தமிழ் மக்களை இன்னும் அடக்கி ஒடுக்குவதில்தான் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினையை உருவாக்கினார். போர் முடிந்த பின்னர் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த இளைஞர், யுவதிகள் பலர் புலிகள் அமைப்போடு தொடர்புபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் கைதுசெய்யப்பட்டனர். அவர்களில் பலர் காணாமல் ஆக்கப்பட்டோராகவும் மாறினர். படைத்தரப்பால் கையகப்படுத்தப்பட்டிருந்த தமிழ் மக்களின் நிலங்கள், உயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டு, மக்களின் பிரசன்னத்துக்கு தடை விதிக்கப்பட்டது. ஊடகங்கள் இரும்புக்கரம் கொண்டு நசுக்கப்பட்டன. ஊரடங்கு வாழ்வும், சோதனைகளும் தொடர்ந்தன. போர் முடிந்த பின்னும் போர்ச்சூழலுக்குள் வாழவேண்டிய கட்டாயத்துக்குள் தமிழர்கள் தள்ளப்பட்டனர். ஆனால் அப்படியான அச்சவாழ்வை இல்லாதாக்கும் அரசியல் பலமும், சிங்கள மக்களின் பேராதரவும், காலச் சூழமைவும் அப்போது தன்பக்கம் இருந்தபோதும் கூட மஹிந்தவுக்கு தீர்வு தரும் எண்ணமிருக்கவில்லை. அதனாலேயே இன்னமும் முடிவிலியாக இனப் பிரச்சினை நீள்கின்றது.

இப்போது இரண்டாவது சந்தர்ப்பத்தை காலம் மஹிந்தவுக்கு கொடுத்திருக்கிறது. ஆனால் அப்போதே தீர்வைத் தர மனமில்லாதவருக்கு, கடந்த 2015 தேர்தலில் தன்னைத் தோற்கடித்தவர்கள் என்ற வஞ்சம் மனதில் உள்ள நிலையில் இப்போது தர உண்மையாகவே மஹிந்த விரும்பமாட்டார். ஆனாலும் சர்வதேசத்துக்கு கொஞ்சம் 'ஐஸ்' வைக்க, நல்லபிள்ளையாக நடிக்க இப்படியான பொய்களை அடிக்கடி அவிழ்த்து விட வேண்டும் என்பது மஹிந்தருக்கும் தெரியும், தமிழர்களுக்கும் தெரியும். இவ்வளவு காலமும் சொல்லிச் சொல்லிப் புளித்துப் போன வார்த்தைகளை வைத்தே இனியும் ராஜபக்சக்கள் காலத்தைக் கழிக்கப் போகிறார்கள் போலும்.



# 1,600 பில்லியன் ரூபாவை கோரவுள்ளது புதிய அரசு

கொழும்பு, ஓக.17

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசின் கன்னி வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் முன்வைப்பதற்கு முன்னர் ஆயிரத்து 600 பில்லியன் ரூபாவுக்கான இடைக் காலக் கணக்கறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.**

அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தவுடன் நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்சவால் இடைக்கால கணக்கறிக்கை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என ஆளுங்கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிலுவைக்கொடுப்பனவுகளில் ஒருதொகையை செலுத்துவதற்கும், பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்குமான செயல் முறையின் ஆரம்ப கட்டமாகவே இந்த இடைக்கால கணக்கறிக்கை முன்வைக்கப்படவுள்ளது எனக் கூறப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இழுத்தடிக்கப்பட்டு வந்த கட்டுமானங்களுக்கான கொடுப்பனவாக 200 மில்லியன் ரூபாவும், 5 பில்லியன் ரூபா பாடசாலை நிர்மாண நிலுவைக் கொடுப்பனவுகளுக்காகவும் செலுத்தப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இடைக்கால கணக்கறிக்கையின் மூலம் முழுக் கொடுப்பனவுகளையும் செலுத்த முடியாது. இருந்தாலும் மக்கள் மத்தியிலான பணப் புழக்கத்துக்கு இது உதவும் என்று சமுர்த்தி மற்றும் நுண்நிதி ராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார் என ஆங்கில வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் கோத்தாபய ராஜபக்ச வெற்றிபெற்ற பின்னர், புதிய ஆட்சி உருவானது. அந்த அரசால் கடந்த பெப்ரவரி மாதம் 327 பில்லியன் ரூபாவுக்கான இடைக்கால கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும் அதை நிறைவேற்றுவதற்கு எதிர்க்கட்சிகள் இடமளிக்கவில்லை.

இடைக்கால கணக்கறிக்கைமூலம் பெறும் தொகையை அதிகரித்துக்கொள்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது என சுட்டிக் காட்டியே எதிரணி எதிர்ப்பை வெளியிட்டிருந்தது. (எ-44)

# சாவ. ரயில் விபத்தில் இளைஞர் படுகாயம்!

கொடிகாமம், ஓக.17

சாவகச்சேரி, ஐயா கடைச் சந்திக்கு அருகில் ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இந்த விபத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.40 மணியளவில் நடந்துள்ளது. மாத்தறை வடக்கைச் சேர்ந்த எச்.எம். ஜீ விஜயரட்ண (வயது 20) என்ற இளைஞனே படுகாயமடைந்துள்ளார். அவரது ஒரு கால் துண்டிக்கப்பட்டுள்ளது என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு பசளை மூடைகளை மாத்தறையைச் சேர்ந்த தந்தையும், மகனும் கொண்டுவந்துள்ளனர். சாவகச்சேரி ஐயா கடைச் சந்திக்கு அருகில் டிப்பர் வாகனத்தை நிறுத்திவிட்டு, தந்தை தூங்கச் சென்றுள்ளார். மகன் ரயில் தண்டவாளத்தில் காலை வைத்தவாறு கைபேசியில் உரையாடிக் கொண்டிருந்துள்ளார். அப்போது கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த ரயிலுடன் மோதுண்டு அவர் விபத்துக்குள்ளாகியுள்ளார்.

படுகாயமடைந்த அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்த விபத்து தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-159)

## ரயில் சேவைகள் இருநாள்கள் இல்லை

கொழும்பு, ஓக.17

கொழும்பிலிருந்து யாழ். நோக்கிப் பயணிக்கும் இரண்டு ரயில்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமையும், இன்று திங்கட்கிழமையும் சேவையில் ஈடுபடமாட்டாது என ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது. வடக்கு மார்க்கத்தில் கல்கமுவ ரயில் நிலையத்துக்கு அருகில் முன்னெடுக்கப்படும் திருத்தப் பணிகள் காரணமாகவே ரயில் சேவைகள் இடம்பெறாது எனவும் மேற்படி திணைக்களத்தின் போக்குவரத்து அத்தியட்சகர் காமினி செனவிரத்ன தெரிவித்துள்ளார். இதற்கமைய, 81 மற்றும் 82 இலக்கங்களைக் கொண்ட ரயில்களே சேவையில் ஈடுபடாது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (எ)

# மணிக்கு ஆதரவு தெரிவித்து பருத்தித்துறையில் பதாகை!

யாழ்ப்பாணம், ஓக.17

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் மற்றும் ஊடகப் பேச்சாளர் பதவிகளை வகித்த சட்டத்தரணி வி.மணிவண்ணனிடம் இருந்து அந்தப் பதவிகள் பறிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பருத்தித்துறைப் பகுதியில் பதாகைகள் கட் டப்பட்டுள்ளன.

மணிவண்ணனின் பருத்தித்துறை ஆதரவாளர்கள் என்று அடிக்குறிப்பிட்டுள்ள இந்தக் கறுப்பு நிறப் பாதாகைகளில் கட்சி எடுத்துள்ள நடவடிக்கைகளுக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியத்தின் வழியில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் உறுதியாகவும், பல இன்னல்களுக்கு மத்தியில் மக்களுக்கான குரல் கொடுத்து தலைமை காட்டிய பாதையில் வழி நடந்து நேர்மையாக குரல் கொடுத்து செயற்பட்ட கட்சியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணனுக்கு எதிராக பொய்க் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த பொய்க் குற்றச்சாட்டுகளை வைத்து அவருடைய பதவியைப் பறித்துத் துரோகம் இழைத்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சிக்கும், அதன் தலைமைகளுக்கும் பருத்தித்துறை மக்கள் சார்பாக எங்களுடைய எதிர்ப்புக்களை தெரிவிக்கின்றோம்.

தீர்மானத்தை மாற்றியமைத்து தனிப்பட்ட பழிவாங்கல்களைத் தவிர்த்து ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என்றும் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம் என்று அந்தப் பதாகைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-20)

## கஞ்சிபான இம்ரானை வணங்கிய அதிகாரி

### காணொலி உள்ளது என்கிறார் கமால் குணரத்ன



கொழும்பு, ஓக.17
போதைப்பொருள் கடத்தல்காரரும், ஒழுங்கமைக்கப்பட்ட பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குழுவின் தலைவருமான கஞ்சிபான இம்ரானுக்கு சிறைச்சாலைக்குள் கைகூப்பி வணக்கம் தெரிவிக்கும் சிறை அதிகாரியொருவர் தொடர்பிலான காணொலி ஒன்று தமக்கு கிடைத்துள்ளது என ஓய்வு பெற்ற பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.
கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
மேலும், பலவந்தமாக மற்றும் மோசடி செய்து கொழும்பு மாவட்டத்தில் நிலங்களை கையகப்படுத்தும் நடவடிக்கை தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிப்பதற்காக குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் விசேட பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். (ரி1)

## முதலாவது ஔடத உற்பத்தி கிராமம் அம்பாந்தோட்டையில் ஆரம்பிக்கப்படும்

### அமைச்சர் நாமல் தெரிவிப்பு



**அம்பாந்தோட்டை, ஓக.17**
**நாட்டின் முதலாவது ஔடத உற்பத்திக் கிராமத்தை அம்பாந்தோட்டையில் ஆரம்பிக்கப் போவதாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

இதன்மூலம் 17 ஆயிரத்துக்கும் கூடுதலானோருக்கு தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். அம்பாந்தோட்டை சிங்கபூர் மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
அம்பாந்தோட்டை மாவட்டத்தைப் போன்று அம்பாந்தோட்டை நகர சபையும் பிரதேச சபையும் அபிவிருத்தி செய்யப்படும். இந்நாட்டில் நிர்மாணிக்கப்படவுள்ள இரண்டாவது பொருளாதார கேந்திர நிலையமாக அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்கு உங்களது பகுதி மாற்றியமைக்கப்படும். இதனை நாம் நிச்சயம் நிறைவேற்றுவோம். இலங்கையின் முதலாவது மருந்து உற்பத்தி கிராமத்தை அம்பாந்தோட்டையில் ஏற்படுத்துவதற்கான திட்டம் எம்மிடம் உள்ளது. அடுத்து வரும் காலப்பகுதிக்குள் இதனை நாம் ஆரம்பிப்போம். 15 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பை வெளிநாட்டு கம்பனி ஒன்றுக்கு விற்க முயற்சித்தபோது ஆர்ப்பாட்டங்களை நடத்தி அதனை நாம் மீட்டு எடுத்தோம். அதில் 5000 ஏக்கர் நிலப்பரப்பில் முதலீடுகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக் காணப்படுகின்றது. அம்பாந்தோட்டை மட்டு மன்றி முழு நாட்டு மக்களின் நலன்கருதியுமே இது முன்னெடுக்கப்படுகிறது. அம்பாந்தோட்டை நகர சபையிலும் பிர தேச சபை பிரவுகளிலும் வாழ்கின்ற மக்களுக்கு இதற்குரிய சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். இதற்கு இப்பகுதியில் உள்ள பிள்ளைகளை நாம் தயார்ப்படுத்த வேண்டும். இவ்வாறான அபிவிருத்தி திட்டங்களை இப்பகுதியில் மாத்திரமல்ல, முழு நாட்டிலும் மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம் எனத் தெரிவித்துள்ளார். (ரி1)

### சாவகச்சேரி மாதர் சங்கத்தினரால்

## வீட்டுத்தோட்டம் மேற்கொள்வோருக்கு ஊக்குவிப்பு பரிசில்கள்

சாவகச்சேரி, ஓக 17
வீட்டுத்தோட்டத்தை மேற்கொள்ளும் சங்க அங்கத்தவர்களுக்கு மாதாந்தம் ஊக்குவிப்புப் பரிசில்களை வழங்க சாவகச்சேரி நகர மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் முடிவு செய்துள்ளனர்.
குடியிருப்புகள் மற்றும் காணிகளில் சேரும் கழிவுகளை தினமும் வெளியே கொட்டுவதைத் தவிர்த்து அவற்றைக் கூட்டுப் பசளையாக்கி குடியிருப்புகள் மற்றும் காணிகளில் வீட்டுத்தோட்டங் களை மேற்கொள்ள ஊக்குவிப்பதென சங்கப் பொதுக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. சாவகச்சேரி நகரசபையின் தூய்மையான நகரத் திட்டத்தில் சங்கம் தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்கான திட்டத்தை ஆரம்பித்துள்ளது.
வீட்டுத் தோட்டத்தை மேற்கொள்ளும் சங்க அங்கத்தவர்கள் சங்கத்திற்கு அறிவிக்கும் பட்சத்தில் பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் ப.சதீஸ்வரன் தலைமையில் சங்க நிர்வாகிகள் நேரில் சென்று பார்வையிட்டு சிறந்ததாகத் தெரிவுசெய்யப்படும் வீட்டுத் தோட்டத்துக்கு மாதத்தில் 15ம் திகதி நடைபெறும் கூட்டத்தில் ஊக்குவிப்பு பரிசில்கள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என சங்கத் தலைவி திருமதி புஷ்ப ராணி தெரிவித்தார். (ரி9)

## 25 நாய்கள் ஏலத்தில்

கண்டியிலுள்ள பொலிஸ் பிரிவில் இணைக்கப்பட்ட 25 பயிற்சி பெற்ற நாய்கள் நேற்று ஏலம் விடப்பட்டுள்ளன.
நாட்டின் பல பகுதிகளில் மிகப் பெரியளவிலான குற்றங்களைக் கண்டறியும் பகுதி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட பல நாய்களே இவ்வாறு ஏலம் விடப்பட்டுள்ளது. பொலிஸ் பிரிவின் கூற்றுப்படி, 10 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய நாய்கள் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன. இந்த ஏல நடவடிக்கையின் மூலம் பொலிஸ் பிரிவுக்கு 315,800 ரூபா வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளது. (ரி2)



## விசேட சுற்றிவளைப்பு; பெண்கள் உட்பட 33 பேர் கைது

கொழும்பு, ஓக.17
கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது போதைப் பொருள்கள் மற்றும் 4 இலட்சத்திற்கும் அதிகமான பணத்துடன் ஐந்து பெண்கள் உட்பட 33 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இந்தப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு, பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் கொழும்பு வடக்கு பிரிவின் பொலிஸார் உள்ளடங்கலாக 517 பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின்போதே சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. அதற்கமைய, 37 கிராம் 830 மில்லி கிராம் ஹெரோயின் , 85 கிராம் கஞ்சா மற்றும் 11 போதை மாத்திரைகளுடன் 28 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன்,4 இலட்சத்து 49 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் 6 தொலைபேசிகளுடன் ஐந்து பெண்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
சந்தேகநபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ரி3)

## சர்வதேச உறவின் தேவையை தெரியப்படுத்திய கொரோனா

### வியட்நாம் வெளிவிவகார பிரதியமைச்சர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக.17
சர்வதேச நாடுகள் ஒத்துழைப்புடன் செயலாற்ற வேண்டியதன் அவசியத்தை கொவிட் 19 தொற்றுநோய் போன்ற நெருக்கடி நிலைமைகள் மீளவலியுறுத்தியுள்ளன என வியட்நாம் வெளிவிவகார பிரதியமைச்சர் குயென் குவோக் டன்க் தெரிவித்துள்ளார்.
கொரோனா வைரஸ் பரவலுக்கு எதிராக இலங்கை முன்னெடுத்திருக்கும் செயற்பாடுகளுக்கு உதவும் வகையில், 30,000 அமெரிக்க டொலர்கள் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் நன்கொடையாக வழங்கப் பட்டுள்ளன. வியட்நாம் வெளிவிவகார அமைச்சகத்தில் வைத்து, வியட்நாம் வெளிவிவகார பிரதிய மைச்சரால் வியட்நாமிற்கான இலங்கைத்தூதுவர் பிரசன்ன கமகேவிடம் வழங்கப்பட்டது. இதன்போதே அவர் மேற்படி தெரிவித்துள்ளார்.
மேலும் இருநாடுகளுக்கும் இடையில் நீண்டகாலமாகப் பேணப்பட்டுவரும் நட்புறவு தொடர்பில் நினைவுகூர்ந்த அவர், நெருக்கடியான தருணங்களில் இருநாடுகளும் பரஸ்பரம் வழங்குகின்ற உதவிகள் குறித்தும் சுட்டிக்காட்டினார்.
இதன்போது வியட்நாம் வழங்கியிருக்கும் நன்கொடைக்கு இலங்கை மக்களின் சார்பில் நன்றிகூறிய தூதுவர் பிரசன்ன கமகே, வியட்நாமுடன் ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கு இலங்கை தொடர்ந்தும் தயாராக இருக்கின்றது எனவும் தெரிவித்துள்ளார்.
அத்துடன் கொவிட் 19 தொற்றுப்பரவலைக் கட்டுப்படுத்துவதில் வியட்நாம் முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகளை சுட்டிக்காட்டிய பிரசாத் கமகே, இந்த நெருக்கடி நிலைமையின் போது பல நாடுகளுக்கு மருத்துவ உபகர ணங்களை நன்கொடையாக வழங்கிவரும் வியட்நாமின் உதவி யையும் பாராட்டினார். (ரி3)






## தெய்வமே கந்தா நல்லூர் வாசா

தானதர்மம் மேலோங்கி தரணியோர் வாழத்
தாவிலா கருணை பொழிகின்ற தங்கவடிவேலா
தினமிரவு பகலாய் துயரத்தினைப் போக்கும்
தெய்வமே கந்தா நல்லூர் வாசா
இனமது தமிழர் இணைந்துமே வாழ
இனிவரும் காலம் இனியதாய் அமைய
கனதிபெறு அசுர குணங்களை அழித்து
காத்தருள வருவாய் கருணைக் கடலே
தினமது தங்கமா மயிலேறும் முத்துக்குமரா
தீங்கேது அணுகாது தித்திப்பான வாழ்வளிப்பாய்

மு.தணிகாசலம்
கற்கோவளம்

## வாழ்வை உயர்த்திடய்யா நல்லைக் கந்தையனே

யாழ் நகர பதியிலுறை நல்லையனே
பாழ் பட்ட அநீதியை வதஞ்செய்ய
சூழ் காசினி எங்கும் ஓங்காரவேலனே
ஆழ் மனவோட்டத்தில் கந்தனே
ஊழ் வினை போக்கும் வள்ளி மணாளனே
மூழ் நிலை கலத்தைப் போன்ற எம்
வாழ் வினை உயர்த்திடய்யா
நல்லைக் கந்தையனே

எஸ்.எஸ்.உமாசிவம், ஏழாலை

## நல்லூரான் வடம் பற்ற வாரீர்

கொடு வினைகள் பறந்தோடிட
மா பாவங்கள் வேல் பட்டோடிட
தீரா இன்னல்கள் பாழ்பட்டோடிட
சர்வமும் கந்தன் வசப்பட்டிட
நீதி, நிம்மதி, அமைதி பெற்றிட
நல்லெண்ணம், நியாயம் கிடைத்திட்டிட
கலி, பிணி, கொடுநோய் விரண்டோடிட
நல்லூரான் வடம்பற்ற வாரீர்!

*எஸ்.யூ.சிவம் (ஜே.பி), வவுனியா*


## இன்று தேர்த் திருவிழா

### அவலத்தைப் போக்கி அமைதியைத் தா...!

எமதுடல் ஆகி உயிரதும் ஆன
அமுதெனும் தமிழை - அளித்தோனே
உமையுடன் வேணிச் சடையர்க்கும் ஆசை
மகவென ஆகி - உயர்ந்தோனே
அமைதியும் ஈந்து அவலங்கள் யாவும்
அவனியில் நீங்கி - அருள்வாயே
இமையவர்கூட மலரினைத் தூவி
வழிபடும் நல்லை - முருகோனே

*சின்னையா சிவபாலன், கோண்டாவில்*

படங்கள் - ஐ.சிவசாந்தன்





## சிறப்புச் சொற்பொழிவு

சிறுப்பிட்டி, ஓக.17

யாழ்ப்பாணம் நீர்வேலி சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாக தம்பிரான் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழாவை முன்னிட்டு தினமும் மாலை 6 மணிக்கு சிறப்புச்சொற்பொழிவு நடைபெற்று வருகிறது.

இன்று திங்கட்கிழமை சைவப் புலவர் சிவநெறிச்செம்மல் பொன் சந்திரவேல் " விரதமும் வாழ்வும் " என்னும் தலைப்பில் சிறப்பு சொற்பொழிவாற்றவுள்ளார். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பரிசுகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)





நல்லூர் கந்தசுவாமி கோவில் 23ஆம் நாள் திருவிழாவான நேற்று மாலை வள்ளி, தெய்வானை சமேதராய் நல்லூர்க் கந்தன் இடப வாகனத்தில் வீதியுலா வருவதைப் படத்தில் காணலாம்.





# இன்றைய நாள்

**மேடம்:** உங்களின் நல்ல செயலை சிலர் கேலி பேசுவர். நம்பிக்கையுடன் செயல்படுவது அவசியமாகும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற புதிய யுக்தியை கையாள்வீர்கள். சீரான அளவில் பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** எதிரான சூழ்நிலை நிலவினாலும் மனசாட்சியுடன் நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வரும் குளறுபடியை மாற்று உபாயத்தால் சரிசெய்வது நல்லது.

**மிதுனம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பணிகளில் நம்பிக்கையுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி திட்டமிட்ட இலக்கை எட்டும்.

**கடகம்:** பேச்சு, செயலில் தயக்கம் ஏற்படலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சீரான அளவில் இருக்கும். அதிக நிபந்தனையுடன் கடன் பெற வேண்டாம். விஷப்பிராணிகளிடம் இருந்து விலகுவது நல்லது.

**சிம்மம்:** மதிநுட்பத்துடன் செயல்படுவீர்கள். முயற்சிகளுக்கான பலன் திருப்திகரமாக கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்கும். சமூகத்தில் தனி அந்தஸ்தை பெறுவீர்கள். பணம் கொடுக்கல், வாங்கல் சீராகும்.

**கன்னி:** சொந்த விஷயங்களை பற்றி பிறரிடம் சொல்ல வேண்டாம். தெய்வ அனுகூலத்தால் நினைத்த செயல் அனைத்தும் நிறைவேறும். சிக்கனமாகச் செலவு செய்வீர்கள்.

**துலாம்:** சிலருக்கு சரியான நேரத்தில் உதவி செய்வீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க தேவையான மாற்றத்தை செய்வது நல்லது. பணவரவுடன் நன்மையும் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** செயல்கள் அனைத்திலும் நேர்த்தி காணப்படும். குடும்பத்தினரால் பாராட்டும் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் முன்னேற்றகரமான பலன் உண்டு.

**தனுசு:** வெளிவட்டார தொடர்பு தொந்தரவு தரலாம். எந்தச் செயலிலும் பொறுமை அவசியம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் பயனளிக்கும். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**மகரம்:** மாற்று கருத்து உடையவரிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரம் செழிக்க கிடைக்கும் வாய்ப்பை சரியாக பயன்படுத்துவீர்கள். சிக்கனம் சிரமத்தை தவிர்க்க உதவும்.

**கும்பம்:** செயல்களில் இரக்க குணம் வெளிப்படும். பிறருக்கு உதவுவதை விருப்பமாக கொள்வீர்கள். உபரி வருமானம் கிடைக்கும்.

**மீனம்:** புதியவர்களின் நட்பு கிடைக்கும். தாமதமான பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி திட்டமிட்டபடி நிறைவேறும்.

# போதைப்பொருளுடன் தொடர்புபட்டால் சொத்துக்கள் அரசுடமையாக்கப்படும்

## பிரதி பொலிஸ்மா அதிபர் எச்சரிப்பு

கொழும்பு, ஓக.17

போதைப்பொருள் கடத்தல்காரர்களின் வலையமைப்புக்களுடன் தொடர்புடையோரின் சொத்துக்கள் அரசுடமையாக்கப்படும் என பிரதி பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, மேல் மாகாணத்திற்குள் முன்னெடுக்கப்படும் போதைப் பொருள் கடத்தல்காரர்களின் 550 இற்கும் மேற்பட்ட வலையமைப்புகள் கண்டறியப்பட்டுள்ளன. இந்த வலையமைப்புகளுடன் தொடர்புபட்டுள்ளவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன களினி பிரிவில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட போதைப்பொருள் கடத்தல்காரரின் வங்கிக் கணக்குகள் பரிசீலிக்கப்பட்டுள்ளன.

சந்தேக நபரின் வங்கி கணக்குக்கு 2 மாதங்களுக்குள் ஏழரைக் கோடி ரூபா பணம் வைப்பிலிப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது எனவும் சந்தேக நபரிடமிருந்து பெருந்தொகையான பணமும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளது எனவும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென்னகோன் குறிப்பிட்டார். (ரி1)

## சிறுமி மீது துஷ்பிரயோகம்: ஏழு பேர் கைது!

கண்டி, ஓக.16

கண்டியில் 14 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய, 7 சந்தேக நபர்களை கண்டி பூஜாபிட்டி பொலிஸார் கைது செய்துள்ளனர். கைதுசெய்யப்பட்டுள்ள ஏழு பேரும் கடந்த ஆறு மாதங்களில் குறித்த சிறுமியை பல முறை துஷ்பிரயோ கத்துக்கு உட்படுத்தியுள்ளனர் என பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

29 வயதான சந்தேகநபர் ஒருவர் ஆரம்பத்தில் குறித்த சிறுமிக்கு தொலைபேசி ஒன்றை பரிசளித்து தொடர்புகொண்டுள்ளார். பின்னர் தனது நண்பர்களையும் அறிமுகப்படுத்தியுள்ளார். விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் இருவர் தேடப்பட்டு வரும் நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ரி2)

## புதையல் தோண்டியோர் கைது

கொழும்பு, ஓக.17

அரலகங்வில திம்புலாகல வனப்பகுதியில் புதையல் தோண்டிய இரண்டு பேரை நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்துள்ளனர். பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதன்போது மாணிக்கக்கல் வடிவிலான 3 மெருகூட்டல் கற்கள் மற்றும் போக்குவரத்துக்காக பயன்படுத்தப்பட்ட முச்சக்கர வண்டி ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ரி1)

## குர்ஆன் மத்ரஸாக்கள் இன்று மீள ஆரம்பம்

கொழும்பு, ஓக.17

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த குர்ஆன் மத்ரஸாக்கள் மற்றும் அஹதிய்யா பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் கட்டம் கட்டமாக மீள ஆரம்பிக்கப்படவுள்ளன. முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது. இதற்கமைய, 6 ஆம் தரங்களுக்கு மேற்பட்ட வகுப்புக்களுக்கு இன்று முதலும், 1 முதல் 5 வரையான தரங்களுக்கு எதிர்வரும் 23 ஆம் திகதி முதலும் கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன எனவும் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ரி1)

## மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை செவ்வாய் காலை 8மணியிலிருந்து மாலை 5மணிவரை **வவுனியா மாவட்டத்தில்** பத்தினியார்மகிழங்குளம் கிராமம், மூன்றுமுறிப்பு கிராமம், ஜோசப் முகாம், விமானப்படை முகாம், விமானப்படை முகாம் றேடார், பம்பைமடுவிலிருந்து குருக்கள்புதுக்குளம் வரை, பூவ ரசங்குளத்திலிருந்து செங்கற்படை, வேளாங்குளம் கடற்படை

முகாம், பம்பைமடு பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழகம், ஆண்டியப்புளியங்குளம், வாரிக்குட்டியூர் 4ம் வட்டாரம், கற் கடந்தகுளம், நித்தியநகர், தாண்டிக்குளத்திலிருந்து கீரிசுட்டான் வரை, மறக்கறம் பளையிலிருந்து மணிபுரம் வரை, இரணையிலுப்பைக்குளத்திலிருந்து சின்னவலயங்கட்டு வரை, **மன்னார் மாவட்டத்தில்** முருங்கனிலிருந்து உயிலங்குளம் வரை, முருங்கன் சந்தியிலிருந்து சிலாவத்துறை ஊடாக அரிப்பு மற்றும் முள்ளிக்குளம் வரை, முருங்கன்பிட்டியிலிருந்து நறுவிலிக்குளம் வரை, முள்ளிக்குளம் கடற்படைமுகாம், ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

## யானை உயிரிழப்பு

திருகோணமலை, ஓக.17

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புலியூத்துக் குளப் பகுதியில் சுகவீனமுற்ற நிலையிலிருந்த யானை ஒன்று நேற்று உயிரிழந்துள்ளது என தம்பலகாம பொலிஸார் தெரிவித்தனர். அண்மைக் காலமாக பிரதேச மக்கள் உயிரிழந்த யானைக்கு உணவுகளை வழங்கி வந்ததுடன் வனஜீவராசிகள் திணைக்களத்து டன் இணைந்து உயிரிழந்த யானையை புதைப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். (ரி1)






# தொல்வினைகள் தீர்க்கும் தமிழ்க் கடவுள் முருகனின் தேர்வடம் பிடித்திழுப்போம் வாரீர்

வட இலங்கையின் பண்டைய வரலாறு, கந்தபுராணக் கலாசாரம் மிக்க நல்லூரில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமான் தம் அடியவர்களுக்கு அருள் சுரந்து கொண்டிருக்கிறான். நல்லூரில் அலங்காரக் கந்தனாகவும், மாவிட்டபுரத்தில் அபிஷேகக் கந்தனாகவும் செல்வச்சந்நிதியில் அன்னதானக் கந்தனாகவும், கதிர்காமத்தின் காவடிக்கந்தனாகவும் நல் அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றான்.

ஆலய கிழக்கு, தெற்கு, வடக்கு வாயில் கோபுரங்கள் அழகிய சிற்ப வேலைகளுடன் அமைக்கப்பட்டு, அடியவர்களை, அருள் சுரந்து வரவேற்கும் வாயிலாகக் காணப்படுகின்றது. ஆலய உள்வீதி மண்டபங்கள் அழகிய வர்ணங்கள் தீட்டப்பட்டு தெய்வீகச் சிறப்புடன் காட்சி தருகின்றது. ஆலய கண்டாமணி நாதம், நாளும் கேட்கும் மணி ஓசை அடியவர்களின் பக்தியைக் கூட்டி பரவசப்படுத்துகின்றது. திருவிழாக் காலம் நல்லூர்க் கோயில் பகுதி இந்திர விழா போலக் காட்சி தரும். அத்துடன் அப் பகுதி புனிதம் நிறைந்தும் காணப்படும். திருவிழாக் காலங்களில் முருகன் அடியவர்கள் எல்லாம் இடங்களில் இருந்தும் விரதம் அனுஷ்டித்தும் நல்லூரான் திருவருள் பெறுகின்றனர். வெளிநாடுகளி வாழும் அடியவர்கள் அங்கிருந்து வரமுடியாத சூழ்நிலையிலும் கூட அங்கிருந்து விரதம் அனுஷ்டித்து முருகப் பெருமானின் திருவருள் பெறுகின்றனர்.

பெரியவர்கள் குறிப்பாக இளைஞர்கள் இருபத்தைந்து நாளும் விரதமிருந்து அதிகாலை வந்து அங்கப் பிரதிட்சை செய்வதும் பெண்கள் ஆசாரசீலராக வந்து கற்பூரச் சாட்டி ஏந்தி வழிபாடு செய்வதும் வழமை இம்முறை சுகாதார, சமூக இடைவெளி கட்டுபாடுகள் இவைகள் அனைத்தும் மட்டுப்படுத்தப் பட்டுள்ளது.







## ஆலய கொடிச் சீலை வரலாறு

ஒவ்வரு வருடமும் தலைமுறை தலைமுறையாக செங்குந்தா மரபில் வந்த சிவஞான முதலியார், அவர்களது பேரன் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களினால் கொடியேற்றத்திற்கு முதல் நாள் திருநெல்வேலி கிழக்கு இராமலிங்கம் வீதியில் அமைந்துள்ள வைத்தியரது வீட்டில் இருந்து கொடிச்சீலை எடுத்து வரப்பட்டு சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள கௌரவ வல்லிபுரம் அவர்களினால் அமைக்கப்பட்ட கொடித் தேர் மடத்தில் கோயில் கொண்டிருக்கும் முருகப் பெருமானுக்கு விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று அழகிய சித்திரதேரில் மங்கள வாத்தியங்கள் முழங்க அடியவர்கள் சகிதம் கொடிச்சீலையானது பருத்தித்துறை வீதியூடாக ஆலயத்திற்கு எடுத்து வரப்பட்டு பக்தி பூர்வமான முறையில் ஆலயச் சிவாச்சாரியர்களிடம் ஒப்படைக்கப்படுகிறது.

இவ்வாலயத்தில் அர்ச்சனைக்கு ஒரு ரூபா மட்டும் பெறப்படுகிறது. தனி அம்சமாகும். உற்சவகாலங்களில் முருகப் பெருமான் தினமும் வெவ்வேறு அலங்கார வடிவில் வந்து அடியவர்களுக்கு அருள்மழை பொழிகின்றார். ஆலய சிவாச்சாரியர்கள் கழுத்தில் உருத்திராட்சை மாலையுடன் ஒரே சீரான ஆடையுடன் காணப்படுகின்றனர். பணியாளர்கள் தனியான தொருசீருடையிலும் தொண்டர்கள் சிவப்பு நிற சால்வை வேட்டியுடன் காணப்படுவதோடு, சீரான சமூக இடைவெளியையும் கவனித்து வருவதும் சிறப்பம்சமாகும் ஆலய வீதியில் காவடிகள் யாவும் சுகாதார நடைமுறைக்கு அமைய கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

## நல்லூர்க் கோயிலின் பூசை வழிப்பாடுகள்.

ஈழத்தில் உள்ள கோயில்களில் நேரம் தவறாது, நித்திய, நைமித்திய பூசைகள் மூலம் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மற்றைய கோயில்களுக்கு முன் நோடியாக விளங்குகிறது. வருடந்த மகோற்சவம் ஆடிஅமாவாசையில் இருந்து ஆறாம் நாள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இருபத்தைந்து நாட்கள் உயர்திருவிழா நடைபெறுகிறது. இத்திருவிழா யாழ்ப்பாண மக்களுக்கு மட்டுமன்றி வேறு பிரதேச மக்களுக்கும் முக்கிய திருவிழாவாகும்.



ஐப்பசி மாதத்தில் கந்தசஷ்டி பூஜை, சூரன்போர், கார்த்திகை திருவிழா, கற்பூரத்திருவிழா, தைபூசம், சித்திரை வருடப்பிறப்பு என பல விழாக்கள் கொண்டாடப்படுகிறது. ஆறு காலப் பூசைகள் நேரம் தவறாமல் நடைபெறும் ஒரே ஒரு ஆலயம் நல்லூர்க் கந்தன் ஆலயம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாலய வீதியில் வழிபட்டு யோகர் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், போன்ற பல சித்தர்கள் உருவானார்கள் தேர்திருவிழா அழித்தலையும், தீர்த்தத் திருவிழா அருளையும் குறிக்கும் இத் தேர்த்திருவிழா திருநாளில் தேவர்சிறை மீட்டுக்காத்த முருகப் பெருமானை வணங்கி வழிபட்டு, நல்லருள், நல்பேறு என்பன பெறுவோமாக.

சுபம்

நயினை விசு - இராசநாயகம்
(தாதிய உத்தியோகத்தர்)

நல்லூர் கந்தன் திருவருள் பக்த அடியார்களின் உள்ளம் நிரம்பிட பிரார்த்திப்போம்





உதயா
ஜீவல்லர்ஸ்
தங்கப்பவுண் நகை வியாபாரம்

மாற்றம் விரும்பும் மங்கையருக்கு ஏற்றாற்போல்
வண்ண மயமான காட்சிக் கூடத்தில்
எண்ணம் போல் நகைகளைப் பெற்றிட
தன்னிகரில்லா நகைக் கூடம்

அனைத்து கொள்வனவிற்கும் தரச்சான்றிதழ் வழங்கப்படும்

www.facebook.com/uthayaajewellery
uthayaajewellers4434@gmail.com

79 G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 4434, 021 221 6877



நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா சிறப்புற பிரார்த்திக்கின்றோம்.

25 வருடங்களுக்கும் மேலான அனுபவம் வாய்ந்த நிபுணரின் கைவண்ணம். இந்தியாவின் அதி நவீன அழகுக் கலை நுட்பங்களின் வெளிப்பாடு யாழ்ப்பாணத்திலும். மணப்பெண் அலங்காரத்தின் நவீன பரிமாணங்கள்

YOGIS BEAUTY








75 அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Amman Road, Nallur, Jaffna.
021 222 2796.
0777 164 923
yogisbeauty@gmail.com
www.yogisbeauty.com


வேலுண்டு வினையில்லை, மயிலுண்டு பயமில்லை, குகன் உண்டு குறையில்லை
வேலவா போற்றி, போற்றி ...

# Everpure Hi-Tec (Pvt) Ltd

**Professional in Total Water Management**

## அனைத்து நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் மற்றும் வீட்டு உபகரணப் பொருட்களுக்கு சிறப்பு தள்ளுபடியும் உத்தரவாதத்துடன் கூடிய விஷேட சலுகைகளும்.





Showroom Address:

**NO.581, K.K.S ROAD, JAFFNA.**

**HOTLINE: 0753313310 www.everpurehitec.com**


SOORYA
வாழ்க்கைக்கு
வழிகாட்டும்
ஒளி
37 ஆண்டுகளுக்கும் மேலாக உங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டுவதையிட்டு பெருமிதம் அடைகின்றோம்.
இந்த மறக்க முடியாத பயணத்தில், நீங்கள் எங்கள் மீது கொண்டிருந்த நம்பிக்கைக்கு
கைமாறாக புத்தம் புதிய சூர்யா உற்பத்திகளை அறிமுகப்படுத்துகிறோம்
தீப்பெட்டிகள் | ஊதுபத்திகள் | சிந்தாமல் எரியக்கூடிய மெழுகுவர்த்திகள்
சன் மெட்ச் தனியார் நிறுவனம்
பமுனுபொலவத்த, குண்டசாலை, கண்டி, இலங்கை.
தொ.பே.: +94 81 4472555, +94 81 2420057, +94 81 2420225 ∴பெக்ஸ்: +94 81 2420435 ஈமெயில்: soorya@slt.lk


தரமான கோதுமைத்தானியத்திலிருந்து
பெறப்பட்ட ஆட்டா மா
Estd 1989
விஜயா புரொடக்ஸ் (பிரைவெட்) லிமிட்டட்
தொ.பே:034-2280092, 2280093, 2280086.
தொடங்கொட, களுத்துறை, இலங்கை
Website: www.spiceswijay.com
Email: wijayaproducts@sltnet.lk
Whole Wheat Atta from Premium Quality Wheat Grains
Wijaya
Atta Flour
ආටා පිටි ஆட்டா மா
1kg

## நல்லை நகரிலே ஆட்சி செய்யும் கந்தன்

நல்லை நகரிலே ஆட்சி செய்யும் கந்தனே
எமை வழி நடத்தும் தூயவனே
வேல் கைக் கொண்டவனே
சக்தி எல்லாம் தந்திடுவாய் எங்களுக்கே
சிங்காரக் கோலமாய்த் திகழ்பவனே
சிறப்பெல்லாம் எங்களுக்கே சேர்த்திடுவாய்
அன்பர்க்கெல்லாம் அருள் செய்யவே
தேரேறி வருவாய்...

சரவணையூர் மலர்






## தேரேறி பவனிவரும் நல்லூரான்

நாற்றிசைகளும் சூழ வலம் வர
நவ சக்திகளும் ஆசிகளை வழங்கிட
முக்காலமும் கூடிக் கனிந்திட
முனிவர்களும் பாடிப் பணிந்திட
தேவர்களும் தேனுருகப் பாடிட
பூவுலகும் பூத்துக் களித்திட
ஜீவராசிகளும் புத்துயிர் பெற்றிட
காரிருள் தந்த வானமும் கூடியே
மாரி எனும் மழையினைப் பொழிந்திட
வானுலகே கண்டு வியந்திட
தங்க ரதமேறி தங்க வேலனவனும்
நல்லையிலே பவனி வந்திட்டானே



லிங்கேஸ்வரன் ஜனார்த்தன்
மறவன்புலோ மத்தி






வழங்கிடுவாய் வரமே மக்கள் நலமுடனே வாழ்ந்திடவே! அரகரோகரா...

கன்னிஹா ஜுவல்ஸ்
KANNIHA JEWELS



WE CERTIFY KARAT OF GOLD

இல.99E, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
Tel:021 222 4448

REGISTER NOW!
Jaffna
070 2705370
071 8722350
071 8722352

Registered with TVEC
TERTIARY AND VOCATIONAL EDUCATION COMMISSION SRI LANKA

நிச்சயமான தொழிலை இலக்காகக் கொண்ட பாடநெறி
O/L பின் SCHOOL OF NURSING
ஒரு வருட தாதியர் பயிற்சி பாடநெறி
Hotline : 0710 770 770
0717 140 000



உள்நாட்டு வெளிநாட்டு தொழில் வேலை வாய்ப்புகள் அதிகளவில் பெற்றுத் தர ஒரே ஒரு தாதியர் பாடசாலைக்கு புதிய மாணவர்களை சேர்த்துக்கொள்ளப்பட உள்ளனர்.
நுழைவுக்கான அடிப்படை தகைமைகள்
- க.பொ.த. சா/த 5 பாடங்களில் சித்திபெற்றிருத்தல்
- உயரம் 4 அடி 10அங்குலம் இருத்தல் வேண்டும்
- வயதெல்லை : 16–30 இடைப்பட்டிருத்தல்

JOB CONFIRM

பயிற்சி நெறியினை சிறந்த முறையில் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு TVEC நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

நாடு முழுவதிலும் அமைந்துள்ள ஆய்வுகூட உதவியாளர் வெற்றிடங்களை நிரப்பும் முகமாக...

A/L பின்
MEDICAL LABORATORY TECHNOLOGY ASSISTANT
ஆய்வுகூட உதவியாளர் பயிற்சிநெறி
க.பொ.த. உயர்தர விஞ்ஞான பாடத்திற்கு தோற்றிய நீங்களும், இப்பொழுது ஆய்வுகூட உதவியாளராகலாம்



பிரதான காரியாலயம்
PV 114302
அய்வா தாதியர் பாடசாலை
28, பார் வீதி, மட்டக்களப்பு. 071 8722353, 065 2229666
Web : www.myhopegroup.com E-mail : nadheer1976@yahoo.com

கிளைகள்
திருகோணமலை
203, பிரதான வீதி, திருகோணமலை.
071 9926681

யாழ்ப்பாணம்
154, A/12, 2ம் மாடி, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
071 8722352
071 8722350

வவுனியா
36/1, 38/1, இரண்டாம் குறுக்கு வீதி, வவுனியா.
071 8722351

உங்களது தகவல்களை SMS மூலம் பதிவிடவும்

நல்லூர் தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகிறோம்
Vayuputhra Phone Shop
வாயுபுத்ரா போன் சொப்
No.364, Hospital Road, Jaffna. T.P: 077 364 4246 | 077 859 5151

அனைத்து விதமான போன் விற்பனை மற்றும் பழுதுபார்த்தல்




வாயுபுத்ரா புக்கிங் சென்றர்
077 36 44 246 / 077 85 95 151
சகல விதமான பேருந்துகளுக்கும் ஆசனப் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.
ஆசனப் பதிவகம்
யாழ் ⇄ கொழும்பு
(தினமும்)
ஆசன பதிவுகளுக்கும் மேலதிக தொடர்புகளுக்கும் ➤ இல.364, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



# முருகாவுன் அழகிற்கோர் குறைவில்லையே...

முருகாவுன் அழகிற்கோர் குறைவில்லையே - உந்தன்
முற்றத்தில் நிற்போர்க்கும் வழியில்லையே
கொறோனாவின் கொடும் ஆட்சி தொடர்கின்றதே - நீயும்
கூர்வேலால் அதைமாய்க்க எழவில்லையே ...
முருகாவுன்

கோலாகலமுந்தன் வீதியல்லவா? இப்போ
கோலமது இழந்திருத்தல் பாவமல்லவா?
தீதொன்று எமக்கென்றால் தீரநிற்பியே - இந்த
தீநோய்க்கு மருந்தாய் நீ மாறவில்லையே-
முருகாவுன்
ஐயா ! நாம் உனைநினைத்து வாழுகினறோமே - நாமும்
அப்பாவுன் எழில்காண வேகுகின்றமே
முன்போல முடியலையே நல்லைக்குமரா - எங்கள்
முகம் காண உந்தனுக்கும் ஆசையில்லையா -- ?
முருகாவுன்
ஐயா! உன் விழாக்காண ஆசை கொண்டமே - இந்த
அரக்கனெனும் கொடு நோயால் வாடுகின்றமே
போராடும் வலியோனே ! போகவில்லையே - நோயும்
போயாச்சு எனும் வாழ்வு மீளவில்லையே -
முருகாவுன்

**கலைமாமணி கலைஞானசுடர்**
**தீவகதியாகன்**





## தேரில் வருகிறான் தேன் தமிழ்த் தலைவன்

தேரில் வருகிறான் தேன் தமிழ்த் தலைவன்
தேரில் வருகிறான் கையில் வேலுடன்
இச்சை கிரிகை இருவர் சூழ
இனிய தமிழின் உருக்கொண்டு
இனியும் துன்பம் இல்லை என்று
இனிக்கும் செய்தி சொல்லி வருகிறான்
நேரில் வருகிறான் நேரில் வருகிறான்

*திருமதி. செல்வராணி பாக்கியநாதன்*

## வரும் பகைதனை காலால் கிழிக்க வருகிறான்

தங்கரதத் தேரினிலே வேலன் வருகிறான்
தங்கத்தினால் சோடனையுடன் பவணி வருகிறான்
எட்டுத் திக்கு திசையாலும் பக்தர் வருகிறார்
பட்டதுயர் துடைப்பான் என எண்ணி வருகிறார்
தேரடிச் சித்தர் போற்றிய வேலன் வருகிறான்
தேரேறிச் சக்திதனை பரவி வருகிறான்
வாரணக் கொடியுடனே சுற்றி வருகிறான்
வரும் பகைதனை காலால் கிழிக்க வருகிறான்

*கு.சசிகலா, மட்டுவில்*



## தேரேறி வரும் கந்தன்

தேரேறி வரும் கந்தன்
தெப்ப மதாய்க் காத்திடுவான்!
பாரோம்பும் பக்குவத்தை (ப்)
பக்தர் தமக் கீந்திடுவான்!
சிலம்பனால் கீர்த்தி பெற்ற
சீரோங்கும் நல்லை நகர்
நலமீந்து நல் லருளை
நாளும் நமக் கருளும்!
நல்லை யெனும் பதத்தால்

## நாடே ஒளிர்கிறது

தொல்லை துடைத் தென்றும்
தூய ஒளி மிளிர்கிறது!
தூசு துடைத் துலகை (த்)
தூய்மை பெற வைத்திடையா!
மாசுகளைந் தென்றும்
மதிப் போங்கக் காத்திடையா!

*கலாபூஷணம் கலைமாமணி கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்*

## ஆர்வமுடன் ஆறுமுகன் தேரிழுத்து

நாரெனும் அன்பு நலமே வளர்ந்திட
நித்தம் நிம்மதி நிலவிட
தீர்வுகள் வந்திட துயர்கள் நீங்கிட
திருவருள் பெற்றிடும் பற்றுடன்
தேர்வடம் பிடிக்க தேரடிக்கு அடியார்கள்
தேடி வருகின்றார் நல்லூரை
ஆர்வமுடன் அடியார்கள் ஆறுமுகன் தேரிழுத்து
ஆறுதலை அமைதியை வேண்டுகின்றார்

*குளப்பிட்டி க.அருமைநாயகம்*



## தேரேறி வருவாய்...

உலகை எல்லாம் அச்சுறுத்தும்
கொடியத்தும் கொரோனாவை
ஒழிக்கவே தேரேறி வருவாய்
அபயம் அழித்திடும் தெய்வமே
தேரேறி வருவாய்
அன்பருக்கெல்லாம்
அருள் செய்யவே
தேரேறி வருவாய்

*சரவணையூர் மலர்*







நல்லூர் தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 2020



# வேலில் தமிழ் கேடில்



மருத்துவர் சி. யமுனாநந்தா

சங்க இலக்கியங்களில் குறிஞ்சித் தெய்வ வழிபாடாக முருகவழிபாடு கூறப்பட்டுள்ளது. முருக வழிபாடு கௌமாரம் என சண்மதங்களில் கூறப்படுகின்றது. சனாதன தர்மமானது சிவபெருமானின் உடுக்கையில் இருந்து தோன்றிய ஒலியே தமிழும் சமஸ்கிருதமும் என்கின்றது. சங்க இலக்கியங்களில் முதல் சங்கத்தின் தலைவர் சிவன் எனக் குறிப்பிடப்படுகின்றது. தமிழ் சங்கத்தின் பொறுப்பை ஏற்று தமிழை, தமிழ் மக்களை காத்து நிற்கும் தெய்வமாகவே முருகப்பெருமான் வழிபடப்படுகிறார்.

தமிழர்களின் தொன்மையான குமரிக்கண்டத்தில் முருக வழிபாடு விரகி இருந்தது. சுமார் 7000 வருடங்களுக்கு முற்பட்ட நடுகற்களில் வேல், சேவல், சின்னங்கள் பொறிக்கப்பட்டிருந்தமை முருக வழிபாட்டின் தொன்மையை எடுத்துக் காட்டுகின்றது. இன்று செல்லக்கதிர்காமம் எனப்படுவது குமரி கண்டத்தில் 'எல்லம் கதிர்காமம்' என்பது குறிஞ்சிக்குமர வழிபாட்டுத் தலமாகும்.

முருகப் பெருமானை சரவணன் என்று அழைப்பது, சரவணப் பொய்கையில் குழந்தையாக அவதரித்தார் என்பது மட்டுமல்ல சரம் என்றால் தமிழில் மூச்சு, வணம் என்றால் கட்டுப்படுத்துவது. அதாவது மூச்சைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்டவன் என்பதனால் சரவணன் என்பர். ஆன்மாவின் மூச்சைக் கட்டுப்படுத்தும் மூச்சு மாத்திரைகளே அட்டமா சித்திகள் கைவர ஏதுவாகுகின்றது. அதாவது சித்தர்களுக்கு எல்லாம் சித்தராக சரவணன் எம்மை வழிப்படுத்துகின்றான். நல்லூரிலும் பல சித்தர்கள் வழிபட்டு முத்தி அடைந்து உள்ளனர். அவர்களில் செல்லத்துரைச் சுவாமிகள், யோகர் சுவாமிகள் அண்மைக் காலத்தவர்கள்.

முருகனின் திருவிளையாடல்கள் தமிழ் மண்ணில் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டே உள்ளன. அருணகிரிநாதரைச் சந்தக்கவிபாட 'திகடசக்கர' என அடியெடுத்துக் கொடுத்தவர் முருகப் பெருமானே. கச்சியப்ப சிவாச்சாரியாரைக் கந்தபுராணம் பாடவைத்ததும் முருகப் பெருமானே. பிறப்பால் ஊமையாக இருந்த குமரகுருபரரை கந்தர்கலி வெண்பா பாட அருளியவரும் முருகப் பெருமானே. ஔவைப் பிராட்டியாருக்கும் காட்சி கொடுத்து அருளினார். வள்ளலார் பெருமானுக்கு காட்சி கொடுத்து அருளியவரும் முருகப் பெருமானே. தேவராய சுவாமிகளை கந்த சஷ்டி கவசம் பாட வைத்ததும் முருகப் பெருமானே. வேண்டினார்க்கு வேண்டியதை வழங்கும் முருகன் எனத் திருமுருகாற்றுப்படையில் கடைச்சங்கத் தலைமைப் புலவர் நக்கீரர் கூறுகிறார். வீரவேல், தாரைவேல், விண்ணோர் சிறைமீட்ட தீரவேல், செவ்வேள் திருக்கைவேல், வாரி குளித்தவேல், கொற்றவேல், சூர்மார்பும் குன்றும் துளைத்தவேல் உண்டே துணை.

## திருமுருகாற்றுப்படை

முருகன் எம்மைக் காக்கும் தெய்வம் என்பதை விளக்கும் திருமுருகாற்றுப்படை, முருகனைத் தமிழரின் வடிவமாகவும் பார்க்கின்றது. மொழியின் வடிவம் முருகன் என்றால், அவரது கையில் இருக்கும் வேல் அறிவின் குறியீடு. ஆழ்ந்து அகன்ற அறிவு என்பதே வேல். ஆழ்ந்து அகன்ற அறிவுடையவன் வெற்றியாளனாய் மட்டும் இருப்பதில்லை. தன்னைச் சார்ந்தோரையும் காத்து அருளும் வல்லமை கொண்டவனும் ஆவான். வேலில் ஒளியே பிரபாகரம் ஆகும். ஈழத்தில் சந்நிதியில் வேலன் அருள்பெற்றவரே வேலுப்பிள்ளை தவமைந்தன். மகாகவி பாரதியும் "சுற்றி நில்லாதே போ பகையே! துள்ளி வருவது வேல்" என்று பாடியுள்ளார். தற்போதைய தீநுண்மி அச்சத்திலும் சரவணனே எம்மைக் காத்தருளுகின்றான். அடியவர்கள் யாவரும் மூச்சுக் கட்டுப்பாட்டில் முகக்கவசம் அணிந்து வேலனைப் பக்திப் பரவசத்துடன் கந்தசஷ்டி கவசம் பாடிக் கொடிய நோயிலிருந்து காக்க காக்க வேண்டி நிற்கின்றார். ஞானத்தின் குறியீடு முருகன். அறிவுதான் காக்கும் என்பது தமிழரின் அசைக்க முடியாத நம்பிக்கை. அதனாற்றான் தமிழ்க்கடவுள் என்று போற்றப்படும் முருகனை வேலாயுதன் என்கின்றார்கள் திருமுருகாற்றுப்படையில்,

"அல்லூர் ஓம் கல்லூர் ஓம் நில்லூர் ஓம்
இல்லூர் ஓம் சொல்லூர் ஓம் வில்லூர் ஓம்
உள்ளூர் ஓம் தெள்ளூர் ஓம் ஊடூர் ஓம்
எல்லூர் ஓம் நல்லூர் ஓம் வேலூர் ஓம்.
"நீறில் நுதலில் எல்லில்
கூறில் பாரில் நிம்மதியில்
ஆறில் யாழில் சந்நிதியில்
வேலில் தமிழ் கேடில்.

தமிழால் முருகனை வழிபட்டு தமிழை வணங்குவோம்.






# செதுக்கல் தேரில் அழகுக் கந்தன்



சிவரம்யா

'ஆறு முகனீ யடியார்க் கிரங்கியவர்
தேறு முறையருளத் தெய்வத நீ – வேறுதுணை
இல்லேன் மிடியனைத்து மில்லார்க்கு வானமைந்தாய்
நல்லூர்ப் பதியி னயந்து'

நல்லை நான்மணி மாலை :
குகதாசர் ச.சபாரத்தின முதலியார்.

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலை முதன் முதலாகத் தாபித்தவர் செண்பகப் பெருமாள் என்னும் புவனேவாகு மன்னன் ஆவார்.

போர்த்துக்கீசர் ஆட்சிக் காலத்தில் இந்தக்கோவிற் கட்டடத்தை அழித்துவிட்ட போதிலும் சைவ மக்கள் இது உள்ளத்தில் ஊறிக்கிடந்த நல்லூர்க் கந்தன் வழிபாட்டை முற்றாக அழிக்க முடியவில்லை. 'யாழ்ப்பாண வைபவம்' என்னும் நூலில் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலை மீண்டும் தாபித்தவர் இரகுநாத மாப்பாண முதலியாரெனக் கூறப்பட்டுள்ளது. இந்தக்கோவிலின் கட்டியம் ஆவது,

*'சிறீமான் மஹாராஜாதிராஜ
அகண்ட பூமண்டலப்ர
தியதிகந்தர வீச்றாந்த கீர்த்தி
சிறீ கஜவல்லி மகாவல்லி
சமேத சுப்ரமண்ய
பாதார விந்த ஜநாதிருட சோடக
மகாதன சூர்யகுல
வம்சோத்பவ சிறீசங்க
போதி புவனேகவாகு'* இதன் அர்த்தமாவது,

'திருவருட் சக்திகளான தெய்வயானையம்மனும், வள்ளியம்மனும் ஒருங்கே பொருந்த வீற்றிருக்கும் சுப்பிரமணியப் பெருமானின் திருவடித் தாரைகளை வணங்குபவனும், மன்னர்களுள் மன்னனும், செல்வங்களுடையவனும், மிகப்பரந்த பூமியிடங்கலுமுள்ள திசைகள் எல்லாவற்றிலும் பரவிய புகழையுடையவனும், மக்களுடைய தலைவனும் பெரிய தானங்களைச் செய்பவனும் சூரிய குலத்திலே தோன்றியவனும், சிறீ சங்கபோதி என்றும் விருதுப் பெயர் தரித்தவனுமான புவனேகபாகு' என்பதாகும்.

இலங்கையில் முதன்மையான பிரசித்தி பெற்ற வரலாற்றுப் புகழ் கொண்ட தலமாகும். இங்கு ஆலய பரிபாலனம் எல்லாக் கோவில்களுக்கும் முன் உதாரணமாக அமைந்துள்ளது. யாழ்.சைவ மக்கள் இந்தக்கோவிலோடு இணைந்து வாழ்வதை வழக்கமாகக் கொண்டவர்கள்.

நேரம் தவறாமை, வேதகாம முறைப்படி வழிபாடுகள் மற்றும் தினமும் ஆறுகாலப் பூசை என்பவை இங்கு கடைப்பிடிக்கப்பட்டுள்ளன. அர்ச்சனைக்கு இன்றும் ஒரு ரூபாவே அறவிடப்படுகின்றது. வருடாந்தம் சமய விழாக்கள் நடைபெறுகின்றன. எனினும் மகோற்சவகாலம் மிகவும் சிறப்பானது. கோவிலும் சூழலும் அழகாக பாரமரிக்கப்படுகின்றன. சுற்றுலாப் பயணிகள் பெரிதும் விரும்பி இங்கு வருகின்றனர்.

திருவிழாக் காலங்களில் கந்தனின் அலங்காரம் புகழ் பெற்றது. இதன் காரணமாகவே நல்லூர்க் கந்தனை 'அலங்காரக் கந்தன்'என அழைக்கின்றனர். நகைகள், பட்டாடைகள், மலர்கள் என்பனவற்றைக்கொண்டு இந்த அலங்காரம் செய்யப்படுகின்றது. இதனை 'சாத்துப்படி'எ ன்பர். மேலும் கந்தனுடன் வள்ளி தெய்வயானையும் அலங்கரிக்கப்பட்டு வருவர். இந்த அலங்காரத்துடன் பவனிவரும் வாகனமும் விதம் விதமாகக் காணப்படும். உற்சவத்தை நடத்தும் குருமாரும் விசேட வஸ்திரங்களை அணிந்திருப்பர்.

'செல்லூர் பொதிய மலைதா கைத்தியன் செந்தமிழின்
சொல்லூ ரமுதஞ் சுவைத்திட வேவந்த தோற்றமென்ன
பல்லூ ரவரும் பராவும் பலவலங் காரமுடன்
நல்லூ ரிரதம் வருங்காட்சி காண்பவர் ஞானிகளே'

*திரு நல்லூ ரலங்காரம்*
*புலோலி தியாகராசபிள்ளை.*



இருபத்து நான்காம் நாள் தேர்த்திருவிழாவாகும். அதிகாலையில் எட்டுத் திசையிலிருந்தும் பக்தர்கள் வருவர். காலையில் பூசை, அபிசேகம் முதலியவை காலக்கிரமந் தவறாது நிறைவேறிய பின்னர், நல்லூர் ஆலயத்திலுள்ள ஆறு அசையாமணிகள் ஒருங்கே ஒலிக்க மணிக்கூட்டுக் கோபுரக் கடிகாரம் அடிக்கும். அழகுக்கந்தன் மரச் செதுக்கல் நிறைந்த தேரில், ஆறுமுக சுவாமியாக வலம்வருவதை நாம் காண்போமே!

'நல்லையாஞ் செல்வ நகரிடைத்
தொல்லையோர் போற்றத் துலங்கு வேலவனே'
*குகதாசர் சபாரத்தின முதலியார்*

## நல்லை நகர் ஆறுமுகன் தேரில் வருகின்றான்!

தொன்மை மிகு நல்லூரில்
கோவில் கொள்ளும் ஆறுமுகன்
பொன்ணொளிரும் தேரிலமர்ந்து
எங்களுக்கருள வருகின்றான்!

மன்னர் ஆண்ட நல்லை நகரில்
தேரில் இவர்ந்து வருகின்றான்!
மன்னர் மன்னன் ஆறுமுகன்
தேரில் அமர்ந்து வருகின்றான்!!

நல்லை வளர் ஆறுமுகன்
தேரில் இவர்ந்து வருகின்றான்!
வள்ளி தெய்வயானையுடன்
தேரில் இவர்ந்து வருகின்றான்!

எழில் கொஞ்சும் ஆறுமுகன்
தேரில் அமர்ந்து வருகின்றான்!
அழகொளிரும் தேவியருடன்
தேரில் இவர்ந்து வருகின்றான்!

அலங்கரித்த தேரிலமர்ந்து
ஆறுமுகனின்று வருகின்றான்!
அன்பரிழுக்கும் தேரில் இவர்ந்து
ஆறுமுகனின்று வருகின்றான்!

அரோகரா என்று கூவி
இழுக்கும் தேரில் வருகின்றான்!
அன்பர் கூடி வடம் பிடித்து
இழுக்கும் தேரில் வருகின்றான்!

எங்கள் துன்பம் தீர்ப்பதற்கே
தேரில் இவர்ந்து வருகின்றான்!
எங்கள் இடர்கள் தொலைப்பதற்கே
தேரில் இவர்ந்து வருகின்றான்!

எங்கள் தடைகள் மறையும் படி
தேரில் விரைந்து வருகின்றான்!
எங்கள் தலைகள் நிமிரும்படி
தேரில் விரைந்து வருகின்றான்!

எங்கள் உரிமை நிலைக்கும்படி
தேரில் இவர்ந்து வருகின்றான்!
எங்கள் பெருமை செழிக்கும் படி
தேரில் இவர்ந்து வருகின்றான்!

எம்மினத்தை வாழ வைக்கத்
தேரில் இன்று வருகின்றான்!

எம்மினத்தை ஆள வைக்கத்
தேரில் இன்று வருகின்றான்!

ஆறுமுகனின் பெருமை போற்றி
ஆடிப்பாடிப் பணிகுவோம்!
ஆறுமுகனின் அருளைப் போற்றி
கூடி ஆடிப் பணிகுவோம்!

எம்மினத்தை வாழ வைக்க
அவனை வேண்டிப் பணிகுவோம்!
எம்மினத்தை மகிழ வைக்க
அவனை வேண்டிப் பணிகுவோம்!

ஆறுமுகனின் ஆடல்கள் பற்றி
போற்றிப் பாடிப் பணிகுவோம்!
ஆறுமுகனின் கருணை பற்றிப்
போற்றிப் பாடி பணிகுவோம்!

வயலூர் முருகன்

# ஒரு வெற்றிக்கு பின்னால்...!



பரமேஸ்வரன்

சுதந்திர இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாக யாழ்ப்பாணத்திலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்தது . 1956 ஆம் ஆண்டு எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

"நான் பதவிக்கு வந்தால் 24 மணித்தியாலத்துக்குள் தனிச்சிங்களச்சட்டத்தை அமுல்படுத்துவேன்" என்ற இனவாத பிரசாரத்துடன் பண்டாரநாயக்கவால் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியால் 1956 முதல் 2015 வரை யாழ்ப்பாணத்தில் ஒரு ஆசனத்தைக்கூட பெற்றுக் கொள்ள முடியவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவர்களாக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, மகிந்த ராஜபக்ச போன்றோர் தலையால் கிடங்கு கிண்டியும் ஒருபோதும் யாழ்ப்பாணத்தில் அவர்களால் தேர்தலில் தங்கள் கட்சியை வெல்லவைக்க முடியவில்லை. அல்பிரட் துரையப்பா, விநோதன் போன்றவர்களை யாழ் மாவட்ட அமைப்பாளர்களாக நியமித்து அவர்கள் மூலம் யாழ்ப்பாண மக்களின் மனங்களை கவரும் வகையில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்ட போதும் யாழ்ப்பாணத்தில் ஒரு ஆசனத்தைக்கூட சுதந்திரக்கட்சியால் பெற முடியவில்லை.

1970-77 காலப்பகுதியில் யாழ்ப்பாண விவசாயிகள் பொருளாதார ரீதியாக வெகுவாக முன்னேற்றமடைந்தனர். இந்தக்காலப்பகுதியில் தான் யாழ்ப்பாண விவசாயிகள் கல் வீடு காட்டினர்; சாதாரண வீடுகளல்ல சற்று பெரிய நான்கு அல்லது ஐந்து அறைகளுடன் கூடிய பெரிய வீடுகளையும் சாதாரண விவசாயிகளால் கட்ட முடிந்தது. லொறி லொறியாக வெங்காயமும் மிளகாயும் தென்னிலங்கைக்கு எடுத்துச்செல்லப்பட்டன. யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அமைச்சர்களுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. அமைச்சர்களுக்கு காசுமாலை, வெங்காயமாலை என்பனவும் அணிவிக்கப்பட்டன.

இதனால் 1977 பொதுத்தேர்தலில் அப்போதைய ஆளும் கட்சியான சுதந்திரக் கட்சி , யாழ்ப்பாணத்தில் மகத்தான வெற்றிபெறும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் யாழ்ப்பாண மக்கள் அந்தத் தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணியை அமோக வெற்றி பெறச்செய்தனர்; தமிழர் விடுதலைக்கூட்டணி எதிர்க்கட்சி அந்தஸ்தையும் பெற்றுக்கொண்டது.

2020 ஆம் ஆண்டு இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக யாழ்ப்பாண மக்கள் ஸ்ரீலங்கா சுதந்தி ரக்கட்சி பிரதிநிதியாக அங்கஜன் இராமநாதனை நாடாளுமன்றுக்கு தெரிவு செய்துள்ளனர். எவரும் எதிர்பாராவகையில், இந்த வெற்றியை சுதந்திரக்கட்சி பெற்றுள்ளது. ஒருவகையில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிளவும் இந்த வெற்றிக்கு ஒரு காரணம்.

1948 இன் பின்னரான இலங்கை வரலாற்றைப் பார்க்கும் போது, அறுதிப்பெரும்பான்மை பெற்ற ஆட்சியாளர்கள் சர்வாதிகாரப்போக்குடன் நடந்து கொண்டதையும், சிறு பான்மையினரை ஒடுக்கும் வகையில் சட்டங்களை நிறைவேற்றி அவற்றை நடைமுறைப்படுத்தியதையும் கடந்த கால வரலாறு தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. 1956 ஆம் ஆண்டு தனிச்சிங்கள கோஷத்துடன் களமிறங்கிய பண்டாரநாயக்க அறுதிப்பெரும்பான்மை பெற்றார். சிங்கள மக்களுக்கு அளித்த வாக்குறுதியின்படி, தனிச்சிங்களச் சட்டத்தை அவர் அமுல்படுத்தியதுடன், தமிழர்களுக்கு எதிரான வன்முறையையும் கட்டவிழ்த்து விட்டார். சுதந்திர இலங்கையில் பெரும் இரத்த ஆறு ஓடியது.

1970 ஆம் ஆண்டு இடதுசாரிகளின் ஆதரவுடன் அறுதிப்பெரும்பான்மை பெற்று ஆட்சியமைத்த சிறிமாவோ 19 வது சரத்தை நீக்கி, சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டிருந்த காப்பீட்டு உரிமையை இல்லாமல் செய்ததுடன் தமிழர்களை ஒடுக்க முற்பட்டதன் காரணமாக தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர். தமிழர்களின் போராட்டத்தை இரும்புக்கரம் கொண்டு அடக்க அப்போதைய அரசு முயற்சித்தது. மாவைசேனாதிராசா, காசி ஆனந்தன், இரகுபதி, வண்ணை ஆனந்தன் உட்பட பல தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர்.

1977 ஆம் ஆண்டு ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றிய ஜே.ஆர் ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்கி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை அறிமுகப்படுத்தினார். 'போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்' என எதிர்க்கட்சித்தலைவர் அமிர்தலிங்கத்துடன் வீரம் பேசினார். ஜே .ஆரின் காலத்தில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகள் உலகம் அறிந்த ஒன்று.

பிரதமர் மகிந்த ராஜபக்சவும் அரசமைப்புக்கான 19,13 ஆகிய திருத்தங்கள் இரண்டையும் நீக்குவதற்கு ஆணை தாருங்கள் என தேர்தல் பிரசாரத்தின் போது மக்களிடம் கோரிக்கை விடுத்தார். சிங்கள மக்களும் அவர் எதிர்பாராத அளவு மகத்தான ஆணை வழங்கியுள்ளனர்.

1977 ஆம் ஆண்டு எவ்வாறு மக்கள் ஜனநாயகரீதியாக ஒரு சர்வாதிகார ஆட்சிக்கு வழி வகுத்தார்களோ அதற்குச் சற்றும் குறையாத ஒரு சர்வாதிகார ஆட்சி அமைவதற்கு 2020 தேர்தலிலும் மக்கள் ஆணை வழங்கியுள்ளனர்.

இந்த மகத்தான வெற்றியை வைத்துக்கொண்டு ஜனாதிபதியும் பிரதமரும் என்னசெய்யப்போகிறார்கள் என்பதற்கு காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

**2020 ஆம் ஆண்டு இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக யாழ்ப்பாண மக்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பிரதிநிதியாக அங்கஜன் இராமநாதனை நாடாளுமன்றுக்கு தெரிவுசெய்துள்ளனர். எவரும் எதிர்பாராதவகையில், இந்த வெற்றியை சுதந்திரக்கட்சி பெற்றுள்ளது. ஒருவகையில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிளவும் இந்த வெற்றிக்கு ஒரு காரணம்.**

## வாயில்லா ஜீவனை வதைத்து அரசியல் செய்யாதீர்!

தமிழர்களின் விடுதலைப் போராட்டம் துரோகத்தனத்தால் வீழ்த்தப்பட்டதென்பதை எவருமே மறுக்க முடியாது. போராட்டம் மௌனிக்கப்பட்ட பின் ஆளுக்கொரு கட்சி என்று தமிழர்களுக்கிடையே அரசியல் செய்கின்றனர். நல்லதைச் செய்யுங்கள்; மக்கள் வரவேற்பார்கள். இருந்தும் பதவி வெறிபிடித்து திரியும் சிலர் இறைவனுக்கே பொறுக்காத பாதகச் செயலை செய்தது வேதனையிலும் வேதனை.

கடந்த 07.08.2020 திகதிய உதயன் பத்திரிகை பக்கமொன்றில் வெளியிடப்பட்ட மாட்டின் படத்தைப் பார்த்து உண்மையிலேயே கண்ணீர்விட்டு அழுதவர்களில் நானும் ஒருவன். கட்சியின் சின்னம் பெயர் என்பவற்றை ஒரு பசுமாட்டின் உடம்பில் குறிசுட்டு மட்டக்களப்பு சரஸ்வதி வித்



தியாலயம் முன்பாக கட்டடப்பட்டது. உண்மையிலேயே இது ஒரு அரசியல் கட்சிக்காரர்களது மனிதாபிமானமற்ற செயற்பாடாகக் கொள்ளத் தக்கதே. வாய் பேச முடியாத ஜீவனை உங்கள் கரங்கள் அக்கினி கம்பிகளால் துடி துடிக்க வைத்தள்ளதே இப்படி கேடு கெட்ட அரசியல் செய்து பிழைப்பதை விட யாசகம் பெற்று வாழலாம். சைவ மக்கள் பசுவில் இருந்து பால் கறந்து இறைவனுக்கு வழங்கி வழிபடும் பெருமையுடையவர்கள் மாடுகளுக்கு நன்றி செலுத்த மாட்டுப் பொங்கல் செய்பவர்கள். ஆனால் இந்த படுபாதாள கொடுங்கோல் செயலுக்கு என்ன பதில் கூறப் போகின்றீர்கள்?

உங்கள் பதவி வெறிக்கு இந்த மாட்டை வதைக்க யார் உரிமை கொடுத்தது? இந்த மாடு விட்ட கண்ணீர் நிச்சயம் உங்களைத் தண்டித்தே தீரும். வாய்பேச முடியாத ஜீவன்களை நேசிக்கும் உறவுகள் இந்தப் பாதகச் செயலுக்காக ஒரு கண்டனத்தையாவது தெரிவித்து சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும். இல்லையெனில் இனிவரும் காலங்களில் மனிதர்களை மிரட்டி மனித உடம்பிலேயே கட்சிச் சின்னம் சூட்டி தமது பதவிவெறியைக் காட்டுவார்கள்.

அ.அன்பு, வரணி.

# இந்தியாவின் அனுமதியின்றி 13இனை நீக்கவே முடியாது!

## இராதாகிருஷ்ணன் அழுத்தம் திருத்தம்

**கொழும்பு, ஓக. 17**

**இந்தியாவின் அனுமதி இல்லாமல் இலங்கை அரசால் அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை மாற்றமுடியாது என்று தமிழ் முற்போக்கு கூட்டணி நேற்று அறிவித்துள்ளது.**

நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அரசமைப்பின் 13 மற்றும் 19ஆவது திருத்தச்சட்டங்கள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே கூட்டணியின் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அரசமைப்பின் 13 மற்றும் 19 ஆவது திருத்தச்சட்டங்கள் இந்த நாட்டுக்கு அவசியம். அவற்றை முழுமையாக நீக்குவதற்கு நாம் கடும் எதிர்ப்பை வெளியிடுகின்றோம்.

13ஆவது திருத்தச்சட்டம் இந்த நாட்டுக்கு அவசியம் என்பதை இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளும் 1987இல் ஏற்றுக்கொண்டன. ஜே.ஆர். ஜயவர்தன, ராஜீவ் காந்தி இணைந்தே அதனை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தனர்.

எனவே, இந்தச் சட்டத்தை மாற்றுவதாக இருந்தால் இந்தியாவின் அனுமதி இல்லாமல் அதனைச் செய்ய முடியாதுஎன்பதுஅனைவருக்கும் தெரிந்த விடயம். ஆகவே, 13 விடயத்தை இந்தியா கவனித்துக்கொள்ளும். நாமும் அதற்கு ஆதரவாக நிற்போம். 19ஆவது திருத்தச் சட்டத்தை இந்த அரசாங்கத்தால் மாற்றமுடியும். நல்லவிதத்தில் மாற்றியமைத்தால் ஆதரவு வழங்கப்படும். முழுமையாக இல்லாதொழிக்க ஆதரவு வழங்கப்படாது' - என்றார். (ம-44)

# சிறுமி பாலியல் துஷ்பிரயோகம்; ஒருவர் கைது

பத்து வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் 41 வயதான புத்தளம் பெரியகுளம் பகுதியை சேர்ந்த நபர் எனக் கூறப்பட்டுள்ளது.

புத்தளம் பகுதியில் 10 வயதான சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக குறித்த நபர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ப)

நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

2020 ஆம் ஆண்டின் முதலாம் அரையாண்டுக்கான படிவம் II அறிக்கை (பங்களிப்புத் தொகை விபரம்) சமர்ப்பித்தல்

யாருக்கு ஏற்புடையது
ஆர்-1 பணம் அனுப்பும் படிவத்தின் மூலம் பங்களிப்புத் தொகைச் செலுத்தும் தொழில் வழங்குநர்கள்

இறுதித் திகதி
2020 ஆகஸ்ட 31 ஆம் திகதிக்கு முன்னர்

ஒப்படைக்க வேண்டிய ஆவணங்கள்
✓ சரியாக மற்றும் தெளிவாக பூரணப்படுத்தப்பட்ட 2020 ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டு அறிக்கை (படிவம் II)
✓ சாராம்சப் பக்கங்கள்
✓ இணக்கக் கூற்றுக்கள்

தங்களது விசேட கவனத்திற்கு
1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை சட்டத்தின் மற்றும் 1993 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க திருத்த சட்டத்தின் பிரகாரம் முழுமையான மற்றும் சரியான அறிக்கைகளை உரிய தினத்திற்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் அறிக்கைகளுக்கு தாமதமாகும் ஒவ்வொரு மாதத்திற்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்காக அறிக்கையில் குறிப்பிடப்படும் ஆறுமாத மொத்தப் பங்களிப்புத் தொகையிலிருந்து 1% தண்டப் பணமாக தொழில் வழங்குநர்களினால் செலுத்த நேரிடும் என்பதையும் தயவுகூர்ந்து கவனத்திற்கொள்ளவும்.

அறிக்கைகளை ஒப்படைக்க முடியுமான அலுவலகங்கள்

பிரதான அலுவலகம்
முகாமையாளர் - அங்கத்துவக் கணக்கு பாரிய வகை
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை
முதலாம் மாடி, தொழில் செயலகம்,
நாராஹேன்பிட்டி, கொழும்பு – 05
தொ.இல : 0112-369596
பெக்ஸ் : 0112-369779

கண்டி பிராந்திய அலுவலகம் D.E.F உள்ள ஊ.சே.நி இலக்கங்களுக்கு
பிராந்திய முகாமையாளர் - கண்டி
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை
இல 79, வீடமைப்புச் செயலகம்,
யட்டிநுவர வீதி, கண்டி.
தொ.இல : 081-2232446
பெக்ஸ் : 081-2233793

கொழும்பு கோட்டை அலுவலகம்
ஊ.ந.பொ. நி. அலுவலகம்
இல 85, சீ பேன்க்,
ஹேமாஸ் கட்டிடம், யோர்க் வீதி,
கொழும்பு – 01
தொ.இல : 0112-321184
பெக்ஸ் : 011-2321184

மாத்தளை பிராந்திய அலுவலகம் (G.H.WI) உள்ள ஊ.சே.நி இலக்கங்களுக்கு
பிராந்திய முகாமையாளர் - மாத்தறை
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை
இல 63/2, காலிதாஸ வீதி, மாத்தறை.
தொ.இல : 041-2237607
பெக்ஸ் : 041-2231877

தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

## செஞ்சோலையில் கொல்லப்பட்ட
# சிறுவர்களுக்கு நீதி கோரி ஜேர்மனியில் கவனவீர்ப்பு



ஜேர்மனி, ஓக.17

செஞ்சோலை வளாகத்தில் கொல்லப்பட்ட சிறுவர்களுக்கு நீதி கோரும் முகமாக ஜேர்மனியில் கவனவீர்ப்பு நிகழ்வொன்று முன்னெடுக்கப்பட்டது.

வன்னி - வள்ளிபுனம் பகுதியில் அமைந்திருந்த செஞ்சோலை வளாகத்தில் இலங்கை விமானப்படைத் தாக்குதலில் 53 சிறுவர்கள் உட்பட 62 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்று 14 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், நினைவு நாள் நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை தமிழர் தாயகமெங்கும் நினைவு கூரப்பட்டது.

இந்த நிலையில், இப்படுகொலைக்கு நீதி கோரும் முகமாக ஜேர்மனியின் தலைநகரமான பேர்லினில் உள்ள நாடாளுமன்றத்துக்கு முன்பாக பேர்லின் வாழ் தமிழ் உணர்வாளர்களால் கவனவீர்ப்பு நிகழ்வொன்று முன்னெடுக்கப்பட்டது. நிகழ்வில் தாயகத்தில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வுக்கு நிகராக கொல்லப்பட்ட ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் மாதிரி கல்லறைகள் அமைக்கப்பட்டு அனைத்து மக்களுக்கும் சம்பவம் குறித்துத் தெளிவுபடுத்துவதற்காக ஆங்கிலத்திலும் ஜேர்மன் மொழியிலும் துண்டுப்பிரசுரம் வழங்கப்பட்டது. அத்துடன் இந்தச் சம்பவம் தொடர்பாக தமிழ் இளையோர் அமைப்பினரால் விளக்கமளிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ப)

# சிறுவர் பாதுகாப்பில் பல்வேறு குறைபாடு!

## கணக்காய்வாளர் நாயக திணைக்களம் தெரிவிப்பு

**கொழும்பு, ஒகஸ்ட் 17**
**சிறுவர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதாக, கணக்காய்வாளர் நாயக திணைக்களம் தெரிவித்துள்ளது. ஆங்கில நாளிதழொன்று கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தை மேற்கோள்காட்டி இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.**

இதன்படி, கடந்த 9 வருடங்களில், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு 48 ஆயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. எனினும், அவற்றில் 413 முறைப்பாடுகள் குறித்து மாத்திரமே விசாரிக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம் கூறியுள்ளது. அத்துடன், குறித்த 413 முறைப்பாடுகளில், 185 வழக்குகள் மாத்திரமே உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கடந்த வருடம் 16 வயதுக்கு உட்பட்ட பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் குறித்து 305 முறைப்பாடுகள் பொலிஸில் முன்வைக்கப்பட்டிருந்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இருந்த போதிலும், அவற்றில் 296 முறைப்பாடுகள் குறித்த விசாரணைகளே தற்போது நிலுவையில் உள்ளன என்று கூறப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், சிறுவர் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான சட்டங்களை அமுல்படுத்துவதில் குறைபாடுகள் காணப்படுவதாக, கணக்காய்வாளர் நாயக திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஒக.17
இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக் கல்வி நிகழ்ச்சித்திட்டத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரிக்கு பிரவேசித்து எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு பிறவுண் வீதி கொக்குவிலில் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாண பிராந்திய நிலையத்திலோ அல்லது சிறிய குருமட வீதி சாவற்கட்டு, மன்னாரில் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக மன்னார் கற்கை நிலையத்திலோ தொடர்புகொண்டு விண்ணப்பிக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## களனிப் பல்கலையினது கற்றல் நாளைமறுதினம்

கொழும்பு, ஒக. 17
களனிப் பல்கலைக் கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் நாளை மறுதினம் புதன்கிழமை ஆரம்பிக்கப்படும் என களனி பல்கலைக் கழகத்தின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, விடுதி வசதியைப் பெற்றுக்கொண்டுள்ள மாணவர்கள் நாளை மாலை 5 மணிக்கு முன்னராக விடுதிக்கு வருகை தர வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## காத்தான்குடியில் மூவருக்கு டெங்குத் தொற்று அறிகுறி!

கொழும்பு, ஒக. 17
காத்தான்குடியில் மூன்று பேருக்கு டெங்குத் தொற்று அறிகுறி காணப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.



காத்தான்குடி சுகாதார அலுவலக பிரிவிலுள்ள காத்தான்குடி முதலாம் குறிச்சி அல் அக்ஷா வீதியில் இருவருக்கும் புதிய காத்தான்குடி ஏ. எல். எஸ். மாவத்தையில் ஒருவருக்குமாக மூன்று பேருக்கு டெங்குத் தொற்று அறிகுறி அவதானிக்கப்பட்டுள்ளது. (ம)


## யானை தாக்கி ஒருவர் இறப்பு

கொழும்பு, ஒக. 17
ஹொரவபொத்தானை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ரஸ்னகவெள பிரதேசத்தில் யானை தாக்கியதில், ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. ரஸ்னகவெள பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம)

## குளவி கொட்டியதால் 10 பேர் மருத்துவமனையில்

கொழும்பு, ஒக. 17
பசறை - எல்டொப் பகுதியில் குளவிக்கொட்டுக்கு இலக்காகி 10 பேர் நேற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.



தேயிலைத் தோட்டத்தில் தொழில் செய்து கொண்டிருந்த ஒரு பெண் உள்ளிட்ட 5 தொழிலாளர்களும், இந்தத் தொழிலாளர்களுக்கு உதவச்சென்ற ஐந்து இளைஞர்களும் குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## 176 இலங்கையர்கள் நாடு திரும்பினர்

கொழும்பு, ஒக. 17
கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக மாலைதீவில் தங்கியிருந்த 176 இலங்கையர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை நாடு திரும்பியுள்ளனர்.

சிறீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விசேட விமானம் ஒன்றின் மூலமே அவர்கள் நேற்று நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர். இதனையடுத்து, அவர்களுக்கு விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, பரிசோதனை முடிவுகள் வரும் வரையில், அவர்கள் அனைவரும் விமான நிலையத்தை அண்மித்துள்ள விடுதிகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பரிசோதனை முடிவுகள் வெளிவந்ததும் அவர்களை முகாம்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம)

## உலக எண்ணெய் தேவை 9மில். பரல்களால் வீழ்ச்சி

கொழும்பு, ஒக. 17
கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக சர்வதேச ரீதியாக பொருளாதாரம் பின்னடைவை எதிர்நோக்கியுள்ள நிலையில், உலக எண்ணெய் தேவை 9.1 மில்லியன் பரல்களால் வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

ஒரு மாதத்திற்கு முன்னர் மதிப்பிடப்பட்டதை விட இது அதிக அளவிலான வீழ்ச்சி என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் 'ஒப்பெக்' என அழைக்கப்படும் எண்ணெய் உற்பத்தியை ஏற்றுமதி செய்யும் நாடுகளின் அமைப்பு 4 சத வீதத்தால் இந்த ஆண்டு வீழ்ச்சியை எதிர்நோக்க வேண்டி வரும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் சர்வதேச ரீதியாக மேலும் பாதிப்பை ஏற்படுத்தும் நிலையில், இந்த நிலை மேலும் சிக்கலை ஏற்படுத்தலாம் என 'ஒப்பெக்' தெரிவித்துள்ளது. அதேவேளை, முன்னணி அபிவிருத்தி நாடுகளின் பொருளாதார நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்படும் நிலையில், எண்ணெய்த் தேவை 90.6 மில்லியன் பீப்பாய்களாகக் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில், எதிர்வரும் நாட்களில் வர்த்தக எண்ணெய் கையிருப்பு அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாக 'ஒப்பெக்' இன் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. (ம)

## நடைமுறைக்குச் சாத்தியமான அமைச்சரவை தற்போதில்லை

### ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 17
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் அரசில் நடைமுறைக்கு சாத்தியமான அமைச்சரவை நியமனங்கள் வழங்கப்படவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ள ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் அமைச்சரவையில் இடைவெளி காணப்படுவது போன்று தோன்றுகின்றது. வழமைக்கு மாறான ஓர் அமைச்சரவை நியமனத்தை கோத்தாபய ராஜபக்ஷ உருவாக்குவார் என்று எதிர்பார்த்திருந்த நிலையில், நாங்கள் சற்றும் எதிர்பார்க்காத விதத்தில் இம்முறை அமைச்சரவை நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இராஜாங்க அமைச்சர் செகான் சேமசிங்க மற்றும் அஜித் நிவாட் கப்ராலிடம் சில நிறுவனங்களின் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ள போதிலும், முக்கியத்துவம் வாய்ந்த திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடமும், அமைச்சர் விமல் வீரவன்சவிடமுமே இருக்கின்றன.

விதைகள், பத்திக் வேலைப்பாடுகள், மட்பாண்ட உற்பத்திகள் போன்ற விவகாரங்கள் தொடர்பில் அமைச்சுக்கள் நியமிக்கப்பட்டுள்ள போதிலும், தொழிநுட்பம் தொடர்பில் எந்த அமைச்சுக்களும் நியமிக்கப்படவில்லை. ஏற்கனவே அவ்வாறு ஓர் அமைச்சு நியமிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போதைய அரசு அதனை நீக்கியுள்ளது. தற்போதைய சூழ்நிலையில் தொழிநுட்பம் என்பது அவசியமான ஒன்றாகும்.

இந்நிலையில் அரசாங்கம் ஏன் இவ்வாறு ஒரு முடிவெடுத்துள்ளது என்பது தொடர்பில் எமக்கு விளக்கமில்லை. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவும் கடந்த காலங்களில் தொழிநுட்பம் தொடர்பில் சிறந்த விளக்கம் பெற்றவர் போன்றே பேசி வந்தார். ஆனால், அதற்கென ஒரு அமைச்சை நியமிக்கவில்லை என்றார். (ம)

# ஐ.தே.கவுக்குள் முழு சீரமைப்பு அவசியம்!

## முஜிபுர் ரஹ்மான் தெரிவிப்பு

**கொழும்பு, ஓக. 17**

**ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் மட்டுமன்றி, ஏனைய பதவிகளிலும் புதியவர்களை நியமிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக நாடாளுமன்றுக்கு தெரிவான முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த தாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் மட்டுமன்றி, ஏனைய பதவிகளிலும் புதிய வர்களை நியமிக்க வேண்டும். இதனை மேற்கொள்ளத் தவறினால் அந்தக் கட் சிக்கு எதிர்காலமொன்று இருக்காது. சரியாக இருந்தால், இந்த பொதுத்தேர் தல் முடிவுகள் வெளிவந்தவுடன், காலை யிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் உள்ளிட்ட அந்தக் கட்சியின் முக்கியஸ்தர்கள் தங்களின் பதவிகளைத் துறந்திருக்க வேண்டும். இவர்களால் தான் இந்தக் கட்சிக்கு இன்று இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இவர்கள் பதவி விலகாமல் இனியும் அந்தக் கட்சிக்கு எதிர்காலமொன்று இருக்காது என்பது தான் உண்மையாகும்' என்றார். (ம)

# கொரோனாத் தொற்று: பரிசோதனை 19 இல்

சாவகச்சேரி, ஓக.17

கொடிகாமம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக் குட்பட்ட மக்களுக்கான கொரோனாப் பரிசோதனை நாளை மறுதினம் புதன்கிழமை காலை கொடிகாமம் பஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள சாவகச்சேரி பிர தேச சபைக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

30 பேருக்கு மட்டுமே பரிசோதனைகள் மேற்கொள் ளப்படவுள்ளமையால் பரிசோதனையில் பங்குபற்ற விரும்பும் பொதுமக்கள் காலை 7 மணிக்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேசத்தில் கொரோனாத் தொற்று இல்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையில் சுகாதார மருத்துவ அதிகாரியின் ஏற்பாட்டில் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் வாரத்தில் ஒருநாள் பரிசோத னைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த வாரம் நாவற்குழி பிரதேசத்தில் மேற்கொள்ளப் பட்ட பரிசோதனையில் பங்குபற்றிய 30 பேருக்கும் தொற்று இல்லையென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ-9)

# சபைக் கூட்டம்

கொடிகாமம், ஓக.17

சாவகச்சேரி பிரதேச சபையின் மாதாந்த சபைக் கூட்டம் எதிர்வ ரும் 21 ஆம் திகதி வெள் ளிக்கிழமை நடைபெற வுள்ளது.

பிரதேச சபையின் சபா மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு தவிசாளர் க. வாமதேவன் தலை மையில் கூட்டம் நடை பெறவுள்ளது. (ஐ-159)



# மைத்திரிக்கு பதவி உறுதி

கொழும்பு, ஓக. 17



முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுக்கு தற்போதைய அரசில் ஒரு குறிப்பிடத்தக்க பதவி நிச்சயம் வழங்கப்படும் என்று நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எல்பிட்டியவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றை யடுத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திரக் கட்சியையும் பொதுஜன பெரமுனவினையும் ஒரே கட்சியாக இணைக்க வேண்டும். முன்னாள் ஜனா திபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு புதிய அமைச்சர வையில் எந்த அமைச்சுப்பதவியும் வழங்கப்பட வில்லை. மைத்திரிபால சிறிசேனவிற்கு வழங்குவதற் காக முன்மொழியப்பட்டிருந்த அமைச்சுப் பதவியை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மற்றுமொரு உறுப்பின ருக்கு வழங்குமாறு அவர் தெரிவித்திருந்ததாக சுதந்தி ரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்திருந்தன. சுற்றுச்சூழல் அமைச்சுப் பதவியை மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்குவதற்கு முன்மொழியப்பட்டிருந்தது. அதன்பின் னர் அந்த அமைச்சுப் பதவி மஹிந்த அமரவீரவுக்கு வழங்கப்பட்டது-என்றார். (ம)

# சுயதனிமைப்படுத்தலில் 1,051 இலங்கையர்கள்

கொழும்பு, ஓக. 17

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வந்துள்ள ஆயி ரத்து 51 இலங்கையர்கள் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள் என காலி மாவட்ட தொற்று நோய் வைத்திய நிபுணர் மருத்துவர் வெனுரகே. சிங்க தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாமென்ற சந்தேகத்தின்பேரில் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்ப டுத்தப்பட்டுள்ளவர்கள் தொடர்பாக கருத்து தெரிவிக் கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'காலி மாவட்டத்திலுள்ள கொக்கல மற்றும் கொஸ்கொட ஆகிய பிரதேசங்களிலுள்ள ஹோட்டல்களிலேயே ஆயிரத்து 51 இலங்கையர்கள் சுயதனிமைப்படுத்த லுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். மாலைதீவிலிருந்து வருகை தந்த 491 இலங்கையர்களும் இந்தியாவிலி ருந்து வருகைதந்த 163 பேரும் டுபாயிலிருந்து வருகை தந்த 142 பேரும் ஆஸ்திரேலியாவிலிருந்து வருகைதந்த 255 இலங்கையர்களுமே இவ்வாறு சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் இராணு வத்தினரின் மேற்பார்வையின் கீழ் தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர்' என்றார். (ம)

# ஐ.தே.க. தலைமைக்குள் மோதல்; ரணிலுக்கு எதிராக போர்க்கொடி

### செயற்குழுக் கூட்டத்தைப் புறக்கணித்தார் அகிலவிராஜ்

கொழும்பு, ஓகஸ்ட் 17

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக அக்கட்சியின் பொதுச் செய லாளர் அகிலவிராஜ் காரியவசமும் போர்க்கொடி தூக் கியுள்ளார். கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடை பெற்ற செயற்குழுக் கூட்டத்தில் அவர் பங்கேற்க வில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அகிலவிராஜ் காரியவசத்திற்கும் இடையில் ஏற்பட்டுள்ள கருத்து மோதலை அடிப்படை யாகக் கொண்டே அவர் செயற்குழுக் கூட்டத்தில் கலந் துகொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலை வர் பதவியிலிருந்து விலகத் தீர்மானித்துள்ளார் என்று அகிலவிராஜ் ஊடகங்களிடம் கூறியமை தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க, கடுமையாக அவரைச் சாடினார் என்று தெரியவருகின்றது.

இந்த நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் பதவியை முன்னாள் அமைச்சர் சாகல ரத்நா யக்கவுக்கு வழங்குவது குறித்து ரணில் விக்கிரமசிங்க கவனம் செலுத்தி வருகின்றார் என்றும் பேசப்படுகின் றது. சாகல ரத்நாயக்க, மிக நீண்டகாலமாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை எதிர் பார்த்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-22)

# சு.கவின் புதிய தலைவரை ஆதரிப்பதக்கு நான் தயார்

## சந்திரிக்கா தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 17

நான் அரசியலுக்கு மீண்டும் வரப்போவதில்லை ஆனால் இலங்கை சுதந்திரக் கட்சியின் புதிய தலை வரை ஆதரிக்கத் தயாராக உள்ளேன் என்று முன் னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

விசேட காணொளி ஒன்றினை வெளியிட்டுள்ள அவர், சுதந்திரக் கட்சியை மீண்டும் ஒருங்கிணைத்து புதிய தலைவருடன் கட்சியை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும் என்றும் அழைப்புவிடுத்தார்.

இதேவேளை பொதுஜன பெரமுனவுடன் கைகோர்த்து, ஓர் அரசாங்கத்தை உருவாக்குவதற்கான சுதந்திரக் கட்சியின் முடிவையும் அவர் கண்டித்தார். அத்தோடு ராஜபக்ஷக்கள் பின்பற்றும் அரசியலை ஒருபோதும் ஆதரிக்கமாட்டேன் என்றும், இருப்பினும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஒரு நல்ல தலைவர் என்றும் சந்தி ரிகா குமாரதுங்க குறிப்பிட்டார். (ம)


# நாங்கள் கேட்டது அமைச்சுப் பதவி கிடைத்ததோ இராஜாங்க அமைச்சு

கொழும்பு, ஓக. 17

புதிய அரசில் எனக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியை நாங்கள் கோரியிருந்தபோதிலும் ராஜாங்க அமைச்சர் பதவியே வழங்கப்பட்டதாக சுதந் திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

வாராந்த சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ் வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக நிய மிக்குமாறு சுதந்திரக் கட்சி மூன்று பேரின் பெயர்களை பொதுஜன பெரமுனவுக்கு அனுப்பி இருந்தது. நிமல் சிறிபால டி சில்வா, மகிந்த அமரவீர மற்றும் எனது பெயர் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அத்துடன் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங் கும்போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய நடை முறைகளை நான் வரிசைப்படுத்தி அனுப்பி இருந் தேன். அதில் முதலில் ரோஹன லக்ஸ்மன் பியதாசவின் பெயரே குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் பொதுஜன பெரமுன சுரேன் ராகவனை தேசியப் பட்டி யலில் நியமித்தது - என்றார். (ம)



கொரோனா பெருந்தொற்றுக்கு முகம்கொடுக்கும் வகையில் இலங்கை – ஆஸ்திரேலியா ஒன்றிணைப் புத் திட்டத்தின் கீழ் ஒரு தொகுதி தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள் ஆஸ்திரேலிய பாதுகாப்பு ஆலோசக ரால் இலங்கை கடற்படைத் தளபதியிடம் அண்மையில் கையளிக்கப்பட்டன. (ம)

# 19ஐ மாற்றியமைக்க சஜித் அணி ஆதரவு!

**கொழும்பு, ஓக.17**

**அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக இல்லாதொழிக்க ஆதரவு வழங்க மாட்டோம். முன்னோக்கிப் பயணிப்பதற்குத் தடங்கலாக உள்ள விடயங்களை மாற்றியமைக்க ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.**

ஐக்கிய மக்கள் சக்தியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று ஞாயிற்றுக்கிழமை அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த கலாநிதி ஹர்ஷ டி சில்வா இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

அரசமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டம் ஊடாக நிறைய நன்மைகள் கிடைக்கப் பெற்றன. ஆனாலும் அதில் சிற்சில குறைபாடுகள் இருப்பதாக பரவலாக கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இவை தொடர்பில் கலந்துரையாடி சாதகமான முறையில் 19ஆவது திருத்தச் சட்டத்தை மாற்றியமைப்பதற்கு நாம் தயார்.

ஆனால் அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதன் பிரதான நோக்கங்களை மாற்றியமைப்பதற்கு முயற்சித்தால் அதற்கு ஆதரவு வழங்கமாட்டோம்.

நிறைவேற்று, சட்டவாக்க துறைகளுக்கு பகிரப்பட்டுள்ள அதிகாரங்களில் மாற்றம், வெளிநாட்டுக் குடியுரிமை கொண்ட ஒருவர் இந்த நாட்டு தேர்தலில் போட்டியிட அனுமதி வழங்கல் போன்ற திருத்தங்கள் இடம்பெற்றால் அவற்றுடன் உடன்படிமுடியாது.

அதேபோல் ஜனாதிபதியின் பதவிக் காலம், நாடாளுமன்றத்தின் ஆயுள்காலம் என்பவை 5 வருடங்களாக இருக்கவேண்டும். ஜனாதிபதியொருவர் இரண்டு தடவைகள் மாத்திரமே பதவி வகிக்கலாம் என்ற தற்போதைய நிலையும் மாறக்கூடாது. அரசமைப்புப் பேரவை, சுயாதீன ஆணைக்குழு, தகவல் அறியும் உரிமை ஆகியவை 19 இன் பிரகாரமே தொடரவேண்டும். அவற்றை இல்லாதொழிப்பதற்கு இடமளிக்கமுடியாது. எதிர்மறையான திருத்தங்களுக்கு நாம் எதிர்ப்புத் தெரிவிப்போம். ஆனால், நாட்டை முன்நோக்கி அழைத்துச் செல்வதற்கு நடைமுறைச் சிக்கலாக உள்ள காரணிகளைத் திருத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கப்படும். அதேவேளை, அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம், அவசர சட்டமூலங்களை கொண்டுவரமுடியாது. அதனால் 20 ஆவது திருத்தச் சட்டம் முன்வைக்கப்பட்டாலும் அது தொடர்பில் கருத்தாடலை உருவாக்குவதற்கும், நீதிமன்றம் செல்வதற்கும் வாய்ப்புகள் உள்ளன - என்றார். (எ-44)

# புலிகளைக் கட்டியெழுப்ப வெளிநாடுகளில் முயற்சி!

## பாதுகாப்புச் செயலர் கூறுகின்றார்

கொழும்பு, ஓக.16

புலிகள் அமைப்பை மீளக் கட்டியெழுப்புவதற்காக புலம்பெயர் தமிழர்கள் கடும் பிரயத்தனங்களில் ஈடுபட்டுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழ் டயஸ்போராக்களில் ஈழம் தொடர்பான கோட்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்குபவர்கள், புனர்வாழ்வளித்து சமூகமயப்படுத்தப்பட்டுள்ள இளைஞர், யுவதிகளைப் பயன்படுத்தி மீண்டும் தீவிரவாதத்தை உருவாக்குவதற்கு கடுமையாக முயற்சிக்கின்றனர்.

எம்மிடமுள்ள புலனாய்வுப் பிரிவுகளை உரியவகையில் பலப்படுத்தவேண்டும்.

அப்போதுதான் தீவிரவாதம் தலைதூக்குவதை தடுக்கக்கூடியதாக இருக்கும். கடந்த காலங்களில் 'இராணுவ வேட்டையில்' புலனாய்வுப் பிரிவு பலவீனப்படுத்தப்பட்டது.

இதனால்தான் தாக்குதல் (ஈஸ்டர்) சம்பவம்கூட இடம்பெற்றது. என்றார். (எ-44)




யோசேப் மேரி மதிவதனி
(தங்கச்சி)

யோசேப் வசந்தி

முல்லையும், மருதமும், பாலையும், நெய்தலும் கொண்ட - ஒரு
பிரதேசத்தில். **எழுதுமட்டுவாழ்** ஓர் சிறிய கிராமம்.
1990, ஆகஸ்ட் 17ஆம் திகதி அது ஒரு வெள்ளிக்கிழமை.
அன்றும் வழமைபோல் சேவலும், குயிலும் கூவ, பட்சிகள் கூட்டம்
ஓசை எழுப்ப, காகமும் கரைய, அணில்களும் கத்தி தாவ
பதட்டம் இல்லாமல் காலையும் விடிந்தது. - ஆனால்
நேரம் காலை 10.30 ஆக பலியெடுக்கும் இயந்திர வல்லூறுகள்
திடீரென குண்டை அள்ளி போட - அந்தோ பரிதாபம்
சகோதரிகள் இரத்தத்தில் தோய்ந்து பலியானார்கள்.
இந்த நாள் 30 வருடத்துக்கு முன் நடந்தது - ஆனால்
இன்று வரை எம் ஆன்மாவை உலுப்பி கொண்டேயிருக்கிறது.
அன்று ஆண்டவர் கூறிய "சிறுவர்களை என்னிடம் வர விடுங்கள்
அவர்களை தடுக்காதீர்கள்" என்பது இப்படியும் பொருந்துமோ?
உங்களை கொன்றவர்களை நிச்சயம் நீங்கள் மன்னித்திருப்பீர்கள்.
ஆனால் எம் இதயத்தின் காயத்தை நீங்கள் போக்கவில்லையே.
இன்றும் எண்பது வயதிலும் பெற்றவர்கள் கண்கலங்கி தடுமாறி - அந்த
காயத்தை போக்க முடியாமல் வலியோடு வாழ்கிறார்கள்.
அவர்கள் இந்த பூமியில் இழந்த மிகப்பெரிய சொத்தும் நீங்கள் தான்.
நாங்களும் தங்கச்சியென்று வந்து உன் கையால் உணவு உண்ணவோ
ஆறுதல் வார்த்தையை கேட்கவோ முடியாத சகோதரர்களாகிவிட்டோம்.
உங்களை பெற்றவர், உங்களின் சகோதரர், உங்களின் உறவினர்
உங்கள் கல்லறை வந்துள்ளோம் - அன்று
உங்களோடு பழகிய தோழிகளும் வந்துள்ளோம்.
அன்று நீங்கள் பார்த்து இரசித்த சந்திரனும், சூரியனும்
ஏன் நட்சத்திரங்கள் கூட வந்துள்ளன. - அது மட்டுமா
கிளாலி கடலும், நாகர் கோவில் சமுத்திரமும் ஆர்ப்பரித்து
உப்பு காற்றை ஊதி பனித் துளியாக வந்துள்ளன.
எங்கே ஒரு கணம் உங்கள் விழிகளை திறந்து - உங்கள்
திருமுகம் காட்டி, சிரித்து பேசி, இரசித்து
மறுபடி உறங்குங்கள். எம் கண்ணீர் நின்று விடும்.

உங்கள் நினைவுகளுடன்,
அப்பா, அம்மா, அண்ணன்மார்.

# கிறீம் உட்கொண்ட குழந்தை உயிரிழப்பு

கொழும்பு, ஓக.17

அழகு சாதனக் கிறீம் ஒன்றை உட்கொண்ட குழந்தை ஒன்று பரிதாபமாக உயிரிழந்துள்ளது. இந்த சோகச் சம்பவம் அம்பாந்தோட்டைப் பிரதேசத்தில் நடந்துள்ளது. வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை, கை மற்றும் கால்களுக்குப் பூசும் கிறீம் ஒன்றை எடுத்து விளையாடிக் கொண்டிருந்துள்ளது. பெற்றோர் அதைக் கவனிக்காதநிலையில், கிறீமை உட்கொண்டு மயக்கமடைந்துள்ளது.

குழந்தை தங்காலை வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லபட்டபோதும், குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (எ)

# வவுனியாவில் ஓரிரவில் இரு கடைகள் உடைப்பு

வவுனியா ஓக.17



வவுனியா, வைரவப் புளியங்குளம் சந்தியில் உள்ள இரு வியாபார நிலையங்கள் உடைக்கப்பட்டு பணமும் பொருளும் திருடப்பட்டுள்ளன. இந்தத் திருட்டுக் கள் நேற்றுமுன்தினம் நடந்துள்ளன. நேற்று காலை வியாபார நிலையங்க ளைத் திறக்கச் சென்றபோது அவற்றின் கதவுகள் உடைக்கப்பட்டுப் பொருள்கள், பணம் திருடப்பட்டிருந்தன என்று வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

தொடர்பாடல் நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த ஒரு இலட்சத்து பத்தாயிரம் ரூபா பணமும், தொலைபேசி அட்டைகளும் திருடப்பட்டுள்ளன என்று அதன் உரிமையாளர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தத் தொடர்பாடல் நிலையத்துக்கு அருகில் உள்ள வர்ணப் பூச்சு விற்பனை நிலையம் ஒன்றிலும் கதவு உடைக்கப்பட்டு, அங்கிருந்த பொருள்கள் திருடப் பட்டுள்ளன. அந்தப் பகுதியில் உள்ள மற்றொரு வியாபார நிலையத்தின் கதவை உடைக்கத் திருடர்கள் முயன்றுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்தத் திருட்டுக்கள் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். அந்தப் பகுதியில் உள்ள பாதுகாப்புக் கமராப் பதிவுகளைக் கொண்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-110,18)

# மரக்கறிகள், பழங்களை ஏற்றுமதிசெய்வது ஆரம்பம்

கொழும்பு, ஓக. 17

மத்தள ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தினூடாக உள்ளூர் மரக்கறிகள் மற்றும் பழங்களை ஏற்றுமதி செய்வதற்கான சிறப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி உள்ளூர் மரக்கறிகள் மற்றும் பழங்கள் அடங்கிய முதல் விமானம் நேற்றுக் காலை மத்தள விமான நிலையத்திலிருந்து ஓமான் மஸ்கட் விமான நிலையத்தை நோக்கி புறப்பட்டுச் சென்றுள்ளதாக விமான நிலைய பொதுமுகாமையாளர் உபுல் கலன் சூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பயிரிடப்பட்ட 3ஆயிரத்து 371 கிலோகிராம் மரக்கறிகள் மற்றும் பழங்கள் சலாம் ஏயர்வேஸின் ஓ.வி 1432 என்ற விமானத்தின் மூலம் மத்தள விமான நிலையத்திலிருந்து ஓமானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

குறித்த விமானம் நேற்று முன்தினம் 150 பயணிகளுடன் மத்தள சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது. (கு)




## மோட்டார் சைக்கிள் செலுத்திய முதியவர் விபத்தில் படுகாயம்

கொடிகாமம், ஓக. 17

மோட்டார் சைக்கிளில் சென்ற 75 வயதுடைய முதியவர் வேகக்கட்டுப்பாட்டை இழந்ததால் விபத்துக்குள்ளானார் என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தென்மராட்சி விடத்தற்பளை பகுதியில் நேற்று முற்பகல் இடம்பெற்றது.

பொருள்களை வாங்கிக் கொண்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வேலியுடன் மோதுண்டது என்று தெரிவிக்கப்பட்டது. அவர் உடல் முழுவதும் உரசல் காயங்களுடனும் தலையில் படுகாயமுமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். கொடிகாமம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (து-159)

## நாவற்குழி சித்திவிநாயகருக்கு ஞாயிறன்று கொடியேற்றம்

கொடிகாமம், ஓக. 17

நாவற்குழி அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும் திருவிழாக்களில் 29ஆம் திகதி சனிக்கிழமை மாம்பழத் திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை வேட்டைத் திருவிழாவும், 31ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும், செப்ரெம்பர் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் அன்றைய தினம் மாலை கொடியிறக்கமும் நடைபெறும். (து-159)

## தமக்குரிய பிரதிநிதியை வன்னி மக்கள் பெறவில்லை

*தேர்தலில் போட்டியிட்டிருந்த வேட்பாளர் கருத்து*

வவுனியா, ஓக. 17

வன்னியில் போரால் பாதிப்படைந்த நிலையில் பல பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளன. எனினும், அவர்கள் தமக்கென ஒரு பிரதிநிதியை தெரிவுசெய்ய முடியாமல் போயுள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளராக போட்டியிட்ட ரசிக்கா பிரியதர்சினி தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் குறித்து ஊடகங்களுக்கு நேற்று கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் பெண் பிரதிநிதி ஒருவரை நாடாளுமன்றுக்கு தெரிவு செய்யாமை துரதிஷ்டவசமானது. எவ்வாறாயினும் பாதிக்கப்பட்ட வன்னி மக்களுக்கான எனது சேவைகள் தொடரும். அந்த மக்களுக்காக தொடர்ந்தும் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பேன். ஆகவே, மக்கள் தமது பிரச்சினைகளைத் தீர்க்க தொடர்ந்தும் எம்முடன் கரம் கோருங்கள். உங்களுக்காக ஒரு பெண்ணின் குரலாய் எனது குரல் தொடர்ந்தும் ஒலிக்கும். என்று தெரிவித்தார். (கு-18)

## அதிக சந்தைகளில் மஞ்சளில் கலப்படம்

கொழும்பு, ஓக. 17



பெரும்பாலான சந்தைகளில் விற்பனை செய்யப்படும் மஞ்சளில் கோதுமை மா மற்றும் அரிசி மா கலந்துள்ளமை தெரியவந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையால் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகளில் இது கண்டறியப்பட்டுள்ளது.

மஞ்சளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக மாவுடன் வர்ணங்களை கலந்து விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அதற்கமைய சந்தைகளில் விற்பனை செய்யப்படும் மஞ்சளின் மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு அரச இரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டிருந்தது.

அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையின் அடிப்படையில் மஞ்சள் தூளின் அரைவாசியில் கோதுமை மா மற்றும் அரிசி மா கலந்துள்ளமை தெரியவந்துள்ளது.

மஞ்சள் தூளுடன் பல்வேறு பொருள்கள் கலந்து விற்பனை செய்யப்படுகின்றமை தொடர்பில் மாதிரிகள் பெறப்பட்டு தொடர்ந்தும் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று நுகர்வோர் விவகார அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. (கு)

## யாழ்.பண்ணைக் கடற்கரையை துப்புரவாக்கினர் இளையோர்

யாழ்ப்பாணம், ஓக. 17

யாழ்ப்பாணம் பண்ணை கடற்கரையைச் சுத்தமாக்கும் பணியில் பல்வேறு அமைப்புகளையும் சேர்ந்த 150 க்கும் மேற்பட்ட இளையோர் நேற்று ஈடுபட்டனர்.

சிறகுகள் அமையத்தின் அழைப்பின் பேரில் அவர்கள் ஒன்று சேர்ந்து துப்புரவாக்கும் பணியில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 6 மணியிலிருந்து அவர்கள் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

கழிவுப்பொருள்களை, பிளாஸ்ரிக்குகளை அவர்கள் சேகரித்தனர். பின்னர் கலந்துரையாடல் இடம்பெற்றது. அதில், குப்பைகளை அகற்றுவதோடு மட்டும் நின்றுவிடாது அதையும் தாண்டி முன்னெடுக்கப்படவேண்டிய விடயங்கள் பற்றி ஆராயப்பட்டது. பலரும் தத்தமது கருத்துக்களை வெளிப்படுத்தினர்.



குப்பைகளைப் பொது இடங்களில் போடுவதை எவ்வாறு தடுக்கலாம்? அதில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பங்களிப்பு என்ன? சீரான முறையில் குப்பைகளை சேகரிப்பது எப்படி? அவற்றை காலக்கிரமத்தில் அப்புறப்படுத்தும் ஒழுங்குகள் மற்றும் கழிவுப்பொருள்களின் மீள்சுழற்சி போன்ற பல்வேறு விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டது. அவற்றை நடைமுறைப்படுத்த தேவையான செயற்பாடுகளை இனிவரும் நாள்களில் முன்னெடுப்பது பற்றியும் தீர்மானிக்கப்பட்டது.

இனிவரும் காலம் இந்த இளைஞர்களின் கைகளில், இவ்வாறான இளைஞர்களின் செயற்பாடுகள் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் விதைக்கின்றன.

இவர்களின் செயற்பாடுகளே மற்றவர்களையும் இவர்களோடு இணைய வைக்க வாய்ப்பாகவும். முன்னுதாரணமாகவும் அமையும். கேள்விகள் கேட்டால் தான் பல பதில்கள் கிடைக்கும். என்று அங்கிருந்தவர்கள் சுட்டிக்காட்டினர். (கு)

## நாடாளுமன்ற கூட்டத்தொடரில் பொதுமக்கள் பார்வைக்கூடம் பூட்டு

கொழும்பு, ஓக.17

எதிர்வரும் 20 ஆம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்ற கூட்டத் தொடரின்போது பொதுமக்கள் பார்வைக் கூடம் திறக்கப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம் நீல் இத்தவெல இதனைத் தெரிவித்துள்ளார். புதிய சபாநாயகர் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் பொதுமக்களை நாடாளுமன்றத்திற்கு அனுமதிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அதேநேரம் நாடாளுமன்றத்திற்கு தெரிவான உறுப்பினர்கள் தற்போது இணைய முறைமை ஊடாக தங்களது சுய தகவல்களை வழங்கியுள்ளனர் எனவும் நீல் இத்தவெல தெரிவித்துள்ளார். (ரி1)

# 13ஆவது திருத்தச் சட்டம் ஒருபோதும் நீக்கப்படாது

## அரசு இந்தியாவைப் பகைக்காது என்கிறார் கருணாகரம் எம்.பி

**கொழும்பு, ஓக 17**
**அரசமைப்புக்கான 13ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாது செய்யும் அரசாங்கத்தின் செயற்பாட்டை இந்தியா ஒருபோதும் பார்த்துக் கொண்டிருக்காது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.**



மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
முன்னாள் இராணுவ அதிகாரியாக இருந்த சரத் வீரசேகர, 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கவேண்டும், 19ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கவேண்டும் என்று கூறியுள்ளார்.
இவர் மடத்தனமான அரசியல் கருத்துகளைக் கூறியுள்ளார். 13ஆவது திருத்தச் சட்டம் பல தியாகங்களுக்குப் பின்னர் இரு நாடுகளுக்கு இடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம். அதிகாரங்கள் பகிரப்படும்போது மாகாணங்களுக்கு வழங்கும் முறைமையில்லாமல், பிரதேச சபைகளுக்கு அதிகாரங்களை வழங்குவது என்பது தொடர்பில் இவர்கள் சிந்திக்கவேண்டும்.
அதற்கு மேலாக இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி, ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆகியோரால் இந்திய இலங்கை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட போது, ராஜிவ்காந்தி, கடற்படை உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு உள்ளான போதிலும் இந்த ஒப்பந்ததில் கைச்சாத்திட்டுள்ளார். எனவே, 13ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்படும்போது அதனை இந்தியா பார்த்துக்கொண்டிருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. 13ஆவது திருத்தச்சட்டம் நீக்கப்படும்போது நிச்சயமாக இந்தியாவின் தலையீடு இருக்கும். 13ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக இந்த நாட்டில் அதிகாரங்களைப் பரவலாக்கம் செய்து, புரையோடிப் போயுள்ள தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான நிரந்தரமான நியாயமான, அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு தீர்வைக் கொண்டுவர முடியும் - என்றார். (ப)

# கொழும்பு அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் யார்?

## முடிவு பிரித்தானியாவிடம்

கொழும்பு,ஓக 17
கொழும்பு அங்கிலிக்கன் திருச்சபையின் புதிய ஆயரைத் தெரிவு செய்யும் தேர்தல் நிறைவடைந்தும், நேற்று இரவு வரை புதிய ஆயர் தெரிவு இடம்பெறவில்லை. இதனையடுத்து ஆயரைத் தெரிவுசெய்யும் பொறுப்பு பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட அங்கிலிக்கன் சமூக தலைமையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.
கொழும்பு அங்கிலிக்கன் திருச்சபையின் புதிய ஆயரைத் தெரிவு செய்யும் தேர்தல் நேற்று கொழும்பில் இடம்பெற்றது. காலையில் ஆரம்பமான தேர்தல் நள்ளிரவு வரை நீடித்தது. வணக்கத்துக்குரிய பெரி புரொஹெய்ர், துஷாந்த ரொட்ரிக்கோ மற்றும் மார்க் பில்மோரியா ஆகியோருக்கு இடையிலேயே தேர்தல் நடத்தப்பட்டது.
முதல் சுற்றின் இறுதியில் வணக்கத்துக்குரிய பெரி புரோஹெய்ர் மற்றும் துஷாந்த ரொட்ரிக்கோ ஆகியோர் அதிக வாக்குகளைப் பெற்றனர். எனினும் இரண்டாம் மூன்றாம் வாக்கெடுப்புக்களில் இவர்கள் இருவருக்கும் இடையில் நடத்தப்பட்ட தேர்தலில் முடிவுகள் பெறப்படவில்லை. இதனையடுத்தே ஆயரைத் தெரிவுசெய்யும் முடிவு பிரித்தானிய தலைமையிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ப)

# வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்துக்கு நிதி நெருக்கடி

## *ஊழியர்களை திருப்பி அழைக்க முடிவு*

கொழும்பு. ஓக. 17
உலகம் முழுவதும் தற்போது ஏற்பட்டுள்ள பின்னடைவு நிலைமை காரணமாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் நிதி ரீதியான பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகிறது.
இதன் காரணமாக வெளிநாடுகளில் பணி புரியும் பணியகத்தின் ஊழியர்களை நாட்டுக்கு திரும்ப அழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பணியகம் அறிவித்துள்ளது.
வெளிநாடுகளில் கடமையாற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் இலங்கை ஊழியர்களை நாட்டுக்கு திரும்ப அழைப்பது தொடர்பாக அமைச்சரவைப் பத்திரம் விரைவில் தாக்கல் செய்யப்படும் என தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.
கொரோனா வைரஸ் பரவல் காரணமாக மத்திய கிழக்கு, இத்தாலி, சிங்கப்பூர், மலேசியா, தென் கொரியா போன்ற நாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்கள் தொழில் வாய்ப்புகளை இழந்துள்ளனர். இந்த நாடுகளில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் அதிகாரிகள், அங்குள்ள இலங்கைத் தூதரகங்களுடன் இணைந்து பணியாற்றி வருகின்றனர். தொழில் வாய்ப்புகள் குறைந்துள்ளதால், பணியகம் நிதி ரீதியான பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# 17வயதுச் சிறுவன் கடலில் வைத்து சித்திரவதை

## *ஐவர் கைது*

கொழும்பு ஓக 17
மாத்தறை, மிரிசவைச் சேர்ந்த ஒரு பின்தங்கிய குடும்பத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் 48 நாள்கள் கடலில் வைத்து உடல் ரீதியாகச் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ளான். சிறுவனைச் சித்திரவதைக்குட்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
வறுமை காரணமாக ஷெஹான் (17 வயது) என்ற இளைஞர் கடற்றொழிலாளர்களுடன் சேர்ந்து தொழிலுக்குச் சென்றுள்ளார். எனினும் அவர் 48 நாள்களின் பின்னர் உடல் ஆரோக்கியமற்ற நிலையில், சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்ட நிலையல் வீடு திரும்பியுள்ளார் எனத் தெரியவருகிறது. தொழிலில் ஈடுபட்டிருந்தபோது அவர் தற்செயலாக ஒரு மீனை கடலுக்குள் தவறவிட்ட நிலையில் சக மீனவர்களால், மனிதாபிமானமற்ற சித்திரவதைகளுக்கு அவர் உட்படுத்தப்பட்டிருந்தார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன. இரண்டு மாத காலப்பகுதியில் அவருக்கு சரியாக உணவு வழங்கப்படவில்லை எனக் குறிப்பிடப்படுகிறது.
அவர் அதிகமாகச் சாப்பிட்டதாக குற்றம் சாட்டிய பின்னர் சக பணியாளர்கள் அவரது வாயின் பக்கங்களை வெட்டியுள்ளனர் என பாதிக்கப்பட்ட இளைஞனின் தாயார் தெரிவித்துள்ளார். ஷெஹானின் முதுகில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாகவும், அவருக்கு முதுகில் அறுவைச் சிகிச்சை மூலம் உலோகத் தகடு பொருத்தப்பட வேண்டும் என்றும் தாயார் தெரிவித்துள்ளார். ஷெஹானை சித்திரவதைக்கு உட்படுத்தினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்
இதேவேளை அழகு மீன்கள், நன்னீர் மீன்கள் மற்றும் இறால் வளர்ப்பு, கடற்றொழில் துறைமுக அபிவிருத்தி, ஆழ்கடல் பல நாள் கடற்றொழில் அலுவல்கள் அமைச்சர் காஞ்சனா விஜசேகர, சந்தேக நபர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவுறுத்தியுள்ளார். (ப)

# பாதுகாப்பு ஆலோசகர் – கடற்படைத் தளபதி சந்திப்பு

கொழும்பு, ஓக. 17
இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கொமடோர் சையிட் மக்சூமுல் ஹக்கீமுக்கும், இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்னவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இலங்கை கடற்படை தலைமையகத்தில் குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.
பதவிக் காலம் நிறைவடைந்தமையை முன்னிட்டு பாதுகாப்பு ஆலோசகர் கொமடோர் சையிட் மக்சூமுல் ஹக்கீம், கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்னவைச் சந்தித்துள்ளார்.
இதன்போது இலங்கை கடற்படைக்கு அளித்த ஒத்துழைப்புக்காக, பங்களாதேஷ் பாதுகாப்பு ஆலோசகருக்கு நன்றி தெரிவித்ததுடன் அவரின் எதிர்கால நடவடிக்கைகளுக்கும் கடற்படைத் தளபதி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். குறித்த சந்திப்பை நினைவுகூரும் வகையில் பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகருக்கு நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன. (ப)

# கொழும்பு துறைமுகத்தை கைவிட்டது இந்தியா

கொழும்பு, ஓக. 17
கொழும்பு துறைமுகத்துக்கு மாற்றாக வங்காள விரிகுடாவில் உள்ள கிரேட் நிக்கோபார் தீவில் புதிய இடமாற்றத் துறைமுகத்தை (ட்ரான்ஸிப்மென்ட்) உருவாக்க இந்தியா திட்டமிட்டுள்ளது. நிக்கோபார் தீவின் மூலோபாய முக்கியத்துவத்தைக் கணக்கில் கொண்டு இந்தத் திட்டத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.
இந்தியப் பெருங்கடலுக்கும் பசுபிக் பெருங்கடலுக்கும் இடையிலான முக்கிய கப்பல் தடமான மலாக்கா ஜலசந்தியின் வாயில் அமைந்துள்ள இந்தியாவின் நிக்கோபார் தீவுகளில் தெற்கே மற்றும் மிகப்பெரிய நிக்கோபார் தீவில் இந்த முன்மொழியப்பட்ட இடமாற்றத் துறைமுகம் நிறுவப்படவுள்ளது. இது தற்போது பிராந்தியத்தின் முக்கிய இடமாற்ற மையங்களாக இருக்கும் கொழும்புத் துறைமுகத்திற்கும், சிங்கப்பூர் மற்றும் மலேசியாவின் போர்ட் கிளாங் இடமாற்றத் துறைமுகங்களுக்கும் மாற்றாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் உரிமையை சீனா கையகப்படுத்திய பின்னர், கொழும்புத்துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை ஒரு இடமாற்றத் துறைமுகமாகப் பாதுகாப்பதில் இந்தியா ஆர்வமாக இருந்தது. எனினும் இது கொழும்புத் துறைமுகத்தின் தொழிற்சங்கங்களால் கடும் எதிர்ப்பைச் சந்தித்துள்ள நிலையிலேயே இந்தியாவின் புதிய அறிவிப்பு வெளியாகியுள்ளது. (ப)

## தனிப்பட்ட வகுப்புக்கள்

ஆங்கில பாடம் தரம்: 6 -12 வரை அனைவருக்கும் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும். எனது வீட்டிலும் கற்றுத் தரப்படும்.

532,Navalar Road,Jaffna
T. Gnashwaran - 076 524 4793

## தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நன்கு அனுபவமும், திறமையும் வேலைதளத்தை முகாமைத்துவம் செய்யும் ஆளுமை உடைய சிவில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தேவை.

Email:- careers@decon.lk
077 592 5371, 077 985 1946

## அடைவு நகை மீட்கும் பணியகம்

தங்கத்தின் விலை ஒரு லட்சத்தைத் தாண்டி செல்லும் நிலையில் வங்கியில் அடைவு வைத்து மீட்க முடியாத உங்கள் நகைகளை இன்றைய விலைப்படி கொள் முதல் செய்வதோடு, புதிதாக அடகு வைப்பவர்களுக்கு பவுண் ஒன்றிற்கு ரூபா 80,000 /= வழங்கப்படும்.
எமது நம்பிக்கையான நிறுவனத்துடன் தொடர்புகொள்ளவும்

இல.14,15, நவீன சந்தை
மேல்மாடி யாழ்ப்பாணம்.
077 361 1282, 021 222 3817, 021 222 7125

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111

## யா/இணுவில் மத்திய கல்லூரி பாடசாலை அபிவிருத்திக்குழு வருடாந்தப் பொதுக் கூட்டம்

காலம் : 30.08.2020 (ஞாயிறு)
நேரம் : காலை 08.30 மணி
இடம் : கல்லூரியின் சைவமகாஜன மண்டபம்

பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனை வரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- சுகாதார ஒழுங்கு முறைகள் பின்பற்றப்படும்.

செயலாளர்

# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) சபை நிதி

01. வலிகாமம் வடக்கு பிரதேச சபை, சபை நிதியினைக்கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02. **தலைவர்,பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)** வடமாகாணம், தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக் கப்பட்ட வீதி புனரமைப்பு, கட்டட அமைப்பு வேலைகளுக்கு கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.ஆயினும் 08.05.2019ஆம் திகதிய 04/2016(ii) ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின்படி வட மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்வி கருத்தில் கொள்ளப்படலாம்.

04. கேள்விதாரர்கள் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், வீதி புனரமைப்பு, கட்டட அமைப்பிற்கு பொருத்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினைப் பதிவு செய்தவராகவும் கறுப்புப்பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயும் இருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு,வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)** தொலைபேசி:- 0212241130, தொலைநகல்:- 0212243688 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் 17.08.2020 ஆம் திகதியிலிருந்து 31.08.2020 வரை காலை 09.00 மணிமுதல் 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர்,பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை எனும் இடத்திலிருந்து 17.08.2020ஆம் திகதியிலிருந 31.08.2020 வரை காலை 9.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பெறுகைக்குழு ,வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை எனும் முகவரிக்கு 31.08.2020ஆம் திகதி 14.30மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் / பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்விப்பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | செல்லுபடி யாகும் நாட்கள் | திகதி | பிணை வைப்பு | செல்லுபடி யாகும் காலம் |
| 01 | **NP/14/41(14)/05/02/64 CFDR -06/2020** | நுணச்சை வீதி புனரமைப்பு - அளவெட்டி | 7.975 | 120 நாட்கள் | C7/C6 வீதிப்புனரமைப்பு | 77 நாட்கள் | 16.11.2020 | 80,000.00 | 14.12.2020 |
| 02 | **NP/14/41(14)/05/02/65 CFDR -07/2020** | மல்லாகம் சந்தை கடைத்தொகுதி அமைத்தல் கட்டம் -ii | 3.217 | 90 நாட்கள் | C8/C7 கட்டடம் | 77 நாட்கள் | 16.11.2020 | 33,000.00 | 14.12.2020 |
| 03 | **NP/14/41(14)/05/02/66 CFDR -08/2020** | மயிலிட்டி உப அலுவலம் அமைத்தல் - கட்டம் -i | 9.976 | 120 நாட்கள் | C7/C6 கட்டடம் | 77 நாட்கள் | 16.11.2020 | 100,000.00 | 14.12.2020 |

10. கேள்விகோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 24.08.2020 ஆம் திகதி பி.ப.14.30 மணிக்கு வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.

**சோ.சுகிர்தன்**
**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.**
**17.08.2020**

## கப்பல் முகவர் சேவை

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, பருத்தித்துறை மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் உள்ள எனது கப்பல் முகவர் சேவை நிலையங்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 077 6626 550

## ராஜ் ஜுவல்லர்ஸ்
### அடகு பிடிப்பவர்கள்

1 பவுண் - 22 கரட்டிற்கு
78,000/=

**முக்கிய அறிவித்தல்**

01.11.2018 ஆம் திகதிதொடக்கம் 30.09.2019 இதற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் வைக்கப்பட்ட அடகுகளை (பற்றுச் சீட்டு இலக்கம் 21000 தொடக்கம் 38 000 வரை) 30.09.2020 ஆம் திகதிக்குள் மீட்டுக்கொள்ளவும். அல்லது தற்போதைய தங்கத்தின் அதிகரித்த பெறுமதிக் கேற்ப வட்டியுடன் சேர்த்து புதுப்பித்துக்கொள்ளலாம். தவறின் 30.09.2020 ஆம் திகதிக்கு பின் அவை விற்பனை செய்யப்பட்டு விடும். பின் எக்காரணம் கொண்டும் மீட்க முடியாது.

இல. 31 C ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி
(சந்தைக்கு அருகில்)
021 221 7287, 076 636 1238

யாழ். மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

## பாரவூர்தி விற்பனைக்கான கேள்வி விண்ணப்பம் கோரல்

சங்கத்தின் அசோக் லேலண்ட் பாரவூர்தியானது உடற் கோப்புடன் விற்பனை செய்வதற்கான கேள்வி விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன. இதனை கொள்வனவு செய்ய விரும்புவோர் கூறுவிலையின் இரகசியத் தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் அடையாளமிட்டு தமது கூறு விலைகளை 28.08.2020 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக தலைவர், யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமை யாளர் கூட்டுறவுச் சங்கம், இருபாலை வீதி, கோண்டா வில் கிழக்கு, கோண்டாவில் எனும் முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கேள்வி விண் ணப்பம் கோரல் - பாரவூர்தி விற்பனை " என குறிப்பிட்டு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கு மாறு கேட்டுக்கொள்கின் றோம்.

**குறிப்பு :**

- பாரவூர்தியினை அலுவலக கடமை நாட்களில் காலை 09.00 - பி.ப 03.30 வரையும் சனிக்கிழமை காலை 09.00 - மதியம் 12.30 வரை பார்வையிடலாம்.
- தங்களுடன் தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்தினையும் விண்ணப்பத்தில்குறிப்பிட்டு அனுப்பிவைக்கவும்.
- இயக்குநர் சபையின் முடிவே இறுதியானது.

**கூட்டுறவுச்சேவையிலுள்ள,**
**தலைவர்,**
**யா/மா/பா/உ/கூ/ சங்கம்,**
**இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.**

ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

# போதைப்பொருள் மோசடியில் ஈடுபடுவோரில் பெண்கள் அதிகம்

கொழும்பு, ஓக.17
போதைப்பொருள் மோசடி விவகாரத்தில் பெண்கள் அதிகளவில் ஈடுபட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர் கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போது பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஜாலிய சேனாரட்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நிதிமோசடி முறைப்பாடுகள் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக் களத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள விசேட பிரிவினூடாக இதுவரை 38 முறைப் பாடுகள் மீதான விசாரணை ஆரம் பிக்கப்பட்டுள்ளது எனவும் போதைப் பொருள் மோசடியாளர்களை கைது செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ரி)

# யாழ். நகரில் ஹெரோயினுடன் ஒருவர் கைது

ஹெரோயின் போதைப் பொருளுடன் யாழ்ப்பாண நகரில் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.
சின்னக்கடை பகுதியில் ஹெரோயின் போதைப் பொருள்களுடன் ஒருவர் நடமாடுவதாக பொலிஸாருக்குக் கிடைத்த ரகசிய தகவலையடுத்து அவர் கைது செய்யப்பட்டார். (ஓ.5,159)

## மக்களின் மகத்தான ஆணையை
# பொருளாதார வளர்ச்சிக்கு பயன்படுத்தவேண்டும்
### பசில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக 17
நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் மக்களால் வழங்கப்பட்ட மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் கூடிய மகத்தான ஆணை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பயன்படுத் தப்பட வேண்டும் என பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்புத் தொடர்பான ஜனாதிபதி பணிக்குழுவின் தலைவர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இலங்கையின் திட்டமில் சேவைச் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளதுடன், பொதுமக்கள் நாட்டின் அபிவிருத்தியில் தெளிவான மாற்றத்தை எதிர்பார்ப்பதாகவும், அவர் தெரிவித்துள்ளார். நாட்டின் தேவைகளுக்கு ஏற்ப மனித வளத்தை நிர்வகிக்க வேண்டும். தொழிலாளர்களை மையப்படுத்தி இந்நாட்டின் கல்வி மற்றும் தொழில் பயிற்சிக்கான திட்டங்களை வகுக்க வேண்டும் எனவும் மேலும் தெரிவித்துள்ளார். (ப)

# படித்த பிக்குத் தலைமுறை உருவாக அமரபுர பௌத்த பீடம் வழிவகுத்தது
### பிரதமர் மஹிந்த பெருமிதம்

நாடாளுமன்ற ஆசனத்தைப் பெற்றுக் கொள்வதற்காக சில பிக்குமார் சண்டையிடும் போது படித்த, புத்திசாலியான பௌத்த பிக்கு தலைமுறையை உருவாக்குவதற்காக அமரபுர பௌத்த பீடம் வழங்கி வரும் பெரும் பங்களிப்பு மகிழ்ச்சிக்குரிய விடயம் என பிரதமர் மஹிந்த ராஜபச்ச தெரிவித்துள்ளார்.


கொழும்பு வெள்ளவத்தையில் அமரபுர பௌத்த பீடத்தின் சங்கச் சபை அலுவலகக் கட்டடத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ப)

**வேலையாள் தேவை**
யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதி, கோண்டாவிலில் இயங்கிவரும் தளபாட விற்பனை நிலையம் ஒன்றிற்கு ஆண் விற்பனையாளர் தேவை.
**வயதெல்லை 20 - 35**
**சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.**
**தொடர்பு:- 077 713 0872**

**காணவில்லை**
யாழ். நகரப் பகுதியில் சிறு கயிற்றுடன் மாவெள்ளை, பிறவுண் நிற ஊர் ஆடு காணவில்லை.
தகவல் தருவோருக்கு சன்மானம் வழங்கப்படும்.
**தொடர்பு:-077 452 0377**

**மணமகள் தேவை**
03 இல் சூரியன் செவ்வாய் உள்ள புனர்பூச நட்சத்திர 89ஆம் ஆண்டு ஆண் (V) பட்டதாரி ஆசிரியருக்கும். 04 இல் சூரியன் செவ்வாய் உள்ள ஆண் (V) 87 ஆம் ஆண்டு பிறந்த சொந்தக்கடை உரிமையாளருக்கும் (திருவாதிரை) பெற்றோர் தகுந்த வரனை எதிர்பார்க்கின்றனர்.
**T.P. viber -- 0773976203**

## முதலாம் ஆண்டு சிரார்த்த தினம்



அமரர் இரத்தினம்
**கணேசலிங்கம் (மாம்பழம்)**
தோற்றம் 30.03.1967
மறைவு 28.08.2019

நிஜமாக நீங்கள் மறைந்து
ஓராண்டு ஆனதோ
நீங்கள் இல்லா மனை
பொலிவிழந்து போனதுவோ
உங்களை நினைத்து - தினம் தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்.
காலங்கள் ஓடிக் கடந்தாலும் - உங்களை
எங்கள் உள்ளத்தில் வைத்துப் பூஜிப்போம்.

**குடும்பத்தினர்.**
"கல்யாணி வாசா"
அல்வாய் வடக்கு, அல்வாய்.

## மரண அறிவித்தல்
# சற்குணராசா பாக்கியம்



மீசாலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சற்குணராசா பாக்கியம் நேற்று (16.08.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சற்குணராசாவின் அன்பு மனைவியும், துவாரகன், கிருபாகரன், தனஞ்சயன், கிரிகரன், மதீனா, மதுசன் ஆகியோரின் அன்பு தாயாரும், லவன்ராஜ், மயூரி ஆகியோரின் அன்பு மாமியாரும், ரிஷானின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2020) திங்கட்கிழமை பி.ப 1.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தை பளை நகரத்தில் மீள,
இயக்குவதற்கு கடற்றொழில் அமைச்சர் அவர்களது முயற்சியால்
23.07.2020 இல் அனுமதி கிடைத்துள்ளது.

**இந்நிலையத்தின் அனுமதியினைப் பெற்றுத்தந்த**
**கடற்றொழில் அமைச்சரும்**
**கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான**


## கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா
அவர்களை

பாராட்டி வாழ்த்துவதுடன் அவர்களின் சேவை மென்மேலும் பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ. சங்கத்திற்கு கிடைக்க இறைவனின் நல்லாசிகளை வேண்டி பாராட்டி வாழ்த்துவதில் பெரு மகிழ்வடைவதுடன் இந்நிலைய அனுமதியினை பெறுவதற்கு அனைத்து வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினையும் தெரிவித்துக்கொள்கின்றோம்

**பாராட்டி வாழ்த்துவோர்**
**பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பளை.**

## மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 07 . 1948



இறப்பு 16 . 08 . 2020

### சின்னத்தம்பி நல்லையா

திருநெல்வேலியை பிறப்பிடமாகவும், 29, பாற்பண்ணை வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நல்லையா நேற்று (16.08.2020) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், ஆறுமுகம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கமலா, கல்யாணி ஆகியோரின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, சின்னம்மா, தேவி, ராசாத்தி மற்றும் நாகம்மா, செல்வராசா (கிளி), பூமணி (குஞ்சு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், உதயகுமார் (பெரியவன்), சசிகுமார் (சசி), மதன்குமார், புஸ்பகலா, சூரியகலா, மிசிலகலா, மேகலா, ஜெசிந்தகலா, றெஜிகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், அனிதா (ரூபி), கோமளேஸ்வரி (கோமதி), பிறைசிலாநிதி (நிதி), பிலிப் அன்ரன் எலியாஸ், செல்வம், ராஜ்குமார் (அசோக்), மதனராஜ் (சுமன்) ஆகியோரின் மாமனாரும் டனுசியா, டனுசன், தயாழினி, தனுவக்சன், மதுசா, சங்கவி, சாய்ப்பிரியன், ப்ரீத்தி, சுவர்ணா, கிசோர், விஷ்ணுசரன், கமில்டன், ப்ரீத்திஸ்சரன், தருண் ஆகியோரின் அன்புப் பேரனும், விஷானாவின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (17.08.2020) திங்கட்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலைஉற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**இல.29, பாற்பண்ணை வீதி,**
**திருநெல்வேலி.**

தகவல்:-
**குடும்பத்தினர்.**

## 40 ஆயிரம் லீற்றர் கோடா மீட்பு

சுன்னாகம், ஓக.17

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் கோடா சுன்னாகம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சோதனையில் கோடா மீட்கப்பட்டுள்ளது. (ஒ,5,159)

## போதைப்பொருளுடன் ஒருவர் கைது!

அம்பலாங்கொடை, ஓக.17

சுமார் 12 கிலோகிராம் நிறையுடைய 'மெண்டி' எனப்படும் போதைப்பொருளுடன் ஒருவர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பலாங்கொடை கடற்கரைப் பகுதியில், கல்கிஸை பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட நபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் பெறுமதி 200 மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது. குறித்த போதைப்பொருள் கடல் மார்க்கமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி- 2)


## கண்ணீர் காணிக்கை



தோற்றம் 16.04.1933 மறைவு 15.08.2020

### ந. விவேகானந்தராஜா

**மானிப்பாய் இந்துக் கல்லூரியின்**
**இன்னோர் விருட்சம் சரிந்தது.**

- கல்லூரியின் பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவர், செயலாளர்
- கல்லூரி அபிவிருத்திச்சங்க முன்னாள் செயலாளர்.
- தேசிய பாடசாலையாக கல்லூரி தரம் உயர முன்னின்று உழைத்தவர்.
- கல்லூரியின் சகல துறை வளர்ச்சியிலும் தன்னை அர்ப்பணித்தவர்.

**ந. விவேகானந்தராஜா அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை செய்வோம்.**

**பழைய மாணவர் சங்கம்.**
**மானிப்பாய் இந்துக் கல்லூரி.**

## கண்ணீர் அஞ்சலி

### நடராசா விவேகானந்தராஜா



எமது பாடசாலையின் பழைய மாணவரும், பழைய மாணவர் சங்க உறுப்பினரும் மற்றும் பாடசாலையின் ஆலோசனைக் குழுவின் உறுப்பினருமாகிய நடராசா விவேகானந்தராஜா அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குவதோடு அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்.**
**யா/ மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை, மானிப்பாய்.**

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி மெக்டலின் தோமஸ் இராஜரட்ணம்




எமது பாசத்துக்குரிய
**செல்வா ஹாட்வெயார்**
**உரிமையாளர்**
**செல்வராஜன்** அவர்களின்
பாசமிகு தாயார் இறைபதம் அடைந்த செய்தி
கேட்டு, நாமும் துயரடைவதோடு, அவரின்
பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**Vista Steels**
**Colombo - 12**

**Kalpa Trade Center**
**Colombo - 12**

## மரண அறிவித்தல்



### நடராஜா விவேகானந்தராஜா

(மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபையின் முன்னாள் செயலாளரும், மானிப்பாய் சோதிவேம்படி காளியம்பாள் தேவஸ்தான தலைவரும், மானிப்பாய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவரும், மானிப்பாய் வர்த்தக சங்க முன்னாள் தலைவரும், மானிப்பாய் வரியிறுப்பாளர் சங்கத் தலைவரும், சமூக ஆர்வலரும்)

மானிப்பாய் சோதிவேம்படி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா விவேகானந்தராஜா நேற்றுமுன்தினம் (15.08.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா - அண்ணபூரணி தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - புஸ்பமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கமலமனோகரியின் அன்புக் கணவரும், கமலேந்திரனின் (இந்தி - கனடா), பாசமிகு தந்தையும், யசோதாவின் பாசமிகு மாமனும், ஐஸ்வரியா, பவித்திரா ஆகியோரின் அருமை பேரனும், காலஞ்சென்ற சரசானந்தராஜா அவர்களின் அன்புச் சகோதரனும், சத்தியபாமா, ரவீந்திரன், காலஞ்சென்ற அமரேந்திரன் மற்றும் தேவமனோகரி ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2020) திங்கட்கிழமை காலை 09.30 மணியளவில் சோதிவேம்படி ஒழுங்கையில் இருக்கும் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

கமலேந்திரன் ( மகன் - கனடா - 647 284 3734)
யசோதா ( மருமகள் - கனடா - 647 291 3217)
மீனு ( இலங்கை - 077 945 1072)
பாலகுமார் ( இலங்கை - 077 088 1751)
ரவிச்சந்திரன் ( இலங்கை - 076 467 9881)

## மரண அறிவித்தல்



### திருமதி அன்னலட்சுமி செல்வநாயகம்
(ராசாத்தி)

யாழ்ப்பாணம், இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி செல்வநாயகம் (ராசத்தி) நேற்று (16.08.2020) ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் அப்பையா சொர்ணம்மா தம்பதியரின் மருமகளும் அப்பையா செல்வநாயகத்தின் (கணேசன் மில் உரிமையாளர் இணுவில் - சித்தப்பா) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சாரதாதேவி, சு.பொ.நடராசா (அண்ணா கோப்பி), விவேகானந்தன் மற்றும் புனிதவதி, அன்னபூரணம், மகாலட்சுமி, ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற அப்பையா இராசநாயகத்தின் மைத்துனியும் பாலகுமாரன் (குமரன்- கனடா), உமாகாந்தன் (உசன் - ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு தாயாரும் கோபிகா (கனடா), ஸ்ரீபவானி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஸ்ரேகன், அஜீஷ், அன்சிகா, பார்க்கவன், அகரன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.08.2020) ஞாயிற்றுக்கிழமை இணுவிலில் உள்ள இல்லத்தில் மாலை 4.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அன்னை இல்லம்**
**இணுவில் தெற்கு, இணுவில்**

**தகவல்:**
**கணவர்**

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 01 . 1948



மறைவு 16 . 08 . 2020

### வீரவாகு செல்லத்துரை (ஆசாரியார்)

தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரபாகு செல்லத்துரை (ஆசாரியர்) நேற்று (16.08.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரபாகு - சின்னம்மா தம்பதியரின் அன்பு புதல்வனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் யோகேஸ்வரியின் (சந்திரா) அன்புக் கணவரும், லலிதாம்பாள், தயாட்சன், கவிதா (பிரான்ஸ்), விஜிதா, விஜிதரன், கோகிலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வரதராஜா, ஜானகி, விஜயமோகன் (பிரான்ஸ்), கேதீஸ்வரன், அஸ்வினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும், காலஞ்சென்றவர்களான பூரணம், இராசமணி, ஐயாத்துரை, முருகையா மற்றும் பூமணி காலஞ் சென்றவர்களான குமாரசாமி, ஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிதுஷிகா, துவாரகா, துளசிகா, கார்த்திகா (பிரான்ஸ்), வெஸ்ணா (பிரான்ஸ்), டனி (பிரான்ஸ்), விந்துஜன், தனுசாந், கிரிசாந், டனுஜா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2020) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.30 மணியளவில் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**வன்னியசிங்கம் வீதி,**
**தாவடி வடக்கு, கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 153 0592, 077 533 2717**

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 07 . 1926



மறைவு 16 . 08 . 2020

### தம்பையா பொன்னுத்துரை

யாழ்ப்பாணம் தோப்பு, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா பொன்னுத்துரை நேற்று (16.08.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னுத்துரை தெய்வபூமணி அவர்களின் அன்புக் கணவரும், ஞா.சசீலா (ஜேர்மனி), சுகுணன் (லண்டன்), பொ. கிருபாகரன் (லண்டன்), பொ. சுதாகரன், பொ.பிரபாகரன் (அவுஸ்திரேலியா), பொ.ஐங்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞாணேஸ்வரன் (ஜேர்மனி), ஸ்ரீரஞ்சன் (லண்டன்), சாந்திமதி (லண்டன்), தாரணி, தர்மனி (அவுஸ்திரேலியா), ஷாம்பவி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான நடராஜா, அன்னப்பிள்ளை பொன்னம்மா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சிவபாலன், நல்லம்மா, பாக்கியம் மற்றும் தெய்வபூமலர் ஆகியோரின் மைத்துனரும், சுலக்ஷன் (ஜேர்மனி), சுபாங்கி (ஜேர்மனி), சுவாதி (ஜேர்மனி), நிருபா (லண்டன்), திலக்ஷன் (லண்டன்), நித்திலன் (லண்டன்), கீரன் (லண்டன்), கனிகா (லண்டன்), குபேரன் (லண்டன்), கஜானன், லக்ஷன், கார்த்திகேயன், ரகுராம் (அவுஸ்திரேலியா), சிறிராம் (அவுஸ்திரேலியா), அனுப்பிரியா, ஆராதனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (17.08.2020) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணிக்கு தோப்பு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலைஉற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**ஆஸ்பத்திரி வீதி,**
**தோப்பு, அச்சுவேலி.**

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**

## மணிவண்ணன் நீக்கம்

# உட்கட்சி விவகாரம் யாரும் தலையிட முடியாது

## கஜேந்திரகுமார் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 17

மணிவண்ணன் விவகாரம் உட்கட்சி விவகாரம். இதில் வெளியாள்கள் தலையிட நாம் அனுமதிக்க மாட்டோம் எனத் தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

தனியார் தொலைக்காட்சியொன்றில் ஒளிபரப்பான அரசியல் நிகழ்ச்சியில் நேற்று இரவு கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோது, இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மணிவண்ணன் விவகாரம் உட்கட்சி விவகாரம். இதில் வெளியாள்கள் தலையிட நாம் அனுமதிக்க மாட்டோம். இது குறித்து பலவிதமாக பேசப்படுகிறது. தேர்தல், பதவிநிலைப் போட்டியென சொல்கிறார்கள். இது எதுவுமே இந்த விடயத்தில் சம்பந்தப்படவில்லை.

25 பேரைக்கொண்ட மத்திய குழுகூடி இது குறித்து ஆராய்ந்து முடிவெடுத்துள்ளது. அந்த முடிவை மணிவண்ணனிற்கு அனுப்பிவிட்டோம். மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது தனக்கு கிடைத்ததென மணிவண்ணன் உறுதிப்படுத்தினார். ஆனால் அதில் கையொப்பமில்லையென்றார். தலைவர், செயலரின் கையொப்பத்துடன் பதிவுத்தபாலில், மத்தியகுழுவின் முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

மணிவண்ணனின் பதிலை மத்தியகுழு எதிர்பார்க்கிறது. அது கிடைத்த பின்னர், மணிவண்ணன் விவகாரம் கட்சி உறுப்பினர்களிற்கு பகிரங்கப்படுத்தப்படும். இப்போதைக்கு மணிவண்ணன் விவகாரத்தில் எதையும் பேச முடியாது, என்றார். (ஒ,5)

## வடக்குக்கான ரயில் சேவைகள் நிறுத்தம்

கொழும்பு, ஓக. 17

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணிக்கும் 2 ரயில்கள் இன்று வரை சேவையில் ஈடுபடாது என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

கல்கமுவ ரயில் நிலையத்துக்கு அருகில் முன்னெடுக்கப்படும் திருத்தப்பணிகள் காரணமாக நேற்றும் இன்றும் ரயில் சேவைகள் இடம்பெறாது என்று ரயில்வே திணைக்களத்தின் போக்குவரத்து அத்தியட்சகர் காமினி செனவிரத்ன குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, 81 மற்றும் 82 இலக்கங்களை கொண்ட ரயில்கள் சேவையில் ஈடுபடவில்லை என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஒ,5)

# 494 இலங்கையர்கள் நாடு திரும்பினர்

கொழும்பு, ஓக.17

கொரோனா பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் 494 இலங்கையர்கள் நான்கு விமானங்களில் மூலம் நாடுதிரும்பியுள்ளனர்.

அதன்படி, ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து 34 இலங்கையர்களும், டோஹாவிலிருந்து 22 இலங்கையர்களும், ஓமானிலிருந்து 150 இலங்கையர்களும், ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து 288 இலங்கையர்களுமே இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர்.

இவர்கள் அனைவருக்கும் விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. (ரி-2)

### ராஜபக்சக்கள்...

மான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசே தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்கியது என்ற வரலாற்றுப் பதிவை இந்த ஆட்சியில் நாம் ஏற்படுத்துவோம் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தமை தொடர்பில், அவரிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழருக்கான தீர்வு விடயம் தொடர்பில் அவர் தற்போது வழங்கியுள்ள வாக்குறுதி உண்மையெனில் அவர் அதை உடனடியாகச் செயற்படுத்திக்காட்ட வேண்டும்.

அரசியல் தீர்வு சம்பந்தமான விடயங்களில் சிறிலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசுக்கு நாம் ஆதரவு வழங்குவோம். ஆனால், அந்தத் தீர்வு நியாயமான தீர்வாக இருக்க வேண்டும். சகல மக்களும் ஏற்கும் தீர்வாக இருக்க வேண்டும்.

நாட்டைப் பிளவுபடுத்தி தீர்வு தருமாறு தமிழர்கள் கேட்கவில்லை. ஒருமித்த நாட்டுக்குள் நியாயமான தீர்வையே அவர்கள் விரும்புகின்றார்கள், என்றார். (ஒ,5,22)

### மஹிந்த...

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் நேற்றிரவு 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசே தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்கியது என்ற வரலாற்றுப் பதிவை இந்த ஆட்சியில் நாம் ஏற்படுத்துவோம் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தமை தொடர்பில், அவரிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

கடந்த காலங்களில் எந்தவொரு கட்சிக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் நாடாளுமன்றத்தில் நீடிக்கவில்லை. கடந்த ஆட்சியில் அந்தப் பெரும்பான்மைப் பலம் இருந்தபோதிலும்கூட இடையில் ஏற்பட்ட குழப்பத்தால் பெரும்பான்மைப் பலத்தைப் பயன்புடுத்தக்கூடிய சூழல் இருக்கவில்லை.

ஆனால், தற்போது பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் தலைமையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் அவருடைய கட்சி இருக்கின்றது. அவர் நேர்மையாகச் செயற்பட்டு நாட்டினுடைய முன்னேற்றத்துக்கும் நாட்டில் வாழுகின்ற அனைத்து மக்களது முன்னேற்றத்துக்கும் தடையாக இருக்கின்ற தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பார் என்று நாம் நம்புகின்றோம், என்றார்.

இதேவேளை மஹிந்த அரசுடன் சர்வதேச மத்தியஸ்தத்துடனான பேச்சுக்கள் முன்னெடுக்கப்படுமா? என்று கேட்டபோது, இப்போது அதற்குப் பதிலளிக்க விரும்பவில்லை, என்றார் சம்பந்தன். (ஒ,5,22)

### சப்பரத்தை...

சமேதராய் நல்லூர்க் கந்தன் இடப வாகனத்தில் வெளிவீதியுலா வந்து அடியவர்களுக்கு காட்சியளித்தார்.

கொரோனாக் கட்டுப்பாட்டு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சமூக இடைவெளியைப் பேணும் வகையில் நல்லூர் கந்தன் சப்பரத்தில் வீதியுலா வரவில்லை.

நல்லூர் பதியில் அதிகளவான பக்தர்கள் நேற்றும் திரண்டனர். அதனால் சுகாதாரத் துறையின் அறிவுறுத்தலுக்கு அமைய இடப வாகனங்களில் வள்ளி, தெய்வானை சமேதராய் நல்லூரான் வெளிவீதியுலா வந்து காட்சியளித்தார். (ஒ,5)

### நல்லூர்...

பரவல் அபாயம் காரணமாக, சுகாதாரத் துறையின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி ஆலயத் திருவிழாவை நடத்துவதற்கு ஆலய நிர்வாகத்தால் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தேவஸ்தானத்தினரால் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:

தனிமனித இடைவெளியைப் பேணியும், முகக்கவசங்கள் அணிந்தும், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிக் கொள்ளுங்கள்.

எம் பெருமானின் இரதோற்சவ தினத்தன்று அதிகாலை முதல் மதியம் 2 மணி வரை சண்முகப் பெருமானைத் தாராளமாகத் தரிசிக்கலாம்.

எனவே, அடியவர்கள் தயவு செய்து சிறு குழந்தைகளையும், வயதானவர்களையும் கோவிலுக்கு அழைத்து வருவதைத் தவிருங்கள். அவர்கள் வீட்டில் இருந்தவாறே எம் பெருமானைத் தியானத்தில் தரிசனம் செய்யுங்கள்.

ஒரே நேரத்தில் அனைவரும் ஒன்று கூடாமல், வெவ்வேறு நேரங்களில் கோவிலுக்கு வருகை தந்து சண்முகப் பெருமான் ஆனந்தக்கூத்தன் தரிசனங்கண்டு, அவன் குஞ்சிதபாத சேவை கண்டு இக, பர சௌபாக்கியம் அடைவீர்களாக!

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, நல்லூர் ஆலயப் பணியாளர்களுக்கும், தொண்டரகளுக்கும் பூரண ஒத்துழைப்பை வழங்குங்கள். நல்லூர்க் கந்தப் பெருமானுடைய அருள் எல்லோருக்கும் கிடைக்கட்டும், என்றுள்ளது. (ஒ,5)

### சிங்கள...

சிலர் ஏன் இவ்வாறான மனநிலையிலிருந்தார்கள் என்பது வேதனையாக இருக்கின்றது. எமக்கு ஏற்படக்கூடிய நெருக்கடிகளை நாங்கள் புரிந்துகொள்ளாத நிலையிலிருக்கின்றோம். இவ்வாறு வன்னி மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் தெரிவு செய்யப்பட்டுள்ள சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வவுனியா சாளம்பன் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் பின்னடைவைச் சந்தித்துள்ளது. ஆட்சியாளர்கள் அதிகார பலம் மற்றும் பணபலம் என்பவற்றைப் பயன்படுத்தியிருந்தார்கள். அதனை விட எம்மவர்கள் பிரிந்து நின்று இந்தத் தேர்தலை சந்தித்தார்கள்.

அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவை பதவி ஏற்பில் தனிச்சிங்களக் கொடியை பறக்கவிட்டு இந்த நாடு சிங்கள பௌத்தர்களுக்குரியது என்ற செய்தியை சொல்லியிருக்கின்றார்கள். ஆட்சியாளர்களின் செயற்பாடு தமிழ் மக்களை அச்சம் கொள்ள வைத்துள்ளது.

வடகிழக்கில் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழர்களின் அரசியல் விடிவுக்காக இணைந்து பயணிக்கவேண்டும் என்பது எனது விருப்பம். அந்த ஒற்றுமையை நான் எதிர்பார்த்து நிற்கின்றேன்.

தமிழர்களின் அரசியல் தீர்வுதொடர்பில் அரசோடு பேசுவதற்கு நாம் பின்னிற்கவில்லை. தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசமைப்பு மாற்றம் உருவாக்கப்பட்டால் அதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக பிரதமருடனான சந்திப்பில் ஏற்கனவே தெரிவித்திருந்தோம். நாடாளுமன்றம் கூடிய பின்னர் எமது கோரிக்கைகளில் மிகப் பிரதானமான விடயமாக இந்த விடயம் இருக்கும். வடகிழக்கில் எமது மக்கள் தனித்துவமாக இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாக வேண்டும். அது வரைக்கும் நாம் உழைக்க வேண்டும் - என்றார். (ஒ,5,110)

### நாம்...

லேயே பிரதமர் ராஜபக்ச இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் ஒருபோதும் சர்வாதிகாரிகளாக இருந்ததில்லை. தீய நோக்கத்துடனேயே எதிர்க்கட்சியினர் எங்களை சர்வாதிகாரிகள் என்று கூறுகின்றனர்.

அவர்கள் அறிவற்ற வகையில் அவ்வாறு தெரிவிக்கின்றனர். அவர்கள்தான் கடந்த ஆட்சிக் காலத்தில் சர்வாதிகாரப் போக்கில் செயற்பட்டுள்ளனர். பொய்யான குற்றச்சாட்டுகளில் எங்களை சிறைகளுக்குக் கொண்டு சென்றனர்.

போர் வீரர்களையும் சிறைக்குக் கொண்டு சென்றனர். தங்களின் நலனுக்கு ஏற்ற விதத்திலேயே அவர்களின் சட்டங்கள் இருந்தன, என்றார். (ஒ,5,22)

### முன்னாள்...

கள் வீட்டுக்கு வந்த இராணுவத்தினரிடம் கேட்டபோது அதுபற்றி எதுவும் கூற முடியாது எமக்கு மேலிடத்திலிருந்து உத்தரவு வந்துள்ளது என்று கூறியதாக மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அதேநேரம், மக்களின் விவரங்களை புதிப்பிப்பதற்காகவே இவ்வாறு இராணுவத்தினர் தகவல்களை திரட்டி வருவதாகவும் கூறப்படுகிறது. (ஒ,5, 27)

# டோனி



## இந்திய கிரிக்கெட்டின் தவிர்க்க முடியாத ஆளுமை

புதுடெல்லி, ஓக.17

கிரிக்கெட் உலகின் தலைசிறந்த இலக்குக் காப்பாளராகவும், துடுப்பாட்டவீரராகவும், கப்டனாகவும் திகழ்ந்த டோனி, கிரிக்கெட்டில் படைத்த சாதனைகள் ஏராளமானவை.

கிரிக்கெட்ரசிகர்களை ஏறத்தாழ 16 ஆண்டுகள் தன் அசாத்திய திறமை களால் கட்டிப்போட்டவர் இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்டவீரர் டோனி. கிரிக்கெட்டை ரசிக்கும், விளையாடும் பல இளைஞர்களின் ஆதர்ச நாயகனாக வலம் வந்த டோனி, திடீரென நேற்று தமது ஓய்வு அறிவிப்பை வெளியிட்டமை கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு நடைபெற்ற உலக கிண்ண கிரிக்கெட் தொடரின் அரையிறுதி ஆட்டத்துக்கு பிறகு எந்த ஒரு சர்வதேச போட்டியிலும் டோனி பங்கேற்கவில்லை. அப்போதிலிருந்தே டோனியின் ஓய்வு குறித்த ஊகங்கள் கொடிகட்டிப் பறந்தன. ஆனாலும், இந்திய அணிக்காக இன்னும் சில ஆண்டுகள் விளையாடுவார் என்று அவரது ரசிகர்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தனர்.

எது பற்றியும் அலட்டிக்கொள்ளாமல் வலம் வரும் டோனி, ஓய்வு அறிவிப்பை எந்தவொரு முன் அறிவிப்பும் இன்றி மிக சாதாரணமாக அறிவித்துவிட்டார். டோனியின் ஓய்வு அறிவிப்பைத் தொடர்ந்து அவரது சாதனைகள் குறித்த பதிவுகளை, உங்களை கிரிக்கெட் களத்தில் தவற விடுகிறோம் என பல அடுக்கடுக்கான பதிவுகளை கிரிக்கெட் ரசிகர்கள் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகின்றனர். இதனால், சமூக வலைத்தளங்களில் டோனி குறித்த பதிவுகள் நேற்றுமுன்தினம் இரவு முதல் தற்போது வரை பெருமளவில் ஆக்கிரமித்துள்ளன.

**எளிதில் அசைக்க முடியாத டோனியின் 5 சாதனைகள்**

கிரிக்கெட் உலகின் தலைசிறந்த இலக்குக் காப்பாளராகவும், துடுப்பாட்ட வீரரா கவும், கப்டனாகவும் திகழ்ந்த டோனி, கிரிக்கெட்டில் படைத்த சாதனைகள் ஏராளம். சாதனைகள் எப்போதும் முறி யடிக்கக்கூடியவைஎன்றாலும், சிலசாதனைகள் எளிதில் நெருங்க முடியாத அளவுக்கு நீண்ட காலச் சாதனைகளாக அமைந்து விடும். அந்தவகையில் டோனியின் சாதனைகள் சிலவற்றைப் பார்ப்போமே.

**ஐ.சி.சியின் அனைத்து விதமான கிண்ணங்களையும் வென்ற ஒரே கப்டன்**

இந்திய அணியின் கப்டனாக நியமிக்கப்பட்ட முதல் ஆண்டிலேயே, அதாவது 2007ஆம்ஆண்டுரி20உலகக்கிண்ண தொடரை இந்தியாவுக்கு டோனி பெற்றுத் தந்தார். அதன்பின்னர் 4 ஆண்டுகள் கழித்து 2011 ஆம் ஆண்டில் ஒருநாள் உலககிண்ணத் தொடரில் இந்தியா சம்பியன் பட்டம் வென்றது. 28 ஆண்டுகளுக்கு பின்னர் இந்திய அணி உலக கிண்ணத்தை உச்சிமுகர்ந்ததுக்கு டோனியின் சிறப்பான தலைமைத்துவ திறமையும் ஒரு காரணமாகும். 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற மினி உலக கிண்ணத் தொடரிலும் டோனி தலைமையிலான இந்திய அணி கிண்ணத்தை வென்று அசத்தியது.

**கப்டனாக அதிக போட்டிகள்**

200 ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள், 60 டெஸ்ட் போட்டிகள் , 72 ரி20 போட்டிகள் என மொத்தம் 332 சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் டோனி கப்டனாக இருந்துள்ளார். இவருக்கு அடுத்தபடியாக ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் ஜாம்பவான் வீரர் ரிக்கி பாண்டிங் 324 சர்வதேச போட்டிகளுக்கு கப்டனாக இருந்துள்ளார்.

**இறுதிப்போட்டிகளில் அதிக வெற்றியை - ருசித்த கப்டன் (ஒருநாள் கிரிக்கெட்)**

பல நாட்டு அணிகள் பங்கேற்ற 6 தொடர்களின் இறுதி போட்டியில் டோனி இந்திய அணிக்கு கப்டனாக பொறுப்பு வகித்துள்ளார். அவற்றில் இந்தியா 4 தொடர்களில் வெற்றியை ருசித்தது. டோனி கப்டனாக 110 ஒருநாள் போட்டிகளில் இந்தியஅணிக்குவெற்றியைத் தேடி தந்துள்ளார். இந்தப் பட்டியலில் முதலிடத்தில் ரிக்கி பாண்டிங்உள்ளார். ரிக்கி பாண்டிங் கப்டனாக165 ஒருநாள் போட்டிகளில் வெற்றியைப் பெற்றுள்ளார்.

**அதிக ஆட்டமிழப் பற்ற இன்னிங்ஸ்**

டோனி 84 ஒருநாள் போட்டிகளில் கடைசிவரை ஆட்டமிழக்காமல்திகழ்ந்துள்ளார். தென் ஆப்பிரிக்க ஓல்ரவுண்டர் ஷான் பொல்லாக்கிக்கு (72 ஆட்டமிழப்பு) அடுத்த இடத்தில் உள்ளார். டோனி ஆட்டமிழக்காமல் இருந்த 84 ஒருநாள் போட்டிகளில் 51 ஆட்டங்கள் இரண்டாவது துடுப்பாட்டம் செய்த போது அதாவது விரட்டல் செய்த போது இருந்த இன்னிங்ஸ்கள் ஆகும். டோனி இவற்றில் 47 ஆட்டங்களில் இந்தியாவுக்கு வெற்றியைத் தேடித் தந்துள்ளார். வெறும் 2 போட்டிகளில் மட்டுமே அணி தோல்வி பெற்றுள்ளது. ஒரு ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

**சர்வதேச போட்டிகளில் அதிக ஸ்ரெம்பிங்**

டோனி மின்னல் வேகத்தில் ஸ்ரெம்பிங் செய்வதில் வல்லவர். இலக்குக் காப்பில் தனிப்பாதையை உருவாக்கியவர்என்றே சொல்லலாம். பல போட்டிகளில் டோனி மின்னல் வேகத்தில் செய்த “ஸ்ரெம்பிங்குகள்”, ரன் அவுட்கள் ஆட்டத்தின் போக்கை மாற்றி இந்தியாவுக்கு சாதகமாகமாறியிருக்கிறது. சர்வதேசகிரிக்கெட் போட்டிகளில் அதிக ஸ்ரெம்பிங்குகள் செய்த சாதனைக்கும் சொந்தக்காரர் டோனியே. 350 போட்டிகளில் 123 ஸ்ரெம்பிங்குகளை டோனி செய்துள்ளார். சர்வதேச போட்டிகளில் 100 க்கும் மேற்பட்ட ஸ்ரெம்பிங்குகளை செய்த ஒரே இலக்குகாப்பாளர் டோனிமட்டுமே. இலக்குக் காப்பில் அதிக இலக்குகளை எடுத்த வீரர்கள் பட்டியலில் பவுச்சர், கில்கிரிஸ்ட் ஆகியோருக்கு அடுத்தபடியாக 3 ஆம் இடத்தில் உள்ளார். (ரி-2)






இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.